# பெண்மைக்கு இணையுண்டோ



கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி. J.P.

2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பெண்மைக்கு இணையுண்டோ

நூலாசிரியர்:

சிவத்தமிழ்ச்செல்வி

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P. அவர்கள்

வெளியீடு:

சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை, துர்க்காதுரந்தரி

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.

அவர்களின்

பிறந்த நாள் அறநிதியம்

ஜனவரி - 7

★

★★

விக்கிரம ஹூ மார்கழி மீ

07-01-2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மைக்கு இணையுண்டோ
# PENMAIKKU INNAIUNDOO

முதற்பதிப்பு : ஜனவரி 2001

நூலாசிரியர் : சிவத்தமிழ்ச்செல்வி
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**

பிரதிகள் : 500

வெளியீடு : சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை, துர்க்காதுரந்தரி
**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி,** ஜே. பி.
அவர்களின் பிறந்தநாள் அறநிதியம்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை,

Published hy: SIVATHAMIL SELVI, PANDITHAI.
**DR THANGAMMAH APPACUDDY J. P.**
BIRTHDAY TRUST FUND COMMITTEE
Sri Durga Devi Devasthanam,
Tellippallai. Sri Lanka.

விலை : ரூபா 100/-

அச்சுப்பதிவு : திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Printers : Thirumakal Press, Chunnakam, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அணிந்துரை

எழுபத்தேழாவது அகவையினை அடையும் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள், தன்னுடைய பிறந்த நாள் பரிசாகத் தமிழ் உலகுக்குப் பெண்மைக்கிணையுண்டோ என்னும் நூலினை வழங்குகின்றார். சங்க இலக்கியங்கள் தொடக்கம் பாரதி பாடல்கள், பிற்காலப் பெண்கள் பற்றிய வரலாறுகள் வரையுள்ள காலப் பகுதியிலே தமிழ் இலக்கியங்கள் சித்திரித்துக் காட்டும் மாட்சிமை மிக்க பெண்களைச் சிவத்தமிழ்ச் செல்வி கூர்ந்து நோக்குகின்றார்.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' என்று வியக்கும் வகையிலே பெருவாழ்வு வாழும் சிவத்தமிழ்ச்செல்வி ''பெண்மைக்கிணையுண்டோ'' என்று எழுதுவது பொருத்தமாயுள்ளது. ஒன்பது கட்டுரைகள் கொண்ட இந்நூலிலே முதலாவது கட்டுரை சங்க இலக்கியங்கள் காட்டும் பெண்மை பற்றிக் கூறுகின்றது. புலமைச் சிறப்புப் பெற்ற காக்கைபாடினியார் நச்செளளையார், பெருங்கோப்பெண்டு, பொன்முடியார், வெண்ணிக்குயத்தியார் ஆகியோருடைய பாடல்களை எடுத்துக் காட்டி அவர்களுடைய சிறப்புத் தன்மையினை வெளிக்கொணர்கிறார். அகத்திணை பற்றிய சங்கப் பாடல்களூடாகப் பெண்ணின் திறன்கள் வெளிப்படுமாற்றினைக் குறுந்தொகை, கலித்தொகை, அகநானூறு ஆகியவற்றிலிருந்து செய்யுட் சான்று காட்டி விளக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனத்தை உலகுக்குள்ளே கொண்டு சென்றவர் வள்ளுவர். உலகிலுள்ள பல மொழி களிலே பெயர்க்கப்பட்ட நூல் வள்ளுவருடைய திருக்குறள். இந்நூலிலே பெண்ணுக்கு இலக்கணம் வகுப்பதோடு, பெண்மையை வியந்து பாடுகிறார் வள்ளுவர். இந்நூலிலிருந்து பெண்மையின் பல உச்சமான இடங்களைச் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் தொட்டுக்காட்டிச் செல்கிறார்.

பெண்ணின் சிறப்பினை எடுத்துக் கூறுவதை முன்றிலொரு இலக்காகக் கொண்டு இயற்றப்பட் டது சிலப்பதிகாரம். வடமொழிக் காவியங்களெல் லாம் தலைமகனையே முதலில் அறிமுகஞ் செய் கின்றன. ஆனால் இளங்கோவினுடைய சிலப்பதி காரமோ 'மாதரார் தொழுதேத்தும் கண்ணகியை' முதலிலே அறிமுகஞ்செய்கிறது. இக்கண்ணகியினு டைய சிறப்பான குணங்களை — பெண்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் அவள் பண்புகளை இந்நூலிலே சிவத்தமிழ்ச் செல்வி அம்மா நன்கு விளக்கி எழுதி யுள்ளார். கண்ணகியுடன், கோப்பெருந்தேவி, மாதரி, மாதவி என்னும் பெண்களும் இக்கட்டுரை யிலே பேசப்படுகின்றனர்.

''சேக்கிழார் காட்டிய பெண்மை'' என்னும் கட்டுரை இந்நூலிலே விதந்து பேசப்பட வேண்டிய தொன்றாகும். சேக்கிழாருடைய பெரிய புராணம் அக்காலத்துச் சைவத்தமிழ்ப் பெண்கள் சமய வளர்ச்சியிலும், குடும்ப நலன் பேணுவதிலும் கணவனைத் தெய்வமாக மதித்தலிலும், விருந் தோம்பும் பண்பிலும் எந்த அளவுக்கு முன்னின் றார்கள் என்பதைக் காட்டுவதாக விளக்கம் தரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார், திருநீலகண்டர், இயற்பகை, இளையான்குடி மாறநாயனார், அப்பூதியடிகள், சிறுத்தொண்டர் ஆகியோருடைய மனைவிமார், பரவையார், சங்கிலியார் ஆகிய பெண்களின் நலன்கள் இக்கட்டுரையிலே விளக்கிக் கூறப்படுகின்றன. திலகவதியாரைத் திண்மையுடைய பெண்ணாகவும், மங்கையர்க்கரசியாரை உறுதியான பணிசெய்யும் ஞானமுடைய, உறுதியுடைய பெண்ணாகவும் சேக்கிழார் படைத்திருப்பதை எல்லோரும் இனிதே விளங்கிப் படித்து இன்புறும்படியாக அம்மா எழுதியிருப்பதைக் காணலாம்.

கச்சியப்பருடைய கந்த புராணத்துப் பெண்மை பற்றிக் கூறும் போது,

> ''கச்சியப்ப சிவாச்சாரியார் பிற்காலச் சோழர் காலத்தில் வாழ்ந்தவராகையால் அக்காலப் பெண்மையின் சிறப்புக்களையும் அவர்களின் கற்பு மேம்பாட்டையும் ஒழுக்க நெறிகளையும் நன்கு அறிந்தவர் என்பது கண்கூடு. இவற்றையெல்லாம் விண்ணுலக நிலையில் வைத்துக் காட்டுவது குறிப்பிடத் தக்கதாகும்.''

என்று சிவத்தமிழ்ச் செல்வி கூறுவது நயத்தற்குரிய இடமாகும்.

> ''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்
> வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

என்னும் குறளுக்கு ஏற்ற சிறந்த விளக்கமாகவும் அமைகின்றது. மண்ணில் சிறந்த குணங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடைய பெண்கள்தான் விண்ணுக்குச் செல்வர். எனவே மண்ணில் நல்ல பெண்களின் நிலைகளை நாம் பார்க்கும் போது விண்ணுலக பெண்களின் குணங்களை நாம் இலகுவிலே விளங்கிக்கொள்ள முடியும் என்னும் அருமையான கருத்துப் புலப்படுத்தப்படுகின்றது. ரதி, உமையம்மை, கார்த்திகைப் பெண்கள், தெய்வயானை, வள்ளி ஆகிய கந்த புராணப் பெண்களின் குணநலன்கள் இக்கட்டுரையிலே விளக்கம் பெறுகின்றன.

தாய்க்கு இலக்கணமாகக் கோசலையையும் சுமித்திரையையும், மனைவிக்கு இலக்கணமாகச் சீதையையும் மண்டோதரியையும், நட்புக்கு இலக்கணமாகத் திரிசடையையும் கம்பன் படைத்துள்ளமையை அம்மையார் தன்னுடைய ஆறாவது கட்டுரையிலே விளக்குகின்றார். அரசாட்சி செய்யும் ஒரு பெண்ணை எங்களுக்கு முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர் பரஞ்சோதி முனிவர். அங்கயற்கண்ணி மீனாட்சியின் ஆட்சி பற்றியும் அவளுடைய சிறப்புக்கள் பற்றியும் ''பரஞ்சோதி முனிவர் காட்டும் பெண்மை'' என்னும் கட்டுரையிலே எடுத்துக் கூறப்படுகின்றன.

நூலின் நிறைவுக் கட்டுரையாக அமைவது பிற்காலப் பெண்மை பற்றியதாகும். இந்தக் காலத்துப் பெண்மையின் குணங்களைப் பாரதியின் பாடல்களிலிருந்தும் பிற்காலப் பெண்மை நல்லார் பற்றியதாயும் எடுத்து இக்கட்டுரைகளிலே சிவத்தமிழ்ச் செல்வி விளக்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் நாட்டிலும் பிற நாடுகளிலும் பெருமை பெற்ற உயர் தகைமை பெற்ற ஒரு பெண்ணாக விளங்குபவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். அவரே 'பெண்மைக்கு இணையுண்டோ' என்னும் வினாவுக்கு விடையாக அமைபவர். அவர் தான் தரிசித்த இலக்கியப் பெண்களை இலகுவான அழகான செந்தமிழ் எழுத்துகளூடாக எம்மையும் தரிசிக்கும்படி செய்கிறார். அவருடைய இலக்கியப் புலமையும் கட்டுரைத் திறனும் இந்நூலூடாகப் புலப்படுத்தப்படுகின்றன. மாணவர்கள் படித்துப் பயன்பெறக்கூடிய இந்நூலினை எழுதிய அம்மையாரை வணங்கி வாழ்த்துகிறேன்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
பீடாதிபதி, உயர்பட்ட ஆய்வுப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வாழ்த்துரை

வலிமை சேர்ப்பது தாய்முலைப்பாலடா
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்களறமடா
கைகள் கோத்துக் களித்து நின்றாடுவோம்.

என்ற மகாகவி பாரதியாரின் பாவரிகள் அற்புதமானவை. மனையறத்தின் வேராக விளங்கும் பெண்ணின் பேராற்றலை தமிழர் தம் பெருமை கூறும் இலக்கியங்கள் யாவும் இயம்பின. கருணை, பரிவு, நேசம், அரவணைப்பு, வீரம், அறிவு அத்தனையுமுடையவள் பெண் என்பதனை பழந்தமிழ் நூல்கள் முதல் பாரதியாரின் படைப்புக்கள் வரை பறை சாற்றுகின்றன. ஆழ்ந்து அகன்ற நுண்ணறிவாளராக விளங்கும் எங்கள் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களின் அற்புதப் படைப்பாக வெளிவரும் ''பெண்மைக்கிணையுண்டோ'' என்ற இந்த இலக்கிய நூல் மிகவும் காத்திரமானது. பன்னூல் பாண்டித்திரியமுடைய அம்மையாரின் சிந்தனையில் எழுந்த அறக் கருத்துக்களை இக் கட்டுரைகளில் உணர முடிகிறது. பழந்தமிழ் இலக்கியங்களின் ரசனைகளைப் படித்து உணரக் கூடிய தமிழ் அறிவு வற்றிப் போகின்ற நிலையில் இன்றைய காலச் சந்ததிக்கும் விளங்கக் கூடிய வகையில் சங்க இலக்கியப் பாடல்கள் முதல் தமிழ்ப் புராணங்கள் வரை இந்நூலில் எடுத்துரைத்துள்ளார், அழகு தமிழில் எழுந்துள்ள கட்டுரைகளில் முதலில் சங்க காலப் பெண்மை சித்திரிக்கப்படுகிறது. அரியாசனத்தில் அரசரோடு சரியாசனம் அமர்ந்து புலமையால் பெருமை கொண்ட பெண்பாற் புலவர்கள் பெருமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஔவையாரின் சிறப்பியல்பை விளக்கி ஆரம்பித்த கட்டுரை காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற புலவரின் புலமையை விளக்குவதோடு வீரமிக்க பத்தினிப் பெண்டிரின் வாழ்வினை எடுத்துரைத்துள்ளது. குறுந்தொகை என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் தற்கொண்டான் பேணுகின்ற தகை சார்ந்த பெண்ணின் பெருந்தன்மையை விளக்குகின்ற ரசனை மிக்க பாடலை எடுத்துரைத்து, புதுக் குடித்தனம் வாழும் தம்பதிகளின் இணைப்பினைச் சுவையாக விளக்கியுள்ளார். கடமையுணர்வை வெளிக்காட்டும் பெண்மையினைக் கலித்தொகைப் பாடற் காட்சி மூலம் எடுத்துரைத்துள்ளார். கற்புடை மாதரை காதலின் சிறப்பினை கலித்தொகை மூலமும், புறநானூறு, அகநானூறு போன்ற அருந்தமிழ் நூல்களிலிருந்து எளிய தமிழில் அம்மையார் எடுத்துரைத்துள்ளார். இந்நூலின் காத்திரத்தை முதலாவது கட்டுரையை வாசித்தவுடனேயே உணரத்தக்க வகையில் அரியன பலவற்றை சுருக்கமாக தெளிவாகக் தந்துள்ளமை அம்மாவின் நீண்ட இலக்கிய அனுபவ வெளிப்பாடாகவுள்ளது. இரண்டாவது கட்டுரையில் அறநூல் தந்த வள்ளுவப் பெருந்தகையின் பேராற்றலை விளக்குவதோடு வாழ்க்கைத் துணை நலம் எனப் போற்றப்படும் பெண்ணின் சிறப்பும் விளக்கப்பட்டுள்ளது. அறத்துப் பால் முதல் காமத்துப் பால் வரை வள்ளுவர் காட்டிய பெண்மைக் கருத்தோடு கூடிய கட்டுரையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இல்லாளுக்குரிய இனிய கடமைகளை குசேலரின் மனைவி சுசீலையின் வாழ்வை உதாரணம் காட்டி உருக்கமாக எடுத்துரைத்துள்ளார். பெண்மைக்கு இருக்க வேண்டிய உத்தமப் பண்புகளை வள்ளுவர் குறளின் மூலம் தெளிவுபடுத்துகின்ற விடையமாக இரண்டாவது கட்டுரை அமைந்துள்ளது.

மூன்றாவது கட்டுரையில் இளங்கோவடிகள் காட்டும் பெண்மை சித்திரிக்கப்பட்டுள்ளது. இக் கட்டுரையின் முகவுரையிலேயே அம்மா அவர்கள் குறிப்பிடும் அறிமுகம் சிறப்பானது. இலக்கியங்கள் எழுந்த காலத்துக்கு மட்டும் உரித்துடையனவல்ல நிகழ் காலத்தைக் கொண்டு வருங்காலத்தையும் நோக்கிச் சுவையூட்டத்தக்க வகையில் படைக்கப்பட்டவையே சிறந்த இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கவை. சிலப்பதிகாரம் ஏக காலத்துக்கும் கருத்துரைப்பது என்பதனை எடுத்துரைக்கிறார். கண்ணகியின் இல்லற மாண்பு முதல் மாதவியின் மாண்பு, தேவந்தி என்ற தோழியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பு, கோப்பெருந்தேவியின் உடன் கட்டை ஏறும் உயர் பண்பு, நொந்து வந்தவர்க்கு அறுசுவை உணவூட்டி ஆதரிக்கும் மாதரி என்ற இடைச்சிப் பெண்முதல் மாதவி என்னும் நல்லாள் வரை அக்கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார். கண்ணகியின் மென்மைத் தன்மையைக் கூற வந்த அம்மையார் பாண்டியன் அவையில் நீதி கேட்ட கண்ணகியின் உணர்வை வீர வார்த்தைகளால் உள்ளம் நெகிழ எடுத்துரைப்பது அபாரமாக அமைந்துள்ளது.

நான்காவது கட்டுரை அன்னையவர்களுக்கு மிகமிகப் பரிச்சயமான பெரிய புராணத்தில் பேசப்பட்ட பெண்மையை வெளிப்படுத்தும் கட்டுரை. சேக்கிழார் பெருமானின் பக்திக் காவியமான பெரிய புராணத்தை ஐயம் திரிபறக்கற்றுப் பல சிந்தனைகளை உரைகள் வாயிலாகவும், பல நூறு கட்டுரைகள் வாயிலாகவும் தந்த அன்னையவர்கள் இக் கட்டுரையில் சைவத் தமிழ்ப் பெண்களின் பாரம்பரிய மரபுகளைப் பக்திச் சுவையோடு எடுத்துரைத்துள்ளார். பெண்கள் தெய்வங்களாகப் போற்றப்படுகின்ற சிறப்பினைப் பல்வேறு உதாரணங்களோடு இக்கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பக்தி இலக்கியப் பாதையைத் திறந்த காரைக்கால் அம்மையாரின் வாழ்வைத் தெளிவாக எடுத்துரைத்து, அம்மையார் ஆண்டவனிடம் கேட்ட வரங்களை விளக்கும் சேக்கிழார் பாடலை சிந்திக்க வைக்கிறார். தூண்டு தவ விளக்கனையர் எனச் சேக்கிழாரால் சிறப்பிக்கப்படும் திலகவதியாரை, மங்கையர்க்குத் தனியரசி எனச் சிறப்பிக்கப்படும் மங்கையர்க்கரசியாரை எம்மைத் தீண்டுவீராயின் திருநீல கண்டம் என்று சபதமிட்ட திருநீல கண்டரின் மனைவியை, திருவினும் பெரியாள் என்று போற்றப்பட்ட இயற்பகை நாயனாரின் மனைவியை அவலம் சூழ்ந்த நிலையிலும் அடியார்க்கு உணவளிக்க முனைந்த அப்பூதியடிகள் மனையாளை, அடியார்க்கு அமுது கொடுக்க அருமைந்தனையே அர்ப்பணித்த திருவெண்காட்டு நங்கையின் பக்தியினைப் பரவையார் சங்கிலியாரின் மனத் திண்மையை, தீதகன்று உலகம் உய்ய உதித்த சுந்தரரைத் தந்த இசைஞானியாரை சேக்கிழார் காட்டும் பெண்மைக்கு இலக்கணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மங்கை நல்லாரின் வாழ்க்கைச் சிறப்பும் திருத்தொண்டர் மேன்மையும் எடுத்துரைக்கும் இக் கட்டுரையில் சேக்கிழாரின் பாடல்களில் கூறப்படும் உவமை நயமும் எடுத்துரைக்கப்படுவது குறப்பிடத்தக்கது. ஐந்தாவது கட்டுரையில் கச்சியப்பர் காட்டிய பெண்மை எடுத்துரைக்கப்படுகிறது. கந்த புராணத்தின் மேன்மையை விளக்கியதுடன் ''கந்த புராணம் ஞான காவியம்'' என அம்மையார் விளக்கியுள்ளார். கந்த புராண நூற் பயனை விரித்துரைத்து ஆரம்பித்த இக்கட்டுரை மன்மதனின் மனைவியாகிய ரதியின் பெண்மைச் சிறப்பை எடுத்து விளக்கம் செய்து தொடர்கிறது. கணவனை இழந்து தவிக்கின்ற ரதியின் புலம்பல் ஊடாக அவரின் மாண்பு கட்டுரையில் நிரூபிக்கப்படுகிறது. பார்வதியின் தவச் சிறப்பும், உறுதிப்பாடும் நன்கு இக்கட்டுரையூடாக விளக்கப்பட்டுள்ளது. கார்த்திகைப் பெண்களின் மேன்மையும் சூரபத்மனின் மனைவி பதுமகோமளையின் பண்பும், தெய்வயானையின் சிறப்பும், வள்ளியின் புனித நம்பிக்கை என்பவற்றைப் பல்வேறு உதாரணங்களோடு இக்கட்டுரையில் எடுத்துரைத்துள்ளார். தமிழர் வாழ்விலிருந்த களவு மணம், கற்பு மணம் என்ற இரண்டினையும் கச்சியப்ப சிவாச்சாரியாரின் காவியப் படைப்பில் விளக்கம் கூறி வள்ளிதிருமணப் பகுதியை விளக்கியிருக்கும் இடம் மிகவும் சிறப்பாகவுள்ளது.

ஆறாவது கட்டுரையில் சொல்லுக்குள் வாக்கியத்தைச் சுருக்கி வைத்த புலவராகிய கம்பரின் காப்பியம் போற்றும் பெண்களின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. கம்பரின் கவித்துவமும் கம்பரைப் போற்றிய சடையப்ப வள்ளலின் சால்பும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. பெண்மையாற்றலை எடுத்துரைக்கும் கட்டுரையில் பெண்மைப் பண்புக்கு மாறாக விளங்கும் பெண்களையும் உதாரணங்காட்டி இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது. சீதாப்பிராட்டியின் மகத்தான காவியத்தின் பல இடங்களைச் சுட்டிக்காட்டி விளக்கம் செய்யப்பட்டுள்ளது. தாய்மைப் பண்பின் மேன்மையை கோசலை, சுமித்திரை மூலம் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது. கைகேயி, கூனி, தாடகை, சூர்ப்பனகை போன்றோர்களிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட பெண்மைக்கு மாறான இயல்புகளை மிக அழுத்தமாக எடுத்துரைத்து படிப்பவர்களை சிந்திக்கத் தூண்டும் வகையில் இக் கட்டுரையின் சொல் நடை அமைந்துள்ளது. இராவணனின் மனையாள் மண்டோதரியின் மாண்பினை விளக்குகின்ற இக்கட்டுரையின் நிறைவுப் பகுதியில் இராவணனின் பிரிவால் வருந்தும் மண்டோதரியின் புலம்பலை கம்பரின் பாடல் அடிகளை எடுத்து விரித்துரைத்த தன்மை நெஞ்சை நெகிழவைக்கக் கூடியதாக அமைந்துள்ளது. ஏழாவது கட்டுரையில் திருவிளையாடற் புராணத்தினூடாக பெண்மைச் சிறப்பு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. திருவிளையாடற் புராணத்தின் மூலநூல் விளக்கத்தோடு தொடங்கும் இக் கட்டுரையில் சிதம்பர ஆட்சியையும் மதுரை ஆட்சியையும் நகைச் சுவையாக பாமர மக்கள் பேசும் கிராமிய வாய் மொழி மரபை எடுத்துரைத்துள்ளார். பாண்டி நாட்டில் பெண்மைக்கு முதன்மை கொடுக்கின்ற பாரம்பரியத்தை பரஞ்சோதியாரின் பாடல் அடிகள் மூலம் விளக்கம் கொடுத்து கட்டுரை தொடரப்படுகிறது. அங்கயற் கண்ணியின் பெருமையையும் கூறி சைவ சமயத்தவர்கள் சக்திக்குக் கொடுக்கும் தத்துவச் சிறப்பையும் இக்கட்டுரையூடாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

எட்டாவது கட்டுரையில் நவயுகக் கவிஞன் எனப் போற்றப்படும் பாரதியாரின் கவிதைகளுக்குள் காணப்படும் பெண்மைச் சிறப்பை எடுத்து விளக்கம் செய்கிறார். பாரதியாரின் கவித்துவத்தை அவரது இலட்சிய வாழ்வை கட்டுரையின் ஆரம்பத்தில் விதந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மகாபராசக்தியிடம் பாரதி கேட்கும் வரங்களோடு தொடங்கி பெண் விடுதலைக்காக பாரதி கூறும் முறையீடுகளையும் விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. தமிழ் மொழியைத் தாயாக வர்ணிக்கும் பாரதியின் பாவரிகளின் மேன்மையை அம்மையார் இக்கட்டுரையில் எடுத்துக் கூறும் பாங்கு மிகச் சிறப்பாகவுள்ளது. பாரதி பாடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராசக்தியையும், பெண்விடுதலைக் கீதங்களையும் எடுத்து விளக்கியுள்ள இக் கட்டுரையில் பாரதியின் தத்துவப் பாடல் களில் விபரிக்கப்படும் பெண்மையும் ஞாபகமூட்டப்பட் டுள்ளது.

ஒன்பதாவது கட்டுரையில் பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டில் இவ்வுலகில் வாழ்ந்த பெருமைக்குரிய பெண் மணிகள் பற்றி பல்வேறு ஆதாரங்களுடன் எடுத்துக் கூறி யுள்ளார். தியாக சிந்தனையுள்ள மங்கையரால் இவ்வுலகம் பெற்ற பயன்களை அறிவியல் ரீதியாக ஆராய்ந்து இக்கட் டுரை எழுதப்பட்டுள்ளது. அன்னை திரேசா, புளோரன்ஸ் நைற்றிங் கேர்ள், மேரி கியூரி அம்மையார், மாரியோ போலியோ, கஸ்தூரிபாய், மீராபாய், சாரதா தேவி அம்மையார். இந்திராகாந்தி இராமா பாய், லீலாவதி இராமநாதன் சீமாட்டி, செல்லாச்சி அம்மையார் போன்ற உலகம் போற்றும் மங்கையர்களை இக்கட்டுரையில் விளக் கியுள்ளார். சமூக நீதி பற்றியும், அறியாமையிலிருந்து பெண்மை விடுதலை பெறவேண்டிய மேன்மையையும் இக் கட்டுரையில் பல உதாரணங்களோடு வெளிப்படுத்தியுள் ளார். கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளில் வாழ்ந்த மனித நேயம் மிக்க பெண்களை இக்கட்டுரையில் ஞாபக மூட்டியிருப்பது மிகவும் சாலப் பொருத்தமானதாகும். இக் கட்டுரையில் இன்றைய உலகில் காணப்படும் அசிங்கங்களை மறைமுகமாகச் சுட்டிக் காட்டிப் பெண்கள் புனிதமாக வாழ வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்திருப்பது இக் கட்டுரையின் பிறிதொரு சிறப்யம்சமாகும். அன்னை திரேசா பற்றிக் குறிப்பிடுகின்றபோது சேரிப்புறத்தவரை அரவணைத்து அறிவூட்டிய உதவியை தூயமனித நேயம் துலங்க விளக்கியுள்ளார். தாய்மையென்னும் மேன்மையை இக் கட்டுரையில் சுட்டிக்காட்டுகின்றபோது கருச் சிதைவை எதிர்த்து அன்னை திரேசா குரல்கொடுத்த வரலாற்றை இவ்விடத்தில் உணர்வோடு வெளிப்படுத்தியுள்ளார். 1975ம் ஆண்டில் ஐ. நா. ஸ்தாபனம், மகளிர்தினம் பிரகடனம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படும் அளவிற்குப் பெண்மை யின் மதிப்பை இவ்வுலகம் பேணத் தவறியமையைக் கட்டு ரையின் நிறைவில் குறிப்பிடும் பாங்கு சிந்திக்கத் தூண்டு கிறது. புகழ் பூத்த அரசியல் வாதியாகிய இந்திராகாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் ஆளுமையை பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து குறிப்பிட்டுள்ளார். நிறைவுக் கட்டுரையாக அமைந்துள்ள இக் கட்டுரை இன்றைய யதார்த்த உலகை சிந்திக்கத் தூண்டும் கட்டுரையாக அமைந்துள்ளது. இக் கட்டுரையில் சமயம், அரசியல், மருத்துவம், சமுதாய விழிப்புணர்வு என்பவற்றில் அயராப் பணி செய்த அன்னையர்கள் வாழ்வு, சாதித்த சாதனை மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

''மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும்'' என்பது கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் கருத்து. இத்தகைய மாதவப் பிறவிகளின் நிலையினை மேற் குறித்த கட்டுரைகளின் வாயிலாக சிவத் தமிழ்ச் செல்வி அம்மையார் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். ''பெண்மைக்கிணையுண்டோ'' என்ற இக் கட்டுரைத் தொகுதி அரிய நூலாகத் தமிழுலகம் போற்றும் என்பதில் ஐயமில்லை. அம்மையார் அவர்கள் ஐம்பதுகளில், அறுபதுகளில் பல இலக்கிய உரைகளை இலங்கை வானொலியில் தொடராக ஆற்றிப் பெருமை பெற்றவர். உலகம் போற்றும் சைவத் தமிழ் பேரறிஞராகிய அம்மையாரது பேச்சு ஒலி நாடாக்கள், அவரது கட்டுரைகள் அடங்கிய நூல்கள் போன்றவற்றைப் பேணிக்காக்க வேண்டும் என்பது அறிஞர்களின் இன்றைய பேரவா - அவ்வகையில் அம்மையாரின் சிந்தனையில் உருவான கருத்துக்களை வெளிப்படுத்தும் இந்நூல் எமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். அம்மையாரின் பிறந்தநாள் அறநிதியச் சபை இவ் ஆண்டு இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறது. இந்நூல் மாணவர்களுக்கும், இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சமூக ஆய்வாளர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அம்மையாரின் அருந்தமிழ் நூலுக்கு வாழ்த்துரை எழுதுகின்ற பேற்றினைப் பெரும் பேறாகக் கருதி இந்நூலை உருவாக்கிய அன்னைக்கு நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

செஞ்சொற்செல்வர்

**ஆறு. திருமுருகன்,**

(B. A, Dip-in-Ed).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எனதுரை

எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருள் துணைகொண்டு 'பெண்மைக்கு இணையுண்டோ' என்ற இந்த நூல் வெளிவருகிறது. ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு வெளிவர வேண்டிய நூல் இது. நான் கொழும்பிலே கல்வி கற்பித்த காலத்திலே இலங்கை வானொலியில் மேற்படி தலையங்கத்தில் மாதம் ஒரு பேச்சாக பன்னிரண்டு பேச்சுக்கள் பேசியுள்ளேன். அக்காலத்தில் மாதர் பகுதி என்ற பிரிவில் இந்த ஒலிபரப்பு நடைபெற்றது. அதன்பின்பு யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வந்த நேரத்திலும் இடையிடையே கொழும்புக்குச் சென்று வானொலியில் பங்குபற்றி வந்துள்ளேன். ஆனால் கடந்த இருபது ஆண்டுகளுக்குள் பலவித மாறுதல்கள் எமது மண்ணில் ஏற்பட்ட காரணத்தினால் வானொலிப் பேச்சுக்களுக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டேன். முன்பு பேசிய பேச்சுக்களின் பிரதிகளை அங்கிருந்து எடுத்து நூலாக்கலாம் என்று சிந்தித்தேன். அவ்வெண்ணம் நிறைவேறாதது குறித்து இன்றும் விசனப்படுகிறேன்.

ஆனால் 'பெண்மைக்கு இணையுண்டோ' என்ற வாசகம் என்றும் என்னுள்ளத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. இதனாலேயே இந்நூலை எழுதக் கூடியதான வல்லமையைப் பெற்றுக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதுக்கேற்ற மறதி இப்பணிக்குச் சிறிது தாக்கத்தையே தந்தது. என்றாலும் மன உறுதிப்பாட்டோடு ஒரு முறை நினைப்பதை இருமுறை நினைத்து உள்ளத்தைச் சரிசெய்து கொண்டேன். சாதாரணமாக எம்மவர் சொல்லுவார்கள் அறுபதில் ஆட்டம்; எழுபதில் ஏக்கம்; எண்பதில் ஓட்டம் என்று, இவையொன்றும் புதுமையானதில்லை. அனுபவத்திலேயே காணமுடிகின்றது. பொதுவாக எழுத்துப்பணி, பேச்சுப்பணி ஆகியவற்றுக்கு சவால் விடுவது மறதியாகும். இந்த மறதியை மிகச் சிரமப்பட்டு மாற்றிய விடயங்களை ஒழுங்குக்குக் கொண்டுவர வேண்டிய நிலையில் என்னைத் தயார் செய்து கொண்டேன். ஒரு புலவரின் பெயரை மறந்தால் அதனைக் கேட்டு அறிய எவரும் இலர். நான் மறந்துவிட்டேன் என்றுதான் பதில் வரும். அல்லது நான் இவற்றைப் படிக்கவில்லை என்ற பதில் வரும். என்ன செய்வது? காலம் சிறிது சுணங்கினாலும் நானே நினைத்துப் பிடிக்க வேண்டிய நிலையில் இருந்தேன். இப்படி எத்தனையோ அனுபவங்கள்; அவை ஒருபுறம் இருக்கட்டும்; பெண்மைக்கு இணையுண்டோ என்ற நாமத்தைக் கொண்ட இந் நூலை எழுதுவதற்கு ஏறக்குறைய ஐம்பது புத்தகங்களை அலசவேண்டிய நிலை ஏற்பட்டது. நூல்கள் அனைத்தும் எங்கள் நூல் நிலையத்திலேயே எடுக்கக் கூடியவையாக இருந்தமை பெரியதொரு வரப்பிரசாதமாகும்.

சங்ககாலப் பெண்மை, வள்ளுவர் காட்டிய பெண்மை, இளங்கோ காட்டிய பெண்மை, சேக்கிழார் காட்டிய பெண்மை, கச்சியப்பர் காட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மை, கம்பர் காட்டிய பெண்மை, பரஞ்சோதி முனிவர் காட்டிய பெண்மை, பாரதி காட்டிய பெண்மை, பிற்காலப் பெண்மை என்ற தலைப்பு களில் ஒவ்வொரு கட்டுரையும் அமைந்துள்ளது. எனது பிறந்த நாளாகிய ும7-01-2001இல் வெளி யிட இருப்பதனால் சுருக்கமாகவும் வேகமாகவும் இந்நூலை எழுதவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்நூல் வெளிவருவதற்கு உதவினோர் களை மறந்துவிட முடியாது. முதலாவது நான் சொல்லச் சொல்ல எழுதி இரு பிரதிகளை என்னு டைய சரிபார்த்தலின் பின் ஒப்படைத்தவர் எமது மகளிர் இல்ல மூத்த மாணவி செல்வி த. தவனேஸ்வரி அவர்கள். இவர் பல்கலைக்கழகப் பட்டதாரி; தமிழ்மொழியைச் சிறப்புப் பாடமாகக் கற்றவர், பிரவேச பண்டித பரீட்சையில் சித்தி பெற்றவர். எதுவித எழுத்துப் பிழையுமின்றி நல்ல அழகான கை எழுத்திலே எழுதவல்லவர். இவரைப் போன்று மற்றொரு சிரேஷ்ட மாணவி செல்வி த. மஞ்சுளா என்பவர். இவர்களின் உதவி மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

அடுத்து எமது அலுவலக உத்தியோகத்தர் திரு. கா. சிவபாலன் அவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும். அச்சுப்பிழைத் திருத்தம், சொற்பிழை, எழுத்துப்பிழைத் திருத்தங்களை நல்லபடி செய்து இந்நூல் உருவாவதற்கு உறுதுணையாக இருந்த வர் இவர். மேலும் உயர்திரு சோ. பரமசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இணுவில்) அவர்களின் தன்னலங்கருதாப்பணி என்றென்றும் நன்றிக்குரியது. தனது பொன்னான நேரத்தை ஒதுக்கி திருமகள் அழுத்தகத்திற்கு வருகை தந்து பிரதிகளை ஒப்பு நோக்கிச் சீர்செய்தவர் இவர். எனவே இப்பெரியார் அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக. மேலும் இந்நூலுக்குச் சிறப்பான அணிந்துரை ஒன்றைத் தந்து நூலின் மதிப்பை உயர்த்திய பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்களை என்றென்றும் எனது வளர்ச்சியில் உயர்ந்த பங்காளராக நினைந்து போற்றுகிறேன் அத்துடன் புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்களின் தூய உள்ளத்திருந்து உதிர்ந்த கவிதைகள் மேலும் மேலும் என்னை வாழ்விக்கும் தகமையன. எங்கள் நிர்வாக சபை உறுப்பினர் செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகனின் வாழ்த்துரை என்னைப் புழகாங்கிதம் அடையச் செய்தது. இவையனைத்துக்கும் எனது உளங்கனிந்த நன்றியைக் கூறி வாழ்த்துகிறேன். மேலும் பெண்மைக்கு இணையுண்டோ என்ற நூலின் மூலப் பிரதியை அச்சுப் பிரதியுடன் ஒப்பு நோக்கும்போது உதவிய சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் நூலை நல்லபடி அச்சிட்டு உருவாக்கிய சுன்னாகம் திருமகள் அச்சக முகாமையாளர், மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும், நூலுக்கான முகப்பு அட்டையை கொழும்பில் வர்ணப் படத்துடன் அச்சிட்டுக் கொண்டு வந்து உதவிய திரு. வி. கமலநாதன் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியைக் கூறி அமைகின்றேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களின்

"பெண்மைக்கு இணையுண்டோ"

எனும் நூலுக்கு

புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள்

வழங்கிய

# சிறப்புப் பாயிரம்

மன்று பெரும் தமிழ்த் தொண்டும் வளர் சைவத்
திருத் தொண்டும் மகிழ்ந்தே ஆற்றும்
புண்ணியத்தின் வடிவாய போற்று சிவத்
தமிழ்ச் செல்வி உலகோர் உய்யப்
**பெண்மைக்கு இணையுண்டோ** எனும் நூலைத்
தருகின்றார் சிறப்பு யாவும்
துன்னிடும் இந்நூல் படைத்த அரும் பணியை
உளமார வாழ்த்து வோமே.

பெண்ணினுமே பெருந்தக்க யாவுளவோ
எனக் கேட்ட புலவனாரின்
எண்ணமதை மிகப் போற்றி ஏந்திழையார்
சங்க முதல் இந்நாள் மட்டும்
கண்ணெனவே போற்றியவாம் கொள்கைகளை
ஆராய்ந்தே மலரால் ஆன
நன்மை திகழ் மாலையென நூல் தந்தார்
பல்லாண்டு வாழி வாழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறமே ஆனாலும் துறவறமே
ஆனாலும் இலங்கு மாதர்
நல்லுளமும் தொண்டுகளும் இல்லாமல்
நடப்பதில்லை என்ப தான
வெல்லுமொரு உயர் கருத்தை விளங்கிடும் இந்
நூலினிலே இனிதின் வைத்தார்
தொல்லுல கெல்லாம் போற்றும் சீர்த் தூர்க்கா
துரந்தரியார் வாழி நீடே.

— புலவர் ம. பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை ... ... ... | iii |
| வாழ்த்துரை ... ... | viii |
| எனதுரை ... ... ... | xv |
| சிறப்புப் பாயிரம் ... ... ... | xix |
| சங்ககாலப் பெண்மை ... ... | *1* |
| திருவள்ளுவர் காட்டிய பெண்மை ... | *14* |
| இளங்கோ காட்டும் பெண்மை ... ... | *27* |
| சேக்கிழார் காட்டிய பெண்மை ... ... | *44* |
| கச்சியப்பர் காட்டிய பெண்மை ... | *59* |
| கம்பர் காட்டிய பெண்மை ... ... | *74* |
| பரஞ்சோதி முனிவர் காட்டிய பெண்மை ... | *89* |
| பாரதி காட்டிய பெண்மை ... ... | *105* |
| எமது சிந்தனையில் பிற்காலப் பெண்மை ... | *120* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

# சங்ககாலப் பெண்மை

சங்ககால வரலாறு என்பது தமிழர் தம் செம்மையான வரலாற்றை மையமாகக் கொண்டது. அக்காலத்தில் இல்லற மாண்பு, கொடை, வீரம் ஆகியவற்றின் திண்மையும் போற்றுவதற்குரியன வாக அமைந்தன. இக்காலத்தைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியாவிட்ட ாலும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னும் பின்னுமாக சில நூற்றாண்டுகளை இக்கால எல்லைக்குள் அடக்கலாம். தமிழ் வளர்த்த மூன்று சங்கங்களில் கடைச்சங்கமே இக்கால எல்லைக்குள் பேசப்படுகிறது. பெரும்பாலும் கடைச் சங்க காலத்தையே சங்ககாலம் என்று அறிஞர் பெருமக்கள் வரையறுத்துச் சொல்வர். இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த புலவர்கள், மூவேந்தரின் துணைகொண்டு சங்கத் தமிழை வளர்த்து வந்தனர். இதற்கு இடமாகக் கொண்ட நகரம் மதுரை ஆகும். திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளும் சங்கப் புலவர்களில் ஒருவரா யிருந்து தமிழ் வளர்த்தார் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

கொடையும், வீரமும், காதலும் மிகுதியாகப் பேசப்பட்ட காலமும் இக்காலமேயாகும். சங்க நூல்களில் தமிழரின் தனிப்பண்பாகிய கொடை, வீரம் ஆகியவற்றைப் புறப்பாட்டுக்களிலும் அகத்திணை பற்றிய காதல் சம்பந்தமானவற்றை அகப்பாடல் களிலும் காண முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பன சங்க இலக்கியத்தில் இடம்பெறுவன. சங்ககாலப் பெண்மை என்ற தலைப்பிலே எடுத்துக்காட்டுவதற்கு இந்நூல்களில் அமைந்த பாடல்கள் பெரிதும் துணை போவன ஆகும் முதலாவதாக நோக்கப்புகின், ஔவையாரின் சிறப்பியல்புகளை நோக்கலாம். இவர் அதியமான் நெடுமானஞ்சியிடம் நெல்லிக் கனியைப் பெற்று நெடிது காலம் வாழ்ந்தவர். அதியமானை வாழ்த்திய இடத்தில்,

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத லின்னகத் தடக்கிச்
சாத லீங்க வெமக்கீத் தனையே"

எனப் புறநானூற்றுத் தொண்ணூற்றொன்பதாம் பாடலில் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றார். ஔவையாரின் உறுதியான வாழ்வும் வாக்கும் மற்றொரு பாடலிலும் காணமுடிகின்றது. அதாவது தொண்டைமானிடம் அதியமானுக்காகத் தூது சென்ற இடத்தில் தொண்டைமானின் படைக்கொட்டிலைப் புகழ்ந்தது போலப் பழித்துப் பாடுகிறார். அழகான படைக்கொட்டில், பளிச்சென்று மின்னும் ஆயுதங்கள்; பகை முகத்தைக் காணாமல் இங்கே வாளா கிடக்கின்றன. ஆனால் அதியனின் படைக் கொட்டிலிலோ முறிந்து நொருங்கிய ஆயுதங்கள் திருத்துவதற்காகக் கொல்லனது பணிக்களரியில் இடம்பெற்றுள்ளன என்றும் நயமாகப் பாடியுள்ளார். புறநானூறு தொண்ணூற்றைந்தாம் பாடலில் இக்கருத்தைக் காணமுடிகின்றது. ஔவையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் உயர்ந்த புலமையை நோக்கிச் சேரநாட்டு மன்னன் பொன்னால்செய்தஒரு ஆட்டைஒளவைக்கு அளித்து மனம் மகிழ்ந்தான். அதனைப் பெற்ற ஒளவையாரும் ''சேரா! உன்னாடு பொன்னாடு'' என வாழ்த்திச் சென்றார் என்பது வரலாறாகும்.

இக்காலப் பெண்மையின் புலமைச் சிறப்புக்குக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற மற்றொரு பெண் புலவரின் புலமைத் திறத்தை நோக்கலாம். பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தைப்பாடி ஒன்பது துலாம் பொன்னும், நூறாயிரம் பொற்காசும் பெற்றவர் இவர். விருந்து வரக்கண்டு கரைந்த காக்கைக்குப் பாராட்டுத் தெரிவித்தவர் இவர். போருக்குச் சென்ற ஒரு வீரமகன் மார்பிலே விழுப்புண் ஏந்தி இறந்து கிடந்ததைப் பெற்றதாய் பெரிதுவந்து நின்றதை ''ஈன்ற ஞான்றிலும் பெரிதுவந்தனளே'' என்று பாடி உவகை அடைகிறார் இப் புலவர். சங்ககாலப் பெண்மையில் வீரம் இடம் பெற்ற சிறப்பை இங்கு காணமுடிகின்றது.

பாரி என்னும் வள்ளலின் பெண் மக்கள் இருவரும் தமது தந்தை இறந்தபின்பு புலம்பிப் பாடிய பாடல்கள் உள்ளத்தை உருக்கும் தன்மையன.

''அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் எந்தையும்
உடையோம் எம்குன்றும் பிறர்கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில் எந்தையும்
இல்லேம் எம்குன்றும் பிறர்கொண்டார்''

என்பது தந்தையின் பிரிவைக் குறித்த சோகமான பாடல்கள் ஆகும்.

பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு கற்பின் திண்மையால் உறுதிமிக்க மனைவியாக வாழ்ந்தவர். தனது கணவன் இறந்தபொழுது பிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் துயரம் ஆற்றாது உடன்கட்டை ஏற முனை கின்றார். ஆனால் சான்றோர் பலர் முன்னின்று தடுக்கின்றனர்.

"பல்சான்றீரே பல்சான்றீரே பொல்லாச்சூழ்ச்சிப்
பல்சான்றீரே"

என்று தடுத்தவர்களைச் சாடித் தீயிலே பாய்ந்து உடன்கட்டை ஏறுகின்றாள் இப்பெண்மணி.

மற்றொரு பெண்புலவராகிய பொன்முடியார் என்பவர் பின்வருமாறு பாடுகிறார்.

"ஈன்று புறந்தருத லென்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
யொளிறு வாளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

இப்பாடலிலே தாயினது கடமை, தந்தையின் கடமை வேல்வடித்துக் கொடுக்கும் கொல்லரது கடமை, நாட்டு மன்னரது கடமை, மைந்தனது கடமை ஆகியவை இப்புலவரால் எடுத்துக் காட்டப்படுகிறது.

வெண்ணிக் குயத்தியார் என்ற பெண்புலவர் சோழன் கரிகால் வளவனைப் புகழ்ந்து பாடி, அதே நேரத்தில் புறப்புண் ஏற்பட்டதற்கு நாணி, வடக்கிருந்து உயிர்விடத் துணிந்த செங்குட்டுவ மன்னனை மேலும் புகழ்ந்து, கரிகாலன் முன்னிலையிலேயே "மன்னா! புறப்புண் நாணி வடக்கிருந்தோன் நின்னிலும் நல்லன்" என்று போற்றுவது உண்மையை ஏற்றுக்கொள்வதில் இவர்களுக்கிருந்த திண்மையை உணர வைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நக்கண்ணையார், பேய்மகள் இளவேனி, நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், வெறிபாடிய காமக்கண்ணியார் என்ற நாமத்தைக் கொண்ட பெண்பாற் புலவர்கள் பலர் சங்ககாலத்தில் இடம்பெற்றுள்ளனர்.

குறுந்தொகை என்ற நூலில் கணவனும் மனைவியும் இல்லறத்தை நல்லறமாக நேசித்து நடத்தும் சிறப்பைக் காணலாம். கணவன் உணவு உண்பதற்காக உரிய இடத்தில் வந்தமர்ந்து விட்டான். அவனுக்கு மனைவியாகக் கிடைத்த பெண்மணி அவசர அவசரமாகத் தன் கணவனுக்கு ஊட்டுவதற்கு ஏற்ற உணவைத் தயாரிக்கிறாள். அவசரத்தில் கட்டித் தயிரைப் பிசைந்து கொண்டிருந்த அப்பெண்மணி, கைகளைக் கழுவாமலேயே தான் உடுத்தியிருந்த புத்தாடையை ஒருபக்கம் செருகிக்கொள்கிறாள். மோர்க் குழம்பு அடுப்பிலே தயார்ப்படுத்தப்படுகிறது. அதனைத் துழாவிச் சுவைபடத் தயாரிக்கிறாள். அடுப்பின் வெம்மையால் அம்மாதரசியின் கண்கள் புகையைத் தாங்க முடியாது கண்ணீரை உதிர்க்கின்றன. ஆனால் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு தனது இனியகணவனுக்குச்சாதம்படைத்து குழம்பை ஊற்றுகிறாள். அதனை உண்டு மகிழ்ந்த கணவனும் 'இனிது இனிது' என்று தனது மனைவிக்குப் பாராட்டுத் தெரிவித்து உண்ணுகிறான். அப்பெண்மணியும் மெல்லிய புன்முறுவலோடு தனது மகிழ்ச்சியைக் காட்டுகிறாள். புதுக்குடும்பம் நடத்தும் கணவனும் மனையாளும் இல்லறப் பண்பில் ஓங்கி நிற்கின்ற சிறப்பை இச்சந்தர்ப்பத்தில் காண முடிகின்றது. இதனை —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முழிதயிர் பிசைந்த காந்தள் மென்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கமழ
தான் துழன்றட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே"

என்பது அப்பாடலாகும்.

சங்ககாலப் பெண்மையின் கடமை உணர்வை எடுத்துக் காட்டுவதாக அமைந்த கலித்தொகை ஒன்பதாவது பாடலைக் கவனிப்போம். ஆண்மகன் ஒருவனும் பெண்மகள் ஒருத்தியும் தமக்குள்ளே ஏற்பட்ட காதல் கனிந்து உடன் போக்குக்கு எண்ணிச் சென்று கொண்டிருக்கின்றனர். தலைவனுடன் சென்றதலைவியைச் செவிலித்தாய் தேடிப்போகின்றாள். செவிலி சென்ற வழியிலே அந்தணர்கள் சிலர் வந்துகொண்டிருக்கின்றனர் செவிலித்தாய் அந்தணர்களை நோக்கி, என் மகளும் பிறர் மகன் ஒருவனும் இவ்வழியால் போனதைக் கண்டீர்களா? என்று வினவுகின்றாள். உடனே அந்தணர்கள் நயமாக விடை பகருகின்றார்கள். உடன் போன பெண்மகளின் தாயார் போல இருக்கின்றீர்கள். நீங்கள் தேடிவந்த இருவரையும் நாம் காணாமல் இல்லை. வழியிலேயே அவர்களைக் கண்டு கொண்டுதான் வந்திருக்கிறோம். ஆனால் அந்தணர்களாகிய நாங்கள் உனக்கொரு அறிவுரையைச் சொல்ல விரும்புகின்றோம்.

சந்தனமானது மலையிலேதான் பிறக்கின்றது, ஆனால் தன்னைப் பூசி மகிழ்பவர்களுக்கே அது பயன் கொடுக்கின்றது. முத்துக்களை எடுத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை கடலிலேயே பிறக்கின்றன, ஆனால் அதனை அணிபவர்களுக்குத்தான் அழகைக்கொடுக்கின்றன. இசை என்பது யாழிலே பிறந்து வருகின்றது, ஆனால் அதனை மீட்டி உணர்பவர்களுக்கே அது பயனைத் தருகின்றது. இசை பிறக்கும் இடமாகிய யாழுக்கு எந்தப் பயனும் இல்லை. இதனைச் சிந்திக்கும் போது உனது மகள் உனக்கும் அத்தகையவளே. அதாவது அப்பெண்மணி நுகர்பவராகிய கணவனுக்கே உரியவள், இதுவே கற்பு நெறியுமாம் என்ற கருத்தைப் பின்வரும் பாடல் அழகாக உணர்த்தி நிற்கின்றது. இது கலித்தொகை பாலைக் கலியில் பெருங்கடுங்கோ என்பவரால் பாடப்பட்டது.

''எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச் சுவல் அசைஇ, வேறுஓரா நெஞ்சத்துக்
குறிப்பு ஏவல் செயல்மாலைக், கொளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்; இவ்விடை
என்மகள் ஒருத்தியும் பிறன்மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாம் அறி புணர்ச்சியர்;
அன்னார் இருவரைக் காணிரோ? பெரும!
காணேம் அல்லேம்; கண்டனம், கடத்திடை
ஆணெழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாண் இழை மடவரல் தாயிர் நீர்போறீர்
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என் செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என்செய்யும்?
தேருங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை,
யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம் என்செய்யும்?
சூழுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவாங்கு,

இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்;
அறந்தலை பிரியா ஆறும் மற்று அதுவே''

என்பது அப்பாடலாகும். மற்றொரு இடத்தில் அன்புடை நெஞ்சங்கள் ஒன்றாய்க் கலந்த தன்மையினால் தலைவனும் தலைவியும் தமக்குள் இறும்பூது கொள்கிறார்கள். ஓரிடத்தில் அமர்ந்திருந்து தமது இன்ப நிலையைத் தலைவன் தலைவிக்குக் கூறுகிறான். அதாவது உன்னுடைய தாயும் என்னுடைய தாயும் யார் யாரோ தெரியாது. அதே போன்று என்னுடைய தந்தையும் உன்னுடைய தந்தையும் எவ்வகைத்தொடர்புகொண்டவர்களோ தெரியாது. நானும் நீயும் எப்படி ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம். செம்மண் நிலத்தில் பெய்மழைநீர் அம்மண் நிலத்தின் தன்மையைப் பெறுவதுபோல அன்புள்ள எமது நெஞ்சங்கள் கலந்து மகிழ்ந்திருக்கின்றன என்பது தலைவன் கூற்றாகக் காட்டப்பட்டுள்ளது. இந்தப் பாடலை இங்கே தருவது பொருத்தமானதே.

''யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந் தான் கலந்தனவே''

கலித்தொகையில் அமைந்த மற்றொரு பாடலைக் கவனிப்போம். சங்ககாலப் பெண்மைக்கும் கள்ளங் கபடமற்ற உள்ளத்திற்கும் இது ஒரு எடுத்துக்காட்டாகும். ஒரு சிற்றூர். அங்கே ஒரு கன்னி இருந்தாள். தோழியர் பலருடன் விளையாடும் பொழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞன் ஒருவன் அவளைக் காதலிக்கிறான். ஒரு பக்க உறவாக இல்லாமல் அவளுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று விரும்புகிறான். ஒருநாள் ''தண்ணீர்த் தாகமாக இருக்கிறது'' என்று அப் பெண்ணின் தாயிடம் வந்து இரந்து கேட்கிறான். உடனே தாயானவள் அவனுக்கு நீர் ஊட்டிவாஎன்று மகளை அனுப்புகிறாள். அந்தப் பெண் அவனை அணுகியவுடன், அவளின் முன் கையைப் பற்றி இழுத்துக் குறும்பு செய்த பொழுது, ''அன்னையே இவன் என்ன செய்கிறான்'' என்று அலறியவள், மறுகணம் தனது முடிவை மாற்றி, ''உண்ணு நீர் விக்கினான்'' என்று கூறுகிறாள். ஓடிவந்த அன்னையும் அவனது முதுகைத் தடவிச் சென்றாள். உடனே, தாகமென்று வந்தவன் கடைக்கண்ணால் பார்த்து நகையாடினான் என்ற கருத்தை ''சுடர்த் தொடீஇ கேளாய்'' என்று தொடங்கும் பாடலில் கபிலர் என்னும் பெரும்புலவர் எடுத்துக்காட்டி உள்ளார். அப்பாடலை அப்படியே காண்போம்;

''சுடர்த்தொடீஇ! கேளாய் – தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி, மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, இல்லீரே;
உண்ணு நீர் வேட்டேன், என வந்தாற்கு, அன்னை
'அடர்பொன் சிரகத்தால் வாக்கிச், சுடர் இழாய்!
உண்ணு நீர் ஊட்டிவா என்றாள்; என யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை
வளை முன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்; என்றேனா
அன்னை அலறிப் படர்தரத், தன்னை யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்ணு நீர் விக்கினான்' என்றேன், அன்னையும்
தன்னைப் புறம் பழித்து நீவ மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான் போல் நோக்கி நகைக் கூட்டம்
செய்தான், அக்கள்வன் மகன்"

அகநானூறு பதினாறாம் பாடலில் ஒருதலைமகளின் பெருமைசான்ற கூற்றுக்களைக் காண்போம்; தன் கணவன் பரத்தையரோடு உறவு வைத்துள்ளான் என்பதை அறிந்திருந்ததும் அதற்கொரு சான்றாகத் தெருவில் விளையாடிய தன் மகனை அப்பரத்தை அணைத்துக் கொண்டாள் என்பதும் தான் கண்ட காட்சி என்பதைத் தலைமகனுக்கு நயமாக எடுத்துரைக்கின்றாள் தலைவி. இதனைக் கேட்ட தலைவன், எவரையும் தான் அறியேன் என்று கூறிய பொய்யான வாக்குகளை நினைத்து நாணித் தலை குனிந்தான் என்பது பாடலின் பொருளாகும்.

"யாவரும் விழையும் பொலந் தொடிப் புதல்வனை
தேர் வழங்கு தெருவில் விளையாடக் கண்டு"

காதல் பரத்தையானவள் நாணத்தால் அங்குமிங்கும் பார்த்து விட்டு, "என்னுயிரே வருக" என்று கட்டியணைப்பதைத் தலைமகள் கண்டாள்; ஓடிச் சென்றாள், அஞ்சற்க "நீயும் இவனுக்குத் தாய் தானே" என்று கூறி நின்றாள் என்பதைத் தலைவனுக்கு உணர்த்திய பொழுது, தலைவன் வெட்கத்தினால் நாணித் தலைகுனிந்து நின்றதை, அகநானூற்றிலே, **களிற்று யானை நிரை**-பதினாறாம் பாடலில் காணமுடிகின்றது. இப்பாடலிலே "வானத்து அணங்காக விளங்கும் அருந்ததி போன்ற கற்புடையவள்" என்று தலை மகள் பேசப்படுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், கலித்தொகையில் மற்றொரு பாடலைக் காண்போம். சுற்றத்தார் கூடித் தலைவி விரும்பி ஏற்காத மற்றொருவனுக்கு மணஞ்செய்து வைக்க ஏற்பாடு செய்தனர். இதனைப் பொறுக்காத தலைவி, தான் விரும்பிய காதலனிடம் தோழியைத் தூதனுப்புகிறாள். இப்பொழுது கைவிட்டால், பின்பு எப்படித் தன்னை அடைய முடியும் என்று சொல்லி அனுப்புகிறாள். பாடலின் ஒரு சில அடிகளை இங்கே காணலாம்.

'' வரி மணல் முன்துறைச் சிற்றில் புனைந்த
திரு நுதல் ஆயத்தார் தம்முள் புணர்ந்த
ஒரு மணம் தான்அறியும்; ஆயின், எனைத்தும்
தெரு மரல் கைவிட்டிருக்கோ – அலர்ந்த
விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இரு மணங் கூடுதல் இயல்பன்றே ?''

அதாவது பரந்த உலகையே பரிசாகப் பெற்றாலும் கற்பொழுக்கம் பேணுபவர் ஆயர் மகளிர்; அவர்களுக்கு இரு மணங் கூடுதல் என்பது பொருந்தாது என்று எடுத்து உரைக்கின்றாள், கற்புடை ஆயர் மகளிர் ஒருத்தி, இதிலிருந்து சங்ககாலப் பெண்மையின் உறுதிப்பாடான ஒழுக்கத்தை உணர முடிகிறது.

மேற்காட்டியவற்றால் சங்க இலக்கியங்களில் காட்டப்பட்ட பெண்மையின் பெருமை ஓரளவு உணர முடிகிறது. அதாவது அக்காலப் பெண்மையின் திண்மைக்கும் பேரறிவுக்கும் ஔவையாரின் பாடல்கள் அனைத்தும் பெருஞ்சான்று பகர்வன என்பது புலனாகிறது. மார்பிலே விழுப்புண் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்டு கிடந்த தன்மகனைப் போர்க்களத்திலே தரிசித்து ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்த வீரத் தாய்மாரின் உறுதியும் பாரிமகளிரின் பண்பும் கணவனோடு உடன் கட்டையேறி, வீர சொர்க்கம் பெற்ற மாதரசிகளின் மாண்பும் அறியமுடிகிறது.

மேலும் ஈன்று புறந்தந்த தாயின் கடமையும் சிறப்பாகச் சித்திரிக்கப்படுகிறது. உண்மையை உள்ளபடி வெளிக்காட்டிப் பாடிய பெண் புலவர்களின் சீரிய பண்பும் காணக்கிடக்கிறது.

அகத்திணை தழுவிய நூல்களிலிருந்து இல்லற மாண்பும் செவிலித்தாய் இரங்கலுற்ற பொழுது அந்தணப் பெருமக்கள் அவளைத் தேற்றி, பெண்கள் புகுந்த இடத்துக்கே உரியவர் எனக்கூறித் திருப்பி அனுப்பிய செய்தியும், கலித்தொகையில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம் என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது. அத்துடன் கற்புடை மகளிருக்கு இருமணம் என்பது தவிர்க்கப்பட வேண்டியது என்பதும் பரத்தைமாட்டு உறவு கொண்டு மீளும் தலைவனுக்கு நல்லதொரு அறிவுரை பகரும் தலைவியின் நற் பண்பும் அன்பு நெஞ்சங் கலந்த தலைவனும் தலைவியும் அமைதியாக இருந்து விதியின் விளையாட்டை எண்ணி வியப்பதையும் கண்டு மகிழ முடிகிறது.

எனவே, ஒரு நாட்டின் நாகரிகச் சிறப்பினை விளக்குவனவற்றுள் அந்நாட்டுக்குரிய இலக்கியங்களே தலை சிறந்தனவாகும். நாட்டு மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை நல்லபடி செழித்தோங்கி இருந்தால், அது போழ்து தோன்றும் இலக்கியங்களும் செழித்துச் சிறந்தோங்கி உயர்ந்து வளரும். ஆனால், நாட்டு மக்களின் வாழ்க்கை நலிவுற்றுச் சிதைந்து சீரழிந்து போயிருந்தால், அக்காலத்தில் தோன்றும் இலக்கியங்களும் தரங்குன்றித் தாழ்ந்து இழிந்து நிற்கும். எனவே, சீரிய இலக்கியங்களே ஒரு நாட்டின் அழியாத செல்வங்களாகும் இதற்கு தமிழகத்தின் பொற்காலம் எனத் திகழ்ந்த சங்ககால இலக்கியங்கள் நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. சங்ககாலப் பெண்மையின் பெருமைக்கும் அக்காலப் பாடல்கள் பெருஞ்சான்றாக அமைவன என்றும் கூறி அமைகின்றேன்

---

## நாணம் பெண்தன்மைக்கு உயிர்

"நாணம் பெண்களுக்கு இயற்கையானது. யாரும் வற்புறுத்தாமலே அவர்களுக்கு இயல்பாய்ப் பிறப்பிலேயே அமைந்துள்ள பண்பு அது. அதைப் போக்க முடியாது. அது அவர்களுக்குக் கவர்ச்சியைத் தருகிறது. பெண்தன்மைக்கே அது தான் உயிர்".

— டாக்ரர் மு. வரதராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருவள்ளுவர் காட்டிய பெண்மை

''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்று வையமளந்த வள்ளுவரைப் போற்றுகின்றார் அமரகவி பாரதியார். தமிழ்ப் பண்பாட்டையும், வாழ்க்கையின் தலையாய ஒழுக்க முறைகளையும், அறத்தையும், வாய்மையையும், நீதியையும் போற்றி வாழ்ந்த சிறப்பையும் நன்கு எடுத்துக்காட்டுகிறார் வள்ளுவப் பெருமான். இத்தகைய பண்பாட்டைப் பேணிய மக்களிடையே ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள'' என்று வியப்படையும் மாண்பு பெரிதும் சிந்திப்பதற்குரியது

நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்ட திருக்குறளில் அறத்துப்பாலிலும் காமத்துப்பாலிலும் பெண்மைப் பண்பின் சிறப்புக்கள் பல இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இல்வாழ்க்கை என்பது தனக்கும் பிறர்க்கும் பயன்படும் வாழ்க்கையாக அமைய வேண்டும். இதற்கு அன்புநெறியும் அறநெறியும் இன்றியமையாதனவாகும். அன்பு என்பது இல்லறத்தை அழகு படுத்துவது; அறம் என்பது வாழ்க்கையின் பயனாக விளங்குவது. இவை இரண்டும் இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாக அமைவன.

உரிய முறையில் இல் வாழ்க்கையை மேற்கொண்டால் துறவறத்தால் எப்பயனையும் சிரமப்பட்டு ஈட்ட வேண்டியதில்லை. அதாவது அறவழியில் ஆற்றப்படும் இல்வாழ்க்கை தவத்தின் பயனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈட்டி நிற்கிறது. வேண்டியதைச் செய்தலும் வேண்டாதவற்றை விலக்கலும் குடும்ப வாழ்க்கையில் இடம்பெற வேண்டியன. இத்தகைய நிலையில் விளங்கும் குடும்பத் தலைவனைத் தெய்வமாகப் போற்றுகிறார் வள்ளுவர்;

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

மேற்காட்டிய வகையில் குடும்பம் அமைவதற்கு வாழ்க்கைத் துணைநலமாகிய மனைவியின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். அதாவது தனது கணவனின் பொருள்வளம், மனவளம் ஆகியவற்றுக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்பவளே உண்மையான வாழ்க்கைத்துணையாகும். அதாவது பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் இடையே ஏற்றத் தாழ்வுகள் இருந்தபோதும், தான் புகுந்த இல்லத்தின் வளத்திற்கேற்பத் தன்னை மாற்றிக் கொள்பவர்களே உண்மையான வாழ்க்கைத் துணையாகும்.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒரு குடும்பப் பெண்ணின் பண்புகளை நமது இலக்கியங்களில் காணமுடியும். பிறந்தவீடு செல்வச் சிறப்புள்ள ஒரு இல்லம், வெள்ளித்தட்டிலே உணவு உண்ணுகிற வழக்கமுடையவள் தலைவி. அந்த வீட்டில் ஏவல் காரர்களுக்குக் குறைவில்லை. அறுசுவை உணவை இந்தப் பெண்ணுக்கு ஊட்டுவதற்கு வேலைக்காரி சிரமப்படுகிறாள். வேண்டாம் வேண்டாம் என்று ஓடி ஓடி ஒதுங்குகிறாள் இந்தப் பெண். பின்பு பருவமடைந்து திருமணம் ஆன நிலையில், கணவன் வீட்டுக்குச் சென்று குடும்பம் நடத்துகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத விதமாகக் கணவனுக்கு வருவாய் குன்றிவிட்டது. சுவை உணவுகளை அந்த வீட்டில் அவள் எதிர்பார்க்க முடியாமல் இருக்கிறது. இந்தப் பெண்ணின் தந்தை தன்னுடைய இல்லத்திலிருந்து அறுசுவை உணவை மகளுக்கு அனுப்பி வைக்கிறான். ஆனால் பிறந்த வீட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட கொழுத்த உணவுகளை அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. கணவனின் வருவாய்க்கு ஏற்றபடி சமைத்த உணவுகளையே இருவருமாக உண்டு திருப்தி அடைகின்றனர்.

''கொண்ட கணவன் குடிவறனுற்றென்று
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உண்ணாள்''

என்ற அடிகள் எமது சிந்தனைக்கும், தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை என்ற வாசகத்துக்கு புரியதாக விளங்குகின்றன.

மனைமாட்சி என்பது பெண்களுக்கு அமைய வேண்டிய தனிப்பண்பு. நல்லதொரு மனையாள் வாய்க்கப்பெறின், ''வீட்டில் இல்லாதது ஒன்றும் இல்லை'' என்று பெருமிதமாகப் பேசுகிறார் வள்ளுவர். அத்துடன் கற்பெனும் திண்மை அமைந்து விட்டால், பெண்ணின் பெருமைக்கு வேறு சான்றுகளே தேவையில்லை. இயற்கையும் அவளுக்கு ஏவல் செய்யும் என்பது வள்ளுவருடைய கருத்து. இத்தகைய நிறைவான குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைகளும் சான்றோர்கள் வரிசையிலே வைத்து எண்ணப்படுவார்கள். அதாவது கல்வி, ஒழுக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாடு அனைத்தும் இந்தக் குடும்பப் பெண்ணின் குழந்தைகளிடமும் காணப்படும். இதனால் பல சந்தர்ப்பங்களில் தனது பிள்ளைகள் மூலம் பெருமை அடைகிறாள் பெற்ற தாய்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பது வள்ளுவர் வாய்மொழியாகும். உத்தமர்கள் ஒன்று கூடி "உன்மகன் சான்றோன்" என்று கூறும் பொழுது அதனைக் கேட்டுப் பூரிப்படையும் தாயை விதந்து பேசுகிறார் வள்ளுவர்.

அதுவுமன்றி உத்தமமான மனைவியைப் பெற்ற கணவனுக்குத் தேவர்கள் வாழும் உலகிலும் பெருஞ் சிறப்புக் கிடைக்கும் என்பதை அறிய முடிகின்றது. மேலும் இல்லறத்தானுக்கு அமைய வேண்டிய கடமைகளில் விருந்தோம்பலைச் சிறப்பாகக் காட்டுகின்றார். இதிலே சிறந்த மனையாளின் பண்பு சொல்லாமலே விளங்குகிறது. இத்தகைய இல்லத்திலே திருமகள் விரும்பி உறைவாள் என்பதும் அவர்களின் வாழ்வு தானாகவே ஓங்கி நிற்கும் என்பதும் உணர்த்தப்படுகின்றது. முதலில் விருந்தினரை உபசரித்து அதன்பின் கணவனையும் பிள்ளைகளையும் கவனித்து இறுதியில் தான் உண்டு மகிழ்பவளே உண்மையான மனைவி என்பது உணர்ந்து நோக்குதற்குரியது.

குசேலரின் மனைவி சுசீலையை இதற்கொரு எடுத்துக்காட்டாக நோக்கலாம். வறுமை வந்துற்ற போதும் குடும்ப நலனைப் பேணுவதில் தாழ்ந்து

4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாது உறுதியாக நின்று இல்லறத்தைக் காத்த அப் பெண்ணின் மகத்துவத்தை ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா உலகத்துக்கு எடுத்துக் காட்டுகின்றார். குசேலர் சோம்பேறித்தனம் மிகுந்தவர். அதனால் சுசீலை ஆற்றும் தருமங்களுக்கு எவ்வித முயற்சியும் எடுக்காது வாளா இருந்தார். ஆனால் குசேலர் கண்ணபிரானிடத்தே நீங்காத பக்தி கொண்டவர். குடும்பப் பொறுப்பு அனைத்தையும் சுசீலையிடம் ஒப்படைத்துவிட்டு இருந்தார். சுசீலையின் பண்புகளைப் பின்வரும் பாடல்களில்—

"இவ்வாறு வருந்தியும் தற்கு இனிமை சான்ற
செவ்வாய்மை அந்தணனை வெறுத்து உரையாள்
அவர்மொழிகள் சிறிதும் செப்பாள் ......"

நன்கு காண முடிகின்றது.

இத்தகைய உயர்ந்த பெண்மைக்கு எந்த ஒரு குறைவும் ஏற்பட இடமில்லை என்ற கருத்தமைந்த பின்வரும் திருக்குறளைக் கவனிப்போம்:

"வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

உழவன் விதை விதைக்கும் பொழுது அதனால் வரும் பயனை மனதில் கற்பித்துக் கொண்டு சந்தோஷமாக விதைக்கிறான். விருந்தினர்களுக்கு அன்னமிட்டு உபசரிப்பதே இல்லறத்தின் முதல் நோக்கமாக அமைகின்றது. நன்னோக்கத்துடன் நாற்று நடுவதனால், வயலில் பயிர் விளைவும் அதிகரிக்கும் என்பதை உயர்வு நவிற்சியாகக் கூறுகின்றார். அத்துடன் விருந்தினரை முகமலர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடு உபசரிப்பது இல்லறத்தானின் தலையாய கடன் என்பதை எடுத்துக் காட்டும் பொழுது, அங்கே இல்லாளுக்கு முதலிடம் அமைய வேண்டும் என்பதையும் காண முடிகின்றது. கடுகடுப்பான உள்ளத்தோடு கணவனின் பணிப்புரைக்கு ஏற்ப விருந்து பரிமாறிய ஒரு பெண்ணைப் பார்த்து ஔவையார் முனிவு கொள்கின்றார்.

"காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டுதே — வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரியுதே ஐயையோ
அன்பிலாள் இட்ட அமுது."

என்பது பிராட்டியாருடைய பாடலாகும். ஆகவே விருந்தினரை இன் முகத்தோடு உபசரிப்பதே இன்றியமையாதது என்பதைப் பின்வரும் குறட்பாவின் மூலம் விளக்குகிறார்:

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து."

என்பது கவனிக்கத்தக்கது

வள்ளுவர் காட்டிய பெண்மை அனைவராலும் மெச்சிப் புகழத்தக்க தகுதி வாய்ந்தது. திருக்குறளின் முப்பாலில் பிற்பகுதியாகிய காமத்துப் பாலில் இவை மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன. தலைவன் ஒருவன் தான் காணும் தலைவியின் கண்களை அழகுள்ள மலர்களினின்றும் வேறுபடுத்துகின்றான். மலரைக் கண்டு மயங்கி நிற்கும் நெஞ்சமே; தாமரை, குவளை, நீலோற்பலம் போன்ற மலர்களைக் கண்டு நீ மயங்கி நிற்கிறாய். ஆனால் எனது தலைவியின் கண்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மலர்களோடு உவமை கூறத்தக்கதன்று. மலர்களைப் பலரும் கண்டு இரசிக்கிறார்கள். ஆனால், இவளுடைய கண்களை யான் ஒருவனே தனித்து நின்று இரசிக்கின்றேன். இந்த வகையில் தன் தலைவனுக்கு மாத்திரமே இன்பத்தை ஊட்டும் தலைவியினுடைய கண்களை எனைய மலர்களோடு உவமிப்பது பொருந்தாது எனப் புகழ்ந்துரைக்கின்றான் தலைவன். இதனை —

''மலர் காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர் காணும் பூவொக்கும் என்று''

என்பர் செந்நாப்புலவர். மையாத்தல் - ஒவ்வாதவற்றை ஒக்குமெனக் கருதுதல்.

தலைவன் புறத்தொழுக்கம் உடையவன் என்பதும் பரத்தையர் சேரிக்கு அடிக்கடி சென்று வருபவன் என்பதும் தலைவிக்கு நன்கு தெரியும். ஆனால், அவனை நேரிலே காணும் பொழுது அவன் செய்த தவறுகளை மறந்து விடுகின்றாள். இது உயர்ந்த பெண்மையின் பண்பாகும். அதாவது அவனை நேரில் காணாத பொழுது அவனுடைய தவறுகளை நினைத்துக் கொண்டிருந்த தலைவி, அவன் நேரே வந்ததும், எல்லாவற்றையும் மறந்து விடுகிறாள். இதனை வள்ளுவர் வாய்மொழியில் நன்கு காண முடிகின்றது.

''காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை''

மற்றொரு குறளில் -

''எழுதுங்கால கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறட்பாவில் இச்செய்தி மிகவும் துல்லியமாக விளக்கப்பட்டுள்ளது. முன்னெல்லாம் கண்டிருந்தும், எழுதும் காலத்து அஞ்சனக்கோலின் இயல்பைக் காணமாட்டாத கண்ணினைப் போல் தலைவனுடைய தவறுகளை முன்பெல்லாம் கண்டிருந்தும், அவனை நேரிலே கண்டவிடத்து அத்தவறுகளைக் காணமுடியாது இருக்கிறதென்பது இதன் பொருளாகும் கற்புள்ள பெண்ணுக்கு இது இயல்பாய் அமைந்த தன்மையாகும்.

சங்க இலக்கியங்களிலே பலவிடங்களில் இச் செய்தியைக் காணக் கூடியதாயுள்ளது. பரத்தையர் சேரிக்குப் போய்த் திரும்பி வந்து, நாணிக் கோணி நிற்கும் தலைவனை, அவனாற்றிய தவறுகளை நோக்காது, தனது கணவன் என்ற உரிமையை மாத்திரம் நோக்கி வரவேற்கும் தலைவியின் பெருந்தன்மை, வள்ளுவர் காட்டிய பெண்மையின் உச்சமான இடமாகும்.

மற்றோரிடத்தில், தலைவியைப் பற்றித் தனது கண்மணிக்குப் பெருமிதமாக எடுத்துரைக்கின்றான் தலைவன். அதாவது என் கண்ணின் கருமணியிலே தங்கி நிற்கும் பாவையே! நீ அங்கு நின்று போய்விட வேண்டும் என்னால் விரும்பப்பட்ட பெண்மணிக்கு, எனது கண்மணியிலே நான் இடமளிக்க வேண்டும். நீ இங்கே இருந்தால், எனது தலைவிக்கு இடமில்லாமல் போய் விடும். அவள் புறத்தே போகமாட்டாள். அவள் உன்னிலும் பார்க்க எனக்கு இனியவள். ஆகவே அவளுக்கு இடமளிக்க வேண்டியது எனது கடன். இருவருக்கும் கண்மணியிலே இடமளிப்பதற்கு இட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை. ஆதலால் அவளுக்கே இந்த இடம் உரிமை யானதென்பது வியந்து நோக்கக் கூடிய உயர்ந்த அன்பு இதுவாகும். அக்குறட்பாவைக் கவனிப்போம்:

"கருமணியிற் பாவாய், நீ போதாய்; யாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம்"

அடுத்து, மற்றொரு குறட்பாவில் கற்பின் திண்மை வாய்ந்த தலைவியின் உயர்ந்த ஒழுக்கத்தைத் தலைவன் கூற்றாக வைத்துக் காட்டுகிறார் வள்ளுவர். சந்திரனே! நீ ஆகாயத்தில் தோன்றி அனைவர்க்கும் நிலவொளியைக் கொடுக்கின்றாய், அதனால் உன்னைக் காணுகின்ற அனைவரும் பூரிப் படைகின்றனர். நீ இவ்வாறு பலருக்கும் உன்னைக் காட்டிக் கொண்டு திரிகிறாய். ஆனால், எனது தலைவியோ எனக்குமாத்திரம் பூரிப்பையும் மகிழ்ச்சி யையும் தருபவள். அவளுடைய அந்த வதனத்தி லிருந்து இன்பம் அனுபவிக்கின்றவன் யான் ஒரு வனே. ஆனால், உன்னுடைய ஒளியினால் இன்ப மடைபவர்கள் பலர். உன் தண்ணளியை உலகம் முழுவதும் மகிழ்ச்சியோடு அனுபவிக்கிறது. இலக் கண நூல்களிலே மதிமுகம் என்று பேசப்படுகின்ற உவமை அணிக்கும் நீ பொருத்தமாய் இருக்கவேண்டு மானால், இனிமேல் பலர்காணும் வண்ணம் தோன் றாதே. இதனை நான் உன்னிடம் விண்ணப்பிக் கிறேன். என்ற கருத்தமைந்த பாடல் ஒன்றைக் கவனிப்போம்:

"மலர் அன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர் காணத் தோன்றல் மதி"

இன்னும், தலைவன் ஒருவனுடைய கூற்றாகத் தலை வியின் நாணம் புலப்படுத்தப்படுவதைப் பார்ப்போம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவன் ஒருவன் தலைவி ஒருத்தியை நோக்கும் பொழுது, அவள் நாணத்தினால் நிலத்தை நோக்கிக்கொண்டிருப்பாள் என்றும் அப்படி நோக்காத விடத்து, தன்னைப் பார்த்து மெல்லப் புன்முறுவல் செய்வாள் என்றும் கூறப்படுகின்றது. இது உத்தமப் பெண்களின் சிறந்த பண்பாகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்களையும் உடையவர்களாகிய மகளிர் சந்தர்ப்பம் வரும்பொழுது இவற்றைக் கைக்கொண்டு ஒழுகுவதை இலக்கியங்கள் காட்டுகின்றன. இனிக் குறட்பாவின் பொருளை அப்படியே காண்போம்.

''யான் தன்னை நோக்குங்கால், தான் எதிர் நோக்காது, இறைஞ்சி நிலத்தை நோக்கி நிற்கும். அதனை அறிந்து, யான் நோக்கும் பொழுது, தான் என்னை நோக்கித் தன்னுள்ளே மெல்ல மகிழ்ந்து நிற்கும்''. அதாவது வெளிப்படாத சிறுமுறுவலிப்பு முகத்தில் தோன்றும் என்பது கருத்தாகும். தலைவி தனது விருப்பத்தைக் குறிப்பாகக் காட்டிக் கொள்ளுகிறாள். சங்க இலக்கியங்களிலே அகப்பொருள் தழுவிய இடங்களிலேயும் இதனை நன்கு காண முடிகின்றது.

''யான்நோக்குங் காலை நிலம்நோக்கும்; நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்''

என்பது வள்ளுவருடைய வாய்மொழியாகும்.

அத்துடன் அமையாது, தலைவியின் உள்ளக் கிடக்கையை அவளது செயற்பாடுகளைக்கொண்டு தலைவன் உணர்ந்து கொள்கிறான். இவளிடத்திலே ஐம்புல இன்பத்தையும்அடையலாம் என நம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். அதாவது கண்ணால் கண்டும் செவியால் கேட்டும் நாக்கால் சுவைத்தும் மூக்கால் முகர்ந்தும் மெய்யால் தீண்டியும் அனுபவிக்கக் கூடிய ஐம்புல இன்பம் இவளிடத்திலே உண்டு என்பதை,

"கண்டுகேட்டு உண்டுஉ யிர்த்து உய்த்தறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள."

என்ற குறட்பாவின் மூலம் உணரமுடிகிறது.

இவ்வாறு இன்பம் அனுபவித்த தலைவன், தலைவியை வியந்து கூறுகின்ற இடங்கள் இங்கே காட்டப்பட்டுள்ளன. பாலொடு தேன் கலந்து பருகும் இன்பத்தைத் தலைவியிடத்துக் கண்டு பெருமிதம் அடைகின்றான் தலைவன். எனவே அறத்துப் பாலிலும் காமத்துப் பாலிலும் திருவள்ளுவர் காட்டிய பெண்மையின் உயர்வை ஆயும் தோறும் நன்கு அறிய முடிகின்றது

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று தனிப்பெரும் நூல் செய்தவர் வள்ளுவர். இவருக்கு முன்பு நூல் செய்தவர்கள், நடந்தவற்றை அப்படியே பாடி வைத்தனர் ஆனால், வள்ளுவரோ இவை இப்படித்தான் நடைபெற வேண்டும் என்று எழுதி வைத்தார்.

எனவே, திருக்குறளை ஒரு சீர்திருத்த நூல் என்று சொல்லி விடலாம். ஒழுக்க இயலுக்காக இவருடைய காலத்துக்கு முன்பு தனி நூல் எதுவும் வெளிவரவில்லை. அதற்குப் புறம்பாகச் சமுதாயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தான் கண்ட குறைகளையும் நிறைகளையும் மனதிற் கொண்டு சமூக மேம்பாட்டுக்காக வள்ளுவர் திருக்குறளைப் படைத்தார்.

இதனாலேயே உலகம் முழுவதும் பல மொழிகளில் திருக்குறள் வெளிவந்துள்ளது. பெண்களைப் பொறுத்தவரையில், வள்ளுவரின் உயர்ந்த கருத்துக்கள் வரவேற்கத்தக்கன. திருவள்ளுவர் அடக்கமே வடிவான வாசுகியை வாழ்க்கைத் துணைவியாகப் பெற்றவர். அதனால், பெண்களைப் பற்றிய உயர்ந்த எண்ணம் அவரிடத்திலே காணப்படுகின்றது. சமூகத்திடையே ''சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்'' என்ற கேள்வியை எழுப்புகின்றார்.

அதுவுமன்றி, வள்ளுவர் காலத்தில் குடும்ப மகளிரிடம் தெய்வம் தொழுகின்ற பழக்கம் மிகுந்து காணப்பட்டது இதனால் குடும்பப் பொறுப்புக்களில் அக்கறை குறைந்து, அதில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. இதனை மனதில் கொண்டு, இல்லாளுக்குக் கொழுநனே கண்கண்ட தெய்வம் என்ற கருத்தை முன்வைக்கின்றார். மண்ணுலக வாழ்வின் மேன்மைக்காக உழைக்கும் சிந்தனை உடைய ஒவ்வொருவருக்கும் இன்றைய உலகம் பல கேள்விகளை எழுப்புகின்றது. சமுதாயத்தின் ஒரு சில குறைகளையே இவை பிரதிபலிக்கின்றன.

நாடு சரியில்லை; வீடு சரியில்லை; பாடசாலை சரியில்லை; அரசு சரியில்லை என்று நாம் அடிக்கடி குறை கூறிக் கொள்கின்றோம். இந்தக் குறைகளை நீக்குதற்குச் சமுதாயத்தின் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகிய பெண்கள், தமது விளிகளை அகலத்திறந்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். அன்பு நெறியே வாழ்வை முழுமைப்படுத்துகின்றது. நண்பனிடத்திலே நாம் காட்டுகின்ற அன்பு நட்பைக் கூட்டுகின்றது; பகைவனிடத்திலே காட்டுகின்ற அன்பு பகையைக் குறைக்கின்றது. அன்பு செய்யும் ஒழுக்கத்தை இயல்பாகவே பெண் பெற்றிருக்கிறாள்.

இந்த வகையில் வள்ளுவர் காட்டிய பெண்மையில், மனைவியின் இல்லறத்தின் சிறப்பு, கணவனின் பெருமை, மனைவியின் மாண்பு என்பவற்றோடு ஒருவனும்ஒருத்தியும் உள்ளத்தால் இசைந்து பெருமிதமடையும் தன்மையும் கூறப்பட்டுள்ளது. பிற்கால இலக்கியங்கள் அனைத்துக்கும் வள்ளுவர் காட்டிய பெண்மைப் பண்பே மகுடம் வைத்தது போல் அமைந்துள்ளது என்பதில் மிகையொன்றுமில்லை.

---

யோக்கியருக்குங் கும்பிடு அயோக்கியருக்குங் கும்பிடு, யோக்கியருக்கும் பாதகாணிக்கை அயோக்கியருக்கும் பாதகாணிக்கையானால், திருத்தம் எப்படி உண்டாகும்! யோக்கியரை உயர்த்தி அயோக்கியரைத் தாழ்த்தினாலன்றோ! அயோக்கியர் தொகை குறையக் குறைய யோக்கியர் தொகை அதிகப்படும்.

— நாவலர் பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௧

# இளங்கோ காட்டும் பெண்மை

''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு'' என்று இளங்கோ தந்த சிலம்பினைப் போற்றுகிறார் புதுமைக் கவி பாரதியார் அவர்கள். இப்போற்றுதலுக்குரிய சிலம்பு காட்டும் பெண்மையைப் பற்றி அறிந்து கொள்வது எமது தலையாய கடனாகும்.

சீரிய இலக்கியங்களே ஒரு நாட்டின் செல்வம் என்று மதிக்கப்படுகின்றன. இதனாலேயே பாரதியார் மேற்காட்டிவாறு சிலப்பதிகாரத்தைப் போற்றுகிறார். இலக்கியங்கள் அந்த அந்தக் காலத்துக்கு மாத்திரம் பாடிவைக்கப்பட்டவை அல்ல. நிகழ் காலத்தைக் கொண்டு வருங்காலத்தையும் நோக்கிச் சுவையூட்டத்தக்க வகையில் படைக்கப்பட்டவையே சிறந்த இலக்கியங்களாகும்.

சிலப்பதிகாரத்தைப் பாடியவர் இளங்கோ அடிகள் என்ற துறவியாவர். செங்குட்டுவ மன்னனின் விருப்பத்தை ஏற்று ''நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்'' என்று கூறிப் புனைந்த காப்பியமே சிலப்பதிகாரம் ஆகும்.

'' அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூ உம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூ உம்''

என்ற உண்மைகளைத் தன்னுள் அடக்கிய பெருமைக்குரியது சிலப்பதிகாரம். இதில் முதலாவது அரசர்க்குரியது; இரண்டாவது கற்புள்ள மங்கையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையைப் புலப்படுத்துவது; மூன்றாவது ஊழ் வினையை மக்கள் அனுபவித்தே தீர வேண்டும் என்ற நியதியைப் போதிப்பது. இவற்றுள் இரண்டாவது பகுதியே இக்கட்டுரையில் வெளிவரும் விசேட பகுதியாகும்.

சிலப்பதிகாரத்தின் கதாநாயகி கண்ணகி. அதில் முக்கிய பங்கு பெற்ற இடம் சிலம்பின் பெருமையாகும். குடிமக்களுள் ஒருத்தியாய் இருந்த கண்ணகி, தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகிறாள். இளங்கோ காட்டிய பெண்மை இங்கு உயர்ந்த நிலையில் வைக்கப்படுகின்றது. மக்களாய்ப் பிறந்தோர் எவ்வாறு தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள் என்ற குறிக்கோளே காப்பியத்தில் முக்கிய இடம் பெறுகிறது.

அடுத்து, புகார்க் காண்டத்தில் கண்ணகியின் குறிக்கோளோடு சேர்ந்த உன்னத வாழ்வு சித்தரிக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் கண்ணகியின் நற்பண்புகளை எடுத்துக் காட்டிய ஓடரித்தைக் கவனிப்போம்.

"போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி என்பாள் மன்னோ"

இத்தகைய அழகு நலமும், குணநலமும் வாய்ந்த கண்ணகிக்கு தந்தையாக அமைந்தவன் மாநாய்கன் என்ற வணிகப் பெருமகன் ஆவான். அவ்வாறு புகழ்பூத்த மற்றொரு குடும்பம் மாசாத்துவான் என்ற இருநிதிக் கிழவனுடைய குடும்பம். இக் குடும்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்கள் ''கொள்வதும் மிகை படாது கொடுப்பதும் குறைபடாது'' வாழ்ந்த தருமசீலர்கள். ''ஈதல் அறம்; தீவினை விட்டு ஈட்டல் பொருள்'' என்ற குறிக்கோளுக்கு அமைய வாழ்ந்த பெருமைக்குரியவர்கள்.

மாநாய்கனின் மகள் கண்ணகிக்கும் மாசாத்துவான் மகன் கோவலனுக்கும் முறைப்படி திருமணம் செய்து வைக்கப்பட்டது. இல்லறத்தை நல்லறமாகவும், இன்ப அன்புக்கும் குடும்ப நேயத்துக்கும் உரியமுறையிலும் இவர்களால் குடும்ப உறவு அனுட்டிக்கப்பட்டது. இல்லக்கிழத்தியாகிய கண்ணகியைக் கோவலன் வியந்து பாராட்டுகிறான். பெற்றோர்கள் புதுமணத் தம்பதிகளுக்குத் தனிமாளிகை அமைத்துக் கொடுக்கின்றனர். தனது மனைவியாகிய கண்ணகியைக் கோவலன் புகழ்ந்துபோற்றுமிடம் கவனிக்கத்தக்கது. அத்தனை புகழுரைகளுக்கும் கண்ணகி பொருத்தமானவள் என்பதில் ஐயமில்லை.

''மாசறு பொன்னே வலம்புரி முத்தே!
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ!
அலையிடைப் பிறவா அமுதே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே என்கோ!''

என்று புகழ்ந்து பேசி அரவணைத்து நின்ற கோவலன், சில நாட்களில் மனம் மாறுபட்டு கண்ணகியைப் பிரிந்து செல்கிறான்.

7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய செல்வச்செருக்கும் கூத்தாட்டு இன்பமும், மாதவிபால் அவனை மயங்க வைக்கின்றது. முன்னோர் தேடிவைத்த செல்வங்கள் அனைத்தையும் மாதவியின் இன்பத்திற்காகக் கொட்டி மகிழ்கின்றான் கோவலன். செல்வங்கள் தேய்ந்து கொண்டே போயின. மாதவியிடம் வைத்த பற்று வலுப்பெறுகிறது. இந்தச் சூழ்நிலையில் கண்ணகி என்ன செய்வாள்? தனித்திருந்து தனது துன்ப வாழ்க்கையை ஓரளவு அமைதியுடன் கழிக்கின்றாள். கணிகை மகளான மாதவியின் இன்பத்தில் கோவலன் மனதைப் பறிகொடுத்து நிற்கும் சமயத்தில், நடனப் பரிசாக மன்னர் அளித்த மாலையைத் தோழியிடம் கொடுத்து, 'மாற்றுயர்ந்த பசும்பொன் ஆயிரத்தெட்டுத் தருபவர்க்கே இம்மாலை உரியது. அவனே எம் அன்பனுமாவன்' என்ற கோரிக்கை மாதவியால் விடப்படுகிறது.

அவ்வேளையில் மாதவிமேல் மயங்கிய கோவலன் அம்மாலையை ஏற்று, மாதவி மனையைச் சேருகின்றான். அங்கு கணிகை மாதுடன் இன்புற்றிருக்கிறான். ஆனால், கற்புக்கரசி கண்ணகியின் நிலை பரிதாபத்துக் குரியதாகிறது.

இங்கே இளங்கோ காட்டிய பெண்மைப் பண்பு சிறப்பாகக் காட்டப்படுகின்றது. கோவலனைப் பிரிந்திருந்த நேரத்தில் அவளுடைய கவலை இல்லறக் கடமைகளிலிருந்து நழுவி விடுகின்றேனே என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவள் நிலையைப் படமாகக் காட்டுகின்றார் இளங்கோ. இந்த நிலையிலும் தன் கணவனை நொந்து கொள்ளாது, தனது தீவினையையே எண்ணிக் கலங்குகிறாள். இதே சமயத்தில் கோவலனுடைய தாய்க்கும் தந்தைக்கும் பெருங்கவலை ஏற்படுகிறது. தன் கவலையைக் காட்டாது வாழ்ந்த போதும், மாமன் மாமியார் பெருங்கவலை அடைகின்றனர் என்பது கண்ணகிக்குத் தெரியும் என் செய்வாள்! பாவம்.

தேவந்தி என்ற தோழிப்பெண்ணின் பண்பையும் இவ்விடத்தில் காணலாம். கண்ணகி தனது தோழி தேவந்திக்குத் தான் கண்ட கனவின் தன்மையையும் இதற்கு மாற்று வழி என்ன என்பதையும் வினவி நிற்கிறாள். 'நெய்தலங் கானலில் அமைந்திருக்கும் நீரில் மூழ்கி காமன் கோயிலை வழிபட வேண்டும்' என்ற மார்க்கத்தைத் தேவந்தி எடுத்துரைக்கிறாள்

ஆனால், அவளது உரையைக் கண்ணகி மறுக்கிறாள். கற்புடைப் பெண்டிருக்குத் தமது கணவனைத் தவிர வேறு தெய்வங்களை வணங்குதல் ஆகாத செயல் என்ற பழந்தமிழர் மரபை எடுத்துக் கூறுகிறாள். இந்த இடத்திலேயும் கண்ணகியின் உயர்ந்த பண்பைக் காண முடிகின்றது.

மாதவியோடு கூடிவாழ்ந்த கோவலன் பற்பல மகிழ்வான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொண்டு கடற்கரை மணற்பரப்பிலே இருவரும் மாறி மாறி யாழ் வாசிக்கத் தொடங்குகின்றனர். தான் வாசித்து முடிந்தவுடன் கோவலனுக்கு யாழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டினாள் மாதவி. அதனை வாங்கி இசைத்த கோவலன், பின்வரும் கருத்தமைந்த பாடலைப் பாடுகிறான்.

"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் - அது ஓச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய்; வாழி, காவேரி!
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற் கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பு என்று
அறிந்தேன்; வாழி காவேரி!

அதாவது சோழமன்னன் கங்கையோடு கூடினான் என்றும் ஆனால் காவேரி அதைக் கண்டு சினங்கொள்ளவில்லை என்றும் எடுத்துக்காட்டி, இத்தகைய நிலை பெண்களின் பெருங் கற்புக்கு அடையாளமாக அமைகின்றது என்ற கருத்தில் அமைத்துப் பாடினான். மாதவியும் கலை உணர்வு மிக்கவளாகையால், தனது கலைத்திறனைக்காட்டி யாழில் இசையமைத்து வேறொருவன் மீது தான் விருப்புடையவள் போன்று நகைச்சுவையாகப் பாடுகின்றாள்.

உடனே கோவலனின் மனம் மாறுபடுகின்றது; ஊழ்வினை வந்து குறுக்கே நிற்கிறது. மாதவியை விட்டுப் பிரிந்து செல்லுகிறான். பிரிவைத்தாங்க முடியாத மாதவி, தனியே தன்னிருப்பிடத்தை அடைகின்றாள். அன்பான திருமுகம் ஒன்றைக் கோவலனுக்கு அனுப்பிவிட்டு, வாடிய உள்ளத்தோடு ''மாலை வாராராயினும் காலை வருவார்'' என்று ஏங்கிக் கிடக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்தில் மாதவியின் உண்மையான பெண்மைச் சிறப்பினைக் காணுகின்றோம். அதாவது யாழ் இசை மீட்டலிலும் பார்க்க, கோவலனின் உறவை மேலாக மதித்தலும் அதனால் கடிதம் எழுதத்தூண்டியமையும் இதற்குச் சான்றாக அமைகின்றன. எதிர்பார்த்தபடி கோவலன் திரும்பிவராமை குறித்துத் துயரப்படுகின்றாள். கோவலனோ மனமிரங்காது மாதவி எழுதிய கடிதத்தையும் ஏற்கவில்லை.

இதேநேரத்தில் கண்ணகியிடம் நாணிக்கோணி வந்து சேருகிறான் கோவலன். கற்புக்கரசி கண்ணகிக்கு முன்னே தனது பெருவிரலால் நிலத்தைக் கீறியபடி காட்சி அளிக்கிறான். பின்னர் மெதுவாக வாயைத்திறந்து அவன் சொன்ன வார்த்தைகளைக் கவனிப்போம்:

"......... யாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
குலந்தரு வான் பொருள் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத் தருமெனக்கு..."

எனக்கூறி நிற்கிறான். இந்த நிலையில், கண்ணகி அவனைச் சினந்து கொள்ளவில்லை. அதாவது மாதவிக்குக் கொடுப்பதற்குப் பொருள் இல்லாமையால் திரும்பி வந்தான் எனக் கருதித் தன்னிடம் இருந்த காற் சிலம்பைக் கொண்டு போகும்படி கூறுகிறாள்.

"நலங்கெழு முறுவல் நகைமுகங் காட்டி
சிலம்புள கொள்"

என்று கூறும் மனப்பண்பு இளங்கோ காட்டிய பெண்மையின் உயர்வை அறிவுறுத்துவதாகும். இச்சிலம்பினையே முதலாக வைத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிபஞ் செய்வதற்காக மதுரை நோக்கிப்புறப் பட்ட கோவலன், கண்ணகியையும் தன்னுடன் அழைத்துச் செல்கின்றான்.

இற்றைவரை பூமகள் அறியாத கண்ணகியின் திருவடிகளை இப்பொழுது பூமகள் நன்கு அனுபவிக் கிறாள். வழியிலே பெண் துறவியாகிய கௌந்தி யடிகளின் தொடர்பு ஏற்படுகிறது. அவருடைய அறிவுரையைக் கேட்டுக் கொண்டே போகின்றனர். போகும் பொழுது அவர்களைக் கண்டவர்கள் மன் மதனும் இரதியும் இவர்கள் தானோ என்று கோவல னையும் கண்ணகியையும் பார்த்து வியப்படை கின்றனர். மறையவன் ஒருவனின் வழிகாட்டலில் உரிய இடமொன்றை அடைந்து, அங்கு ஆவேச முற்று வெறியாடிய பெண்களின் சோகமான மொழிகளுக்குச் செவிசாய்த்தனர்.

இதற்கிடையில், வசந்தமாலை என்ற தோழி யிடம் மாதவி கொடுத்தனுப்பிய கடிதத்தைப் படித் துப் பார்க்கிறான் கோவலன். இந்த இடத்தில் மாதவியின் உயர்ந்த பண்பை அவன் அறிந்து கொள்ளுகிறான். என் செய்வது அனைத்தும் தனது தீவினையின் பயனே என்பதை உணர்ந்து கொள் ளுகிறான். அதே வேளையில் தடுமாறிய நெஞ்சு டன் மாதரி என்ற இடைக்குலப் பெண்ணிடம் கண்ண கியை அடைக்கலமாக ஒப்புக்கொடுத்து நிற்பதும், மணிமேகலை என்ற குழந்தையை மாதவி பெற் றெடுத்ததும் முக்கிய நிகழ்வுகளாக அமைகின்றன.

"இன்துணை மகளிர்க்கு இன்றிய மையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாழ்த்தி, மாதரி வீட்டில் நின்றோர் கண்ணகியைப் போற்றுகின்றனர்.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் உபசாரம் நடைபெறுகின்றது. கண்ணகி உணவு பரிமாறுகின்றாள். இச்சந்தர்ப்பத்தில் உணவுண்டு மகிழ்ந்து ஓரிடத்தில் அமர்ந்து கோவலனும் கண்ணகியும் அமைதியாகப் பேசிக் கொள்கிறார்கள். அப்பொழுது வெற்றிலைச் சுருள் மடித்துக் கோவலனிடம் கொடுத்து விட்டு அடக்கமாகச் சொல்லுவதைப் பார்ப்பதற்கு முன், கோவலன் வார்த்தைகளைக் கவனிப்போம்:

"இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
வழூ எனும் பாரேன்; மாநகர் மருங்கு ஈண்டு
எழுக என எழுந்தாய், என் செய்தனை"

உடனே கண்ணகி சொல்வதைக் கவனிப்போம்.

"போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா துள்ள வாழ்க்கை யேன் ஆதலின்
ஏற்று எழுந்தனன் யான்"

என்பது கண்ணகி வாக்காகும். அதாவது நீண்ட நாள் இடைவெளியின் பின் மகிழ்ச்சியாக இருந்த நேரத்தில் கணவனின் தவறைச் சுட்டிக்காட்டவும் கண்ணகி தவறவில்லை என்பதை இதனால் காண முடிகின்றது.

பெருமக்களால், பெற்றோர்களால் மதிக்கப் படாத ஒழுக்கத்தில் ஈடுபட்டு, அனைத்தையும் இழந்து திரும்பி வந்த நிலையில், சிறிய பண்பை அறிவுறுத்த வேண்டிய கடமை தனித்துவமான மனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கு உண்டு. நொந்து நலிந்து வந்தபொழுது உவகையுடன் ஏற்றுக்கொண்டு, இன்னொரு சந்தர்ப்பத்திலே கணவன் மகிழ்ச்சியோடு இருந்த நேரத்தில் மேற்காட்டிய அறிவுரையைக் கண்ணகி கூறிநிற்பது, இளங்கோ காட்டும் பெண்மையின் உயர்ந்த குணத்தையும் வீரத்தன்மையையும் வெளிப்படுத்துகின்றன.

இவையனைத்தையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டான் கோவலன். அதற்குச் சான்றாகக் கண்ணகியை வாழ்த்திச் சொல்லுகிறான்.

> ''நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
> பேணிய கற்பும் பெருந்துணை யாக
> என்னொடு போந்து ஈங்கு என்துயர் களைந்த
> பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
> நாணின் பாவாய், நீணில விளக்கே
> கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி
> சிறடிச் சிலம்பின் ஒன்று கொண்டுயான் போய்
> மாறி வருவன்; மயங்கா தொழிக''

விதி முன்னுன்று கூட்டிச்செல்ல கோவலன் மதுரையை நோக்கிச் செல்லுகின்றான். கண்ணகியின் தனிமை அவனை வாட்டுகின்றது. கையிலே ஒற்றைச் சிலம்பு. இந்த நிலையில் மதுரை வீதியில் பொற்கொல்லன் ஒருவனைக் காணுகிறான். தன் கையிலிருந்த சிலம்பை அவனுக்குக் காட்டி மதிப்பிடும்படி கேட்கிறான் கோவலன். ஆனால் வஞ்சக நெஞ்சத்தோடு காட்சி அளித்த பொற்கொல்லன், அவனைத் தொழுது தனக்கு மதிப்பிடத் தெரியாது எனக்கூறி சிலம்பை ஆச்சரியத்தோடு பார்க்கிறான். தனது களவின் செயலை மறைத்து நிற்கிறான். இந்த அருமையான சிலம்பு கோப் பெருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவிக்கே உரியது. ஆகவே அரசனுக்கு அறிவித்து வரும்வரையும் கோவலனை ஓரிடத்தே தங்க வைத்து விட்டு, ஓடோடி அரண்மனைக்குப் போகின்றான். விதிவிளையாடும் காலமும் அண்மித்து விட்டது.

இச்சந்தர்ப்பத்தில் பாண்டிய மன்னனும் நாடக மகளிரின் ஆடல் பாடல்களில் மயங்கி, நின்றமையால் கோப்பெருந்தேவி ஊடல் கொண்ட நேரமாகும். அவளுடைய ஊடலைத் தணிப்பதற்கு மன்னன் புறப்பட்ட நேரம், வஞ்சகக் கொல்லன் பாண்டியனை வணங்கி, 'அரண்மனையில் சிலம்பைத் திருடிய கள்வனைக் கையும் மெய்யுமாகப் பிடித்து விட்டேன்' என்றான். பாண்டியனும் முன்பின் ஆராயாமல்

> ''என்தாழ் பூங்கோதை தன் காற்சிலம்பு
> கன்றிய கள்வன் கையதாகிற்
> கொன்றச் சிலம்பு கொணர்தாக ஈங்கு''

என்கிறான் **வளையாத செங்கோல் வளைந்து விட்டது.** அரசன் கட்டளைப்படி கோவலனைக் கொன்று மண்மிசை வீழ்த்தினார்கள். **ஊழ்வினை உயர்ந்து விட்டது.**

இவ்வேளையில் கண்ணகி தங்கியிருந்த ஆயர் சேரியில் திடுக்கிடும் பல சம்பவங்கள் நிகழுகின்றன. கோவலன் கொலைப்பட்டான் என்ற செய்தியும் அவர்கள் காதை எட்டுகின்றது இந்தச் சோகநிலை இளங்கோ காட்டிய பெண்மையில் கண்ணகி மூலம் உச்ச நிலையை அடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி பொங்கி எழுந்தாள்; கருங்கூந்தல் அவிழ்ந்தது; 'என் கணவன் கள்வனோ' என்று நிலத்தில் அடித்துப் புரண்டாள். குரவைக் கூத்தாடியடி ஆய்ச்சியர் அனைவரையும் பார்த்து முறையிட்டாள். சூரியனைப் பார்த்து, ''என் கணவன் கள்வனோ'' என்று வீராவேசத்துடன் அலறிக் கேட்டாள்.

'உன் கணவன் கள்வன் அல்லன்' என்று விடை கிடைத்தது. அது மாத்திரமல்ல; ''இந்த ஊரே தீப்பற்றி எரிந்து விடும்'' என்றும் அசரீரி ஒலித்தது.

மற்றைய சிலம்பைக் கையில் ஏந்தியவாறு ஆயர்பாடியை நீத்து, மதுரைக்குள் புகுந்தாள் கண்ணகி. நீதியில் வழுவிய பாண்டியனின் நகரில் வாழும் பத்தினிப் பெண்டிர்களை விழித்து அரற்றுகிறாள்.

''பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறா உம்
பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!''

என்று அரற்றிக் கொண்டு,

'சான்றோரும் உண்டுகொல்! தெய்வமும் உண்டுகொல்!', என்னும் கேள்விக் கணைகளைத் தொடுத்தவாறு அரண்மனையைச் சென்றடைகின்றாள்.

இவ் வீரகர்சனைக் கிடையில், கோவலனுடைய உடல் உயிர் பெற்றெழுந்து, அவள் கண்ணீரை மாற்றி, ''நீ இங்கேயே இரு'' என்று கூறிப் பிரிகின்றான் கோவலன். தன் பக்கம் தருமம் நிற்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சூழ்நிலையில் அரசியல் பிழைத்து அறம் கூற்றாவதை அறியாத கற்புக்கரசி கோப்பெருந் தேவி தீய கனவுகண்டு அச்சமடைந்தவளாய் காட்சி தருகிறாள்.

பாண்டியன் அரண்மனைக் கேகிய கண்ணகி, மன்னவனின் வாயிற் காவலனை நோக்கி,

"அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே"

என்று விளிக்கிறாள். சிலம்பைக் கையில் ஏந்திய பெண்ணொருத்தி வாயிலில் நிற்பதாக அறிவிக்கும் படி வாயிற்காவலனைக் கேட்கிறாள். காவலனும் அப்படியே செய்கின்றான். அரசன், முன்னிலை யிற் சென்ற கண்ணகியைப் பார்த்து, "இந்தக் கோலத்துடன் இங்கே ஏன் வந்தாய்?" எனக் கேட் கிறான் மன்னவன்.

அறத்தை நிலைநாட்டுவதற்காக ஆட்சி புரிந்த மன்னர்களைக் கொண்ட பூம்புகார் தனது ஊர் என்றும் வணிகன் மாசாத்துவானுடைய மகன் கோவலன் தனது கணவனென்றும் அரசனிடம் கொலைக்கு ஆளான கோவலனின் மனைவி தானென்றும் தன்பெயர் கண்ணகி என்றும் ஆவேசத்தோடு உரைக்கின்றாள். நீதி தழுவிய நாட்டையும், குன்றாப்புகழ்பெற்ற குடும்பத்தையும் எடுத்துரைக்கும் பொழுது, கண்ணகியின் மாண்பு உணரப்படுகின்றது.

இதே சமயத்தில் 'கள்வனைக் கொல்வது கடுங் கோலன்று' என்று கூறி நிற்கும் மன்னனுக்கு முன்பு தனது கணவன் கள்வனா? என்று ஆவேசத்துடன் கேட்கிறாள். மேலும் பாண்டிமாதேவியின் சிலம்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது முத்து என்பதைக் கேட்டறிந்ததும் தன்காற் சிலம்பில் உள்ளது மாணிக்கம் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் கையிலேந்திய சிலம்பை நிலத்தில் எறிந்து உடைக்கிறாள் கண்ணகி. மாணிக்கம் பரல் தெறித்தது. அந்தோ! மன்னவன் மயங்கினான்.

> "யானோ அரசன்! யானே கள்வன்!
> என்பதை காக்கும் தென்புலம் காவல்
> என்முதற் பிழைத்தது; கெடுக என் ஆயுள்"

எனக் கூறு அரியாசனத்திலின்றும் கீழே விழுந்து இறக்கிறான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இளங்கோ காட்டிய பெண்மையின் உயர்வுக்குப் பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவியைக் காணமுடிகின்றது. தரையில் விழ்ந்த கணவனைத் தொட்டுப் பார்த்து உயிர் பிரிந்து விட்டதை உணர்ந்தாள் பாண்டிமாதேவி. உடனே 'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்' என்று சொல்லிக் கொண்டே மன்னனின் காலில் விழுந்து வணங்கிவிட்டுத் தானும் இறக்கின்றாள் கோப்பெருந்தேவி.

கண்ணகியோ சினம் தணியாத நிலையில் மதுரையையும் எரிப்பேன் எனக் கங்கணம் கட்டுகிறாள். அதர்மமே மதுரையை எரிக்கின்றது என்று சொல்லி, அக்கினியிடம் ஒப்புக்கொடுத்தாள். ஆனால், வீரபத்தினியாகிய அவள், 'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி இவர்களைக் கைவிட்டு தீத்திறத்தார் பக்கமே சேர்க' என்று கட்டளை இட்டாள். இங்கே கண்ணகியின் மறத்தன்மையையும் அறத்தன்மையையும் ஒருசேரக் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது மதுரைமா தெய்வம் கண்ணகி முன் தோன்றி, ''இந்நிலைக்குக் காரணமானவன் மன்னனும் அல்ல, மதுரை மக்களும் அல்ல, ஊழ் வினையே உருத்து வந்து ஊட்டியது'' என்பதை உணர்த்துகிறது. இதே தெய்வம் பதினான்கு தினங்களில் கணவனை அடையும் பேற்றைக் கண்ணகி பெறுவாள் என்பதையும் உரைத்து மறைந்தது.

கண்ணகி ஒடோடி ஆவேசத்துடன் திருச்செங்கோடு மலையை அடைகிறாள். திருச்செங்கோடு மலையின் மேல் வேங்கை மரத்தின்கீழ் கண்ணகி தங்கியிருந்த பொழுது, குன்றக் குறவர்கள் வழிபாடு செய்து இறைஞ்சுகிறார்கள். கோவலனும் தேவர்கள் பூமாரி பொழிய கண்ணகியைத் தேரிலே அழைத்துச்சென்று விண்ணுலகம் அடைகின்றான்.

குன்றக் குறவர்கள் இக்காட்சியைக் கண்டு கண்ணகியைத் தெய்வமாக உள்ளத்திருத்தி வணங்கி நிற்கிறார்கள். அத்துடன் குரவைக்கூத்து ஆடிப் போற்றுகிறார்கள் வஞ்சிக் காண்டத்தில் இடம்பெற்ற இச்செய்தியை சாத்தனார் என்றபெரும் புலவருக்கும் அறிய வைத்துச் சேரமன்னனுடைய ஆட்சியிலே நடுகல் எடுத்துக் கோயில் அமைத்துப் பத்தினித் தெய்வம் என்று வழிபட்ட செய்தியால் தெய்வ நிலையில் வைத்துக் கண்ணகி போற்றப் பட்ட சிறப்பைக் காணமுடிகிறது.

புகார் நகரத்திலே இல்லறத்தாளாகப் பேசப் பட்ட கண்ணகி, மதுரை மாநகரத்திலே வஞ்சினம் கொண்ட வீரத்தாயாக விளக்கமுற்று, சேரநாட்டிலே அனைவரும் வணங்கக் கூடிய கற்புக்கடம் பூண்ட தெய்வமாகக் காட்சி அளிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைச்சங்க காலத்துக்கும் சங்கம் மருவிய காலத்துக்குமிடைப்பட்ட நூல் சிலப்பதிகாரமாகும். பிற்கால இலக்கியங்களுக்கும் காப்பிய மரபுக்கும் வழிகாட்டிய நூல் இதுவாகும் குன்றக்குறவர்கள் இளங்கோ அடிகளுக்குக் கூறியதும் சாத்தனார் அதன் விபரங்களைக் கதையாக எடுத்துச்சொன்னதும் நூலின் தோற்றமாக அமைந்துள்ளது. எனவே சிலப்பதிகாரம் என்னும் பெயரால் 'நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்' என்றுகூறி மூவேந்தருக்கும் உரியதான இவ்வரலாற்றை இளங்கோவடிகள் பாடிமுடித்ததும் எம்மால் அறியத்தக்கவை ஆகும் கண்ணகி என்ற பத்தினித்தெய்வத்தை வழிபட்டு நின்றமையால் நாடும் மக்களும் நலம் பெற்று வாழ்ந்தனர் என்பதை நாம் அறிகிறோம்.

எனவே, இளங்கோ காட்டிய பெண்மையின் கண்ணகி என்ற பத்தினித் தெய்வத்தின் வரலாறு சிறப்பிடம் வகிக்கின்றது. அடுத்துக் கோப்பெருந்தேவி என்னும் கற்புக்கரசியின் சிறப்பையும் நாம் அறியமுடிகிறது நொந்து வந்த கோவலனுக்கும் கண்ணகிக்கும் அறுசுவை உணவூட்டி ஆதரித்து நிற்கும் மாதரி என்ற இடைக்குலப் பெண்ணின் வரலாற்றையும் நாம் மறந்துவிட முடியாது. அத்துடன் இந்நூலின் மற்றொரு சிறப்பு மாதவி என்னும் கணிகை மாதுக்கு இளங்கோ அடிகள் நல்லதொரு இடம் கொடுக்கின்றார். அவளுடைய ஆடல் பாடல் சிறப்புக்களிலும் பார்க்க சிலகாலம் தன்னோடு வாழ்ந்து வந்த கோவலனின் அன்பையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பையும் அவள் ஏற்று நிற்கிறாள். கோவலனுக்கும் தனக்கும் பிறந்த மணிமேகலையை துறவற வாழ்வுக்கு அர்ப்பணித்து நிற்கிறாள். மாதவியின் பெருமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு நோக்குமிடத்து இளங்கோ காட்டிய பெண்மையில் அன்புச்சுவை, காதற்சுவை, வீரச்சுவை, வெகுளிச்சுவை, பக்திச்சுவை என்பன பரந்து நிற்பதைக் காணமுடிகிறது. இந்நோக்கில் சாத்தனார் இயற்றிய மணிமேகலை என்னும் காவியத்தையும் ஏற்றிப் போற்றுதல் எமது கடனாகும்.

---

அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்க
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
செங்கயல் நெடுங்கண் அஞ்சலம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி.

— சிலப்பதிகாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨

# சேக்கிழார் காட்டிய பெண்மை

"தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கினால் சொல்ல வல்ல பிரான் எங்கள்
பாக்கியப் பயனாய்ப் பதி குன்றைவாழ்
சேக்கிழான் அடி சென்னி இருத்துவாம்."

சேக்கிழார் பெருமான் சோழநாட்டின் முதல் அமைச்சர்; கல்வி கேள்விகளில் சிறப்பு மிக்கவர்; நாடு முழுவதும் சென்று மக்களின் வாழ்க்கை முறையையும் பண்பாடுகளையும் அறிந்து கொண்டவர். இதனால் செந்தமிழ் நாட்டின் ஒப்பற்ற தெய்வீகக் கவிஞராக இவர் விளங்கினார். தமிழகத்தின் இரண்டாவது பொற்காலம் எனச் சிறப்பிக்கப்படும் பிற்காலச் சோழர் காலம், சிறந்த இலக்கியங்கள் தோன்றுவதற்குரிய சூழ்நிலையைத் தந்தது என்று கூறலாம்.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டுபவை. அதற்குப் பின்பு தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் சமணசமயம் நாடுமுழுவதும் பரவியது. ஆறாம் நூற்றாண்டுக்கும் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சைவசமயப் பிரச்சாரம் நடைபெற்றதே தவிர, இலக்கிய வளர்ச்சி இடம்பெறவில்லை என்றே கூறலாம். ஒன்பதாம் நூற்றாண்டுவரை தமிழ்க்காவியம் எதுவும் தோன்றவில்லை. பத்தாவது நூற்றாண்டில் சீவகசிந்தாமணி என்ற சமணகாவியம் தோன்றியது. பன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்டாம் நூற்றாண்டளவில் தான் சைவசமய வளர்ச்சியும் காவியத் தோற்றங்களும் ஏற்பட்டன. இக்காலத்தில் சைவமும் தமிழும் உச்ச நிலையில் விளங்கிய சிறப்பைச் சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரியபுராணம் எமக்குக் காட்டுகிறது.

செந்தமிழின் தீஞ்சுவையும் பக்திப் பிரவாகத்தின் இன்சுவையும் மங்கை நல்லாரின் வாழ்க்கைச் செழுமையும் திருத்தொண்டர் வரலாறோடு சேர்ந்து மிளிர்கின்றன. சிறப்பாகக் கூறப்போனால், பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் ஏற்பட்ட சைவ எழுச்சியை இந்நூலிற் காணமுடிகின்றது. அக்காலத்தில் வாழ்ந்த சைவத்தமிழ்ப் பெண்மணிகள் சமய வளர்ச்சியிலும் குடும்ப நலன் பேணுவதிலும் கணவனைத் தெய்வமாக மதித்தலிலும், விருந்தோம்பும் பண்பிலும் எந்த அளவுக்கு முன்னின்றார்கள் என்பதை இக்காவியத்தில் காணக்கூடியதாயுள்ளது.

காவிய இலக்கணத்தை மேற்கொண்டு இரண்டு காண்டங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும் நாலாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று செய்யுட்களைக் கொண்டதாகவும் அமைந்த ஒப்பற்ற காவியம் இதுவாகும். காவியத்தலைவனாகத் திருத்தொண்டத் தொகையைச் சைவ உலகுக்கு அளித்த சுந்தரமூர்த்தி நாயனாரே இடம்பெற்றிருக்கிறார். இரண்டாம் குலோத்துங்க மன்னனின் விருப்பத்துக்கேற்ப முதலமைச்சராகிய சேக்கிழார் தில்லை நடராஜப் பெருமானின் திருவருட் துணையோடு இந்நூலைப்பாடி முடித்தார். காவியத்துக்கு அடி எடுத்துக் கொடுத்த நடராஜப்பெருமான் 'உலகெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம்' என்ற முதலடியைச் சேக்கிழாருக்கு உணர்த்தினார். அந்த உணர்வினால் பக்திச்சுவை சொட்டச் சொட்ட இந்த அருமையான காவியத்தைப் பாடியருளினார் சேக்கிழார்.

இக்காவியத்தில் உயர்ந்த பெண்மைக்குச் சிறந்த இடம் அளிக்கப்படுகின்றது. பெண்களைத் தெய்வமாகவும், கற்புக்கரசிகளாகவும், இல்லக்கிளத்திகளாகவும் போற்றப்படும் இடங்கள் பலப் பல. முதலில் காரைக்கால் அம்மையாருடைய வரலாற்றையும் அதனை அடுத்து திலகவதியார், மங்கையர்க்கரசியார், திருநீலகண்டருடைய மனைவி, இயற்பகை நாயனாருடைய மனைவி, இளையான்குடிமாற நாயனாருடைய மனைவி, அப்பூதியடிகள் மனைவி, சிறுத்தொண்டர் மனைவி என்பவர்களின் சிறப்புக்களையும் பரவையார், சங்கிலியார் ஆகியோரின் கற்பின் திண்மையையும் இவர்களை நூலாசிரியர் போற்றி உரைத்த இடங்களையும் கவனிப்போம். மேலும் சேக்கிழார் காட்டிய நாயன்மார்களின் பக்தி வாழ்வுக்குப் பெண்கள் எவ்வாறு வழிகாட்டினார்கள் என்பதையும் சேக்கிழார் வாக்கின் மூலம் நாம் அறிந்து கொள்ள இயலும்.

முதலில், காரைக்கால் அம்மையாருடைய தெய்வீகத் தன்மையைக் காண்போம்; நாயன்மார்களுக்கு முன்பு பக்தி இலக்கியத்தைச் சைவ உலகுக்கு வழங்கிய பெருமை காரைக்கால் அம்மையாருக்கே உண்டு. இதனால் இவருடைய பதிகங்கள் மூத்ததிருப்பதிகங்கள் எனப் பேசப்பட்டன. தன்னைக் 'காரைக்காற் பேய்' என்று பதிகங்களிலே குறிப்

பிடுவது கவனிக்கத்தக்கது. தனது கணவனாகிய பரமதத்தன் அம்மையாரை விட்டுப்பிரிந்து, வேறு திருமணம் செய்த பின்பு அம்மையார் இறைவனிடம் கேட்டுத் தனது வடிவத்தைப் பேய் வடிவமாக்கிக் கொண்டார். செல்வக் குடும்பத்தில் பிறந்து சிற்றிலும் சிறுசோறும் சமைத்து விளையாடிய சிறுபராயத்திலேயே இறையன்பு மிக்கவராக விளங்கினார். திருத்தொண்டர் வடிவில் வந்து அம்மையிடம் உபசாரம் பெற்றதனால் குறைந்து போயிருந்த மாங்கனியை திருவருள் துணை கொண்டு வரவழைக்கச் செய்து அம்மையாரின் அற்புதத்தைப் பரமதத்தனுக்கும் ஏனையோருக்கும் காட்டினான் எம்பெருமான்.

இறைவனால் உவந்தளிக்கப்பட்ட மாங்கனியின் அற்புதத்தைக் கண்டு அம்மையாரது தெய்வீக ஆற்றலை வியந்து, அவரை விட்டு விலகிச் சென்றான் வணிகன். அத்துடன் வேறுமணம் புரிந்து குழந்தையும் பெற்றான். சிலநாள் கழிந்து புதிய மனைவி, குழந்தையுடன் திரும்பி வந்து அம்மையின் பாதங்களில் விழுந்து, '**இவள் நற்பெருந் தெய்வம்; எல்லாரும் வணங்குங்கள்**' என்று பணிக்கிறான். இதிலிருந்து அம்மையின் வாழ்வு முற்றாகச் சிவச் சார்போடு ஒன்றிவிட்டமை தெரிய வருகிறது. மேலும் தனது அழகுகளை உதறியும் பேய்வடிவை வரவேற்று இறைவனிடமே அவ்வடிவைக் கேட்டுப் பெற்று நிற்பதையும் சேக்கிழார் பெருமான் அழகாகக் காட்டுகிறார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈங்கிவன் குறித்த கொள்கை இது; இனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடி(வு) அடியேனுக்கு
பாங்குற வேண்டும் என்று பரமர்தாள் பரவி நின்றார்"

தன்னைக் கண்டு உலகம் ஓடவேண்டும் என்றும் இறைவன் ஒருவனையே தான் நாட வேண்டும் என்றும் அவர் விரும்பினார். சேக்கிழார் பெருமான் பெருமைசேர் வடிவு என்று அம்மையார் பெற்ற பேய் வடிவைப் பாராட்டுகிறார்.

"இறைவன் வானத்திலேயே இருக்கிறான் என்று ஒரு சாரார் சொல்லுகின்றனர். மற்றொரு சாரார் பூமியிலேயே இறைவன் இருக்கின்றான் என்று சொல்லுகின்றனர். ஆனால் நான் என் நெஞ்சத்திலேயே இறைவன் இருக்கின்றான் என்று துணிந்து சொல்வேன்" என்ற அம்மையாரின் பெருமிதமான உள்ளத்தைக் காணுகிறோம். பாடிப் பாடி பேய் வடிவில் சென்ற அம்மையாரைக் கண்டவர்கள் அஞ்சி ஓடினார்கள். எதனையும் பொருட்படுத்தாது திருக்கயிலையைச் சென்றடைகிறார் அம்மையார்.

தலையினால் நடந்து சென்று சங்கரன் இருந்த வெள்ளி மலையின் மேல் ஏறும்போது, அவரை உமையம்மை முதலில் காணுகின்றார்; வியப்படைந்தார். "எற்புயாக்கையோடு தலையினால் நடந்து வரும் இவர் யார்?" என்று எம்பெருமானைக் கேட்கிறார். இந்த இடத்தில் சேக்கிழார் காட்டும் பெண்மைக்கு உரிய இடம் கிடைக்கின்றது. 'அம்மையே!' என்று காரைக்காற் பேயாரை அழைத்து, உலகம் எல்லாம் உய்யும்படி திருவாய் மலர்ந்தருளுகிறார் எம்பெருமான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரும்இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்; உமையே! மற்றிப்,
பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள்" .........

என்பதுஎம்பெருமான் திருவாக்காகும். அதுவுமன்றி, "அம்மையே" என்று காரைக்கால் பேயாரை அழைத்து நின்றதும் கவனிக்கத்தக்கது. இவ்வாறு பெருமை பெற்ற காரைக்கால் அம்மையார், எம்பெருமானிடம் கேட்டு நின்ற வரங்களைக் கூர்ந்து கவனிப்போம்; சைவமக்கள் அனைவருடைய வழிபாட்டிலும் இப் பாடல் ஒலிக்க வேண்டும். அதனை இங்கு தருகி றோம்:

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்,
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னைஎன்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவா!நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்."

அடுத்து, அப்பர் சுவாமிகளின் தமக்கையான திலகவதியாரின் திண்மையைப் பற்றிக் கவனிப் போம். சேக்கிழார் பெருமானால் 'தூண்டுதவ விளக் கனையார்' என்று இவர் பேசப்படுகின்றார். சைவத் தைத் தூண்டிய விளக்கு; தம்பியைத் தூண்டிய விளக்கு; சரியைத்தொண்டைத் தூண்டிய விளக்கு; என்று அம்மையாரைப் பாராட்டுவது பொருத்த மாகும். தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயவு, இவரை உயிர் வாழச் செய்தது.

போர்க்களத்தில் தனது கணவன் இறந்துவிட்ட செய்தியைக் கேட்டு உயிர்விடத் துணிந்த அம்மை யாருக்குக் குறுக்கே நின்றார் தம்பி மருள்நீக்கி யார். இதனால் உடன்கட்டை ஏறும் தனது மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றிவிட்டார். திருவதிகைத் தலத்திலே சரியைத் தொண்டு செய்து கைம்மை நோன்பை நோற்று வாழ்ந்துகொண்டிருக்கிறார் நிலையாமை உணர்வு தோன்ற, சமண சமயத்தில் போய்ச் சேருகிறார் தம்பி மருள்நீக்கியார். உறுதியான சைவக் குடும் பத்தில் பிறந்தும், தம்பியின் மனம் மாறிவிட்டதே என்பது திலகவதியாருக்குப் பெருங்கவலை. மருள் நீக்கியார் பொய்ச் சமயத்தில் புகுந்ததை எண்ணி வருத்தமுற்றதிலிருந்து, அம்மையாரின் உயர்ந்த சைவப்பற்றை நன்கு அறியமுடிகிறது. இறைவனி டம் முறையிடுகிறார். அம்மையாரின் இணையற்ற பக்தியை உலகத்துக்குக் காட்டவேண்டி மருணீக்கி யாருக்குச் சூலைநோய் கொடுக்கப்படுகின்றது. வாடினார்; வருந்தினார்; நோய் தீரும் மார்க்கம் தெரியாமையினால் அலமந்தார்; முடிவில் அக் காவை நினைக்கிறார்; தூது அனுப்புகிறார்.

இந்த இடத்தில் திலகவதியாரின் மனத்திண்மை வெளிப்படுகின்றது. தூது அனுப்பிய தம்பியைச் சமணப்பள்ளியில் சென்று பார்க்க மனம் இசை யாது மறுத்துவிட்டார். ஈற்றில் தம்பியே வலிய வந்து சேருகிறார். சிவசின்னமாகிய விபூதி தமக் கையாரால் கொடுக்கப்படுகிறது. அதை அணிந்து கொண்டு, ''கூற்றாயினவாறு விலக்ககிலீர்'' என்ற தேவாரத்தைத் தொடங்கிப் பாடுகிறார். அவரது குடலை முறுக்கி வருத்திய சூலை நோய் மறைந்துவிட்டது. தம்பியைச் சைவத்துக்கு மீட்டுத் தந்த பெருமை திலகவதியாரையே சாரும். 'நாவுக் கரசர்' என்ற நாமத்தை இறைவனிடமே இருந்து பெற்றுக்கொண்டார். பின்னர் சரியைத் தொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதுடன் தமிழ் மாலை பாடுவதிலும் அப்பர் சுவாமிகள் பெருமை பெறுகிறார் என்றால், அதற்குக் காரண மாக இருந்த திலகவதியாரின் திண்மை என்பதை நாம் மறக்க முடியாது. சேக்கிழாரின் வாக்கில் இவற்றைக் கவனிப்போம்:

"தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுது என்னை
ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாள
வேண்டும் எனப் பல முறையும் விண்ணப்பஞ் செய்தனரால்"

திலகவதியாரின் விண்ணப்பத்தை ஏற்றருளிய நிலையிலேயே, பெருமான் அம்மையின் தம்பிக்குச் சூலைநோயைக் கொடுத்து ஆட்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. சேக்கிழார் காட்டிய பெண்மை யில், திலகவதியாருக்குச் சிறப்பிடம் உண்டு என் பதை இதனால் அறிய முடிகிறது.

இந்த வகையிலே, "தெய்வப்பாவை" என்று சேக்கிழார் சுவாமிகளினால் போற்றப்பட்ட மங்கை யர்க்கரசி என்ற மாதர் குல மாணிக்கத்தின் சிறப் புச் சித்திரிக்கப்படுகிறது. பல்லவர் காலத்திலே அஃதாவது கி. பி. ஏழாவது நூற்றாண்டிலே மங்கை யர்க்கரசியாரின் சிறப்பைக் காணலாம். கூன் பாண்டியன் என்ற பல்லவ மன்னனின் மனைவி யாகிய மங்கையர்க்கசியார் செய்த சைவப்பணி, பெண்ணினத்துக்கே பெருமை தருவதாக அமைந் துள்ளது. இதனைச் சேக்கிழார் பெருமான் பின் வருமாறு போற்றுகிறார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடுற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண்திருநீறு பரப்பினாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்ற லாமே"

மானிடப் பண்பிலிருந்து உயர்ந்து நிற்கும் ஒரு நிலையே தெய்வ நிலையாகும். அதாவது சாதாரண ஒரு இல்லத்தரசி என்ற நிலையில் இருந்தும் உயர்ந்து, தனது கணவன் நின்றநெறி பிழையெனக் கண்டு, தனிமையாக நின்று சைவத்தைப் போற்றியவர் இவர். சமணர் ஆதிக்கம் மேலோங்கி இருந்த காலத்தில், பாண்டி நாட்டிலே மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறை நாயனாரும் மாத்திரமே சைவசமயத்தைப் பின்பற்றி வாழ்ந்தனர். ஏனையோர் எல்லாம் சமண சமயத்தின் வசப்பட்டிருந்தனர். பாண்டியனும் அதற்கு விதிவிலக்கல்ல.

அவ்வேளையில், மங்கையர்க்கரசியாரின் உறுதியான பணி வியக்கத் தக்கது. பெண்களுக்குள்ளே ஒப்பற்ற அரசி இவர். பாண்டிநாடு சமண இருளில் ஆழ்ந்து, மன்னனும் அவ்வழி நின்ற பொழுது, அரசியார் தனித்து நின்று சைவத்தைக் காப்பாற்றியது வியப்புக்குரியதே. அம்மையாருடைய தலைமையிலேயே அமைச்சர் குலச்சிறை நாயனாரும் சைவப்பணிக்கு ஆகவேண்டியதைச் செய்தார். அரசன் அறிவுடையவன்; அம்மையார் ஞானம் உடையவர். இவர்கள் இருவரதும் உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளங்கள் இல்லற தர்மத்தில் ஒன்றுபட்டவை. இருவருக்கும் இடையில் கருத்தொற்றுமை காணப்பட்டது. உதாரணமாக

"அம்புய மலராள் போல்வார் ஆலவாய் அமர்ந்தார் தம்மைக்
கும்பிட வேண்டும் என்று கொற்றவன் தனக்குங் கூறி"

பாண்டிமாதேவி தமது பரிசனங்களுடன் சென்று ஆலவாய் அண்ணலைத் தொழுது வந்தமை கூர்ந்து கவனிக்கத்தக்கது. மன்னனும் தேவியும் மதம் வேறுபட்டார்களே அன்றி, மனம் வேறுபடாதவர்களாக வாழ்ந்தார்கள் என்பது மனங்கொள்ளத்தக்கது.

ஞானக் குழந்தை மதுரையின் எல்லையில் வந்திருக்கிறார் என்பதை அறிந்தவுடன், அங்கு ஓடோடிச் செல்கிறார். அவர் திருவடிகளில் விழுந்து அழுகிறார். "நானும் என்பதியும் செய்த தவம் என் கொல்!" என்று கூறித் தனது கணவன் பாண்டியனையும் இணைத்துக் கொள்கிறார். சேக்கிழார் காட்டிய மனைத் தக்க மாட்சியில் பெண்மைக்கு இது சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

பாண்டியனுக்கு வெப்புநோய் வந்து வாட்டிய பொழுது, ஞானசம்பந்தர் வந்து தங்கிய மடத்துக்குச் சமணர்கள் தீவைத்ததினால்தான், இவ்வாறு வெப்பு நோய் ஏற்பட்டதோ என்று ஏங்கிய மங்கையர்க்கரசியார், ஞானச்சிறுவரைக் கொண்டே நோய் தீரும் மார்க்கத்தையும் ஏற்படுத்துகிறார்.

எந்த நிலையிலும் கணவனுடைய வெறுப்புக்கு ஆளாகாமல், சைவத்தில் ஊன்றி நின்ற பெருமை அம்மையாரைச் சாரும். இது சாதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பெண்களாலும் கடைப்பிடிக்கக் கூடிய செயல் அன்று. கடைப்பிடித்தாலும் தன்னோடு மாத்திரம் அன்றி, தனது நாட்டிலும் அந்தநெறியைப் பரப்பக்கூடிய வழிவகைகளை ஆக்க முடியாது. எனவே, இவர் தனியரசி; அதுமாத்திரமல்ல; ஆளுடைய பிள்ளையாரால் தேவாரத்திலே அமைத்துப் பாடப்பட்ட பெருமையும் அவரைத் தெய்வமென்று போற்ற வைக்கிறது.

ஆலவாய் அண்ணலைப் போற்றித் தொழும் போது, ''மங்கையர்க்கரசி'' என்றே தொடங்குகிறார். பின்பு சமணர்கள் ஏதாவது தீங்கு செய்து விடுவார்களோ என்று அச்சமடைந்து நின்ற நேரத்திலும், 'மானினேர் விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்' என்று பாடுகிறார். தேவாரத்தில் மங்கையர்க்கரசியாரின் பெயர் இடம் பெற்ற பெருமை, அம்மையாருக்குரிய தனிச் சிறப்பாக அமைந்துள்ளது.

'மானி' என்ற சொல், பெருமையுடைய பெண்களுக்கு உரியது. அரசியாரின் பெருமைக்கு இதுவே பெருஞ்சான்றாகும். நெருக்கடியான ஒரு சூழ்நிலையிலேதான் அம்மையார் வாழ்ந்திருக்கிறார். ஞானசம்பந்தப் பெருமானே இதனைக் கூறுகிறார்.

''சூழு மாகிய பரசமயத்திடைத் தொண்டு
வாழு நீர்மையீர்! உமைக்காண வந்தனம்''

என்றார்.

இப்படியிருக்க, பாண்டிமாதேவி மன்னனை நோக்கிக் கூறிய கூற்றுக்களும் உணர்வதற்குரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஞானச்சிறுவரோடு சமணர்கள் வாது செய்து நின்றால், வென்றவர் பக்கம் எதுவோ அந்தப் பக்கத்துக்கு நீர் சேருவதே உறுதி நிலையாகும், கவலை அடையற்க' என்று அரசியார் தேற்று கிறார். மேலும், ஆளுடைய பிள்ளையார் மதுரையைச் சென்று சேர்ந்ததும், அம்மையாரின் உறுதிப்பாட்டிற்குச் சான்று பகருகின்றது. பாண் டியன் அரண்மனையிலே வாதங்கள் நடைபெற்று, முடிவிலே சைவத்துக்கு வெற்றி கிடைக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் மங்கையர்க்கரசியார் பக்கம் மன்னவன் சேர்ந்து விட்டான். சைவம் உயருகிறது; சமணம் தாழ்கிறது. இவற்றிற்கெல் லாம் உறுதுணையாக இருந்த பெண் அரசியாரின் உறுதிப் பாட்டைச் சைவ உலகம் போற்றாமல் இருக்க முடியாது.

சேக்கிழார் காட்டிய உண்மை உயர்வுக்கு இது பெரியதொரு சான்று ஆகும். 'தெய்வப்பாவை' என்றும், 'வளைக்கைமானி' என்றும், 'செங்கமலத் திருமடந்தை' என்றும் போற்றப்படுகின்ற இடங்கள் அரசியாரின் இணையற்ற உயர்ந்த பெண்மைக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றன.

மேலும், சேக்கிழார் காட்டிய பெண்கள் பலரை நாம் எடுத்துக்காட்டலாம். இவர்களில் 'திருநீல கண்டம், என்ற சொல்லையே மந்திரவாக்காகக் கொண்டு, ஓடு செய்து அடியார்களுக்கு அளித்துப் பெருமைபெற்ற திருநீலகண்ட நாயனாருடைய வரலாறு, சிந்திக்கத்தக்கது. புறத்தொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த நாயனாரைத் திருத்துவதன் பொருட்டு ''எம்மைத் தீண்டுவீராயின்'', திருநீல கண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சபதம் செய்த மனையாளின் பெருமையை உற்று நோக்கலாம். 'எம்மை' என்றதனால் வேறு எந்தப் பெண்களையும் தீண்டாது வாழ்ந்து பணி யாற்றிய திருநீலகண்டரையும் இச்செய்தியை அயலவர் அறியாமல் பேணிக்காத்த அவர் தம் மனைவியையும் முடிவிலே, இறைவன் இவர்களுக்கு அருள்புரிந்து நின்றதையும் சேக்கிழார் சிறப்பாகக் காட்டுகின்றார்.

சேக்கிழார் காட்டும் பிறிதொரு மங்கை நல்லாரான இயற்பகையாரின் மனைவியின் கற்பு மேம்பாட்டைக் கவனிப்போம். விருந்தினராக வந்த சிவனடியாருக்குத் தன்னைக் கொடுக்க இசைந்து விட்டார் கணவர் என்பதைக் கேட்டவுடனே,

"இன்று நீரெனக் கருள்செய்த திதுவேல்
என்னுயிர்க் கொரு நாத! நீர் உரைத்த
தொன்றை நான்செயும் அத்தனை யல்லால்
உரிமை வேறுளதோ எனக்கு" ...........

என்று கூறிய இயற்பகையாரின் மனைவியை நாம் எவ்வாறு பாராட்டுவது! அம்மாதரசியின் கற்பின் திண்மை இப்படிக் கூறவைக்கிறது. அதனாலேயே 'திருவினும் பெரியாள்' என்று சேக்கிழார் போற்றுதல் மிகவும் பொருத்தமாகும்.

அடுத்து, மகேஸ்வர பூசையில் மாண்பு பெற்ற இளையான்குடி மாறநாயனாருடைய குடும்பத்தைப் பார்ப்போம். கொடுத்துக் கொடுத்து வறுமையுற்ற நேரத்திலும், மனவளம் குன்றாது மகேஸ்வர பூசையை நடத்தி வந்த பெருமை, இக்குடும்பத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்தது. கணவனும் மனைவியும் இணைந்த மனத்தோடு இப்பணியை ஆற்றிய சிறப்பில், இளையான் குடிமாறனார் மனைவிக்கு முதலிடம் உண்டு.

மாரிக்கால மழை இருட்டில் மனைபுகுந்த சிவனடியாரை இன்முகத்துடன் வரவேற்ற இளையான் குடிமாறனும் மனைவியும் உபசரித்த பண்பை-

"கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுது செய்ய
அளித்துளார்"

எனக் காட்டுகிறார் சேக்கிழார் பெருமான்.

பெரியபுராணத்துப் பெண்கள் ஒவ்வொருவரையும் நோக்குகின்ற பொழுது, போற்றுதற்குரியவர்களாக விளங்குகின்றனர். திருநாவுக்கரசுநாயனாரை உபசரித்து நின்ற அப்பூதியடிகளின் மனைவியார், பிள்ளைகள் ஆகியோரின் வரவேற்பும் அவர்கள் இல்லத்தைச் சாணத்தால் மெழுகிக் கோலமிட்டு விளக்கேற்றி கதலி வாழைக்குருத்தை விரித்து நீரால் கழுவி, இலையின் வெட்டுவாய் வலப்புறமாக அமைய வைத்து உணவு படைத்த நிலையை, அங்கு நாம் காணுகிறோம். இதற்கெல்லாம் காரணம் இந்த வீட்டு இல்லக்கிழத்தி என்றால், அதில் மிகையொன்றுமில்லை.

இன்னும், தனது பிள்ளையையே அரிந்து கறி சமைத்துக் கொடுப்பதற்கு இசைந்து நின்ற சிறுத்தொண்டர் மனையாளின் உறுதிப்பாட்டைப் போற்றுவதற்கு, எமக்கு வாக்குகளே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெண்காட்டு நங்கை என்ற நாமம் கொண்ட இந்த மங்கை நல்லாளின் தியாகம் எண்ணி எண்ணிப் போற்றுதற்குரியது!.

மேலும், சுந்தரமூர்த்தி நாயனாரின் மனைவியரான பரவையார், சங்கிலியார் இருவரின் மனத் திண்மையையும் ஆங்காங்கு காண்கிறோம். சுந்தரரைக் கண்ட பரவையார் ''அற்புதமோ, சிவனருளோ'' என்று வியந்ததும் இறைவனாலேயே இவை நிகழ்வது என்பது காட்டப்படுகிறது. 'சாரும் தவத்து சங்கிலி கேட்பாயாக' என்று உரைக்கப் பட்டதும், 'ஏதமில் கற்பின் வாழ்க்கை மனை இசை ஞானி' என்று சுந்தரரின் தாயாரைச் சேக்கிழார் குறிப்பிட்டதும் எமது கவனத்திற்குரியனவாகும்.

இவ்வாறு பெரியபுராணம் முழுவதிலும் பெண்ணின் பெருமையும் கற்பின் திண்மையும் எடுத்துக் காட்டுதல் பெண்மையின் உயர்வை போற்றுவதாகும்.

''என்றும் இன்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளா ரடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௪

# கச்சியப்பர் காட்டிய பெண்மை

"துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்ய பேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க;
வெய்ய சூர் மார்பு திண்ட வேற்படை வாழ்க; அன்னான்
பொய்யில்சீர் அடிகள் வாழ்க, வாழ்க இப்புவனம் எல்லாம்"

சைவத்தின் மூன்று கண்களெனப் போற்றப் படுவனவாகிய பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் மூன்றும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும். பெரியபுராணம் என்பது ''இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' என்பதை விரித்துரைக்கிறது.

கந்தபுராணம் பரம்பொருளாகிய சிவனுடைய முழுமுதற் தன்மையையும் அவன் அம்சமாகத் தோன்றிய கந்தப் பெருமானின் அற்புதங்களையும் எடுத்து விளக்குகிறது.

மூன்றாவதாகிய திருவிளையாடற் புராணம் எல்லாம் வல்ல சிவ பரம் பொருள், அடியவர்கள் பொருட்டு ஆற்றிய அருள் விளையாட்டுக்களை எடுத்துக்காட்டுவது. இவற்றில் சோழர் காலத்தில் பிற்பகுதியில் தோன்றிய காவியமே கந்தபுராண மாகும். கந்தப் பெருமானைக் காவியத் தலைவ னாகக் கொண்டு இதனைப் பாடி முடித்தவர் கச்சி யப்ப சிவாச்சாரியார் ஆவார். முருகப் பெருமானே உள்நின்று உணர்த்த, தனது புலமை மேன்மைகளை அமைத்துக் கொண்டு இக் காவியத்தைப் பாடி முடித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார் கச்சியப்பர். இந்நூலுக்குரிய சிறப்பு முருகப் பெருமானே பிழைதிருத்தம் செய்து காவியம் செம்மையாக நிறைவேறுவதற்கு அருள்பாலித்தான் என்பதாகும். ''சிவமூர்த்தியே குகமூர்த்தி'' என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை ஒரு ஞான காவியம் என்று கூறுவதில் மிகையொன்றுமில்லை. நால்வகைப் புருடாத்தங்களையும் விளக்கி நிற்பது கந்தபுராணமாகும். இதனைப் பக்தி சிரத்தையோடு படிப்பவர்கள் அடையும் பேற்றினைப் பின்வரும் பாடல் நன்கு உணர்த்துகிறது:

''இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வர்
அந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே''

கச்சியப்ப சிவாச்சாரியார் பிற்காலச் சோழர் காலப் பிற்பகுதியில் வாழ்ந்தவராகையால், அக்காலப் பெண்மையின் சிறப்புக்களையும் அவர்களின் கற்பு மேம்பாட்டையும் ஒழுக்க நெறிகளையும் நன்கு அறிந்தவர் என்பது கண்கூடு. இவற்றை எல்லாம் விண்ணுலக நிலையில் வைத்துக் காட்டுவதும் குறிப்பிடத்தக்கதாகும். நூலின் தொடக்கத்தில் வரும் நிகழ்ச்சி எமது உள்ளத்தைத் தொடுகிறது.

சூரபன்மனின் ஆற்றொணாத் துன்பத்தை அனுபவிக்க முடியாமல் தேவர்கள் எல்லோரும் ஒன்று கூடிப் பிரமதேவரிடம் சென்று முறையிடுகிறார்கள். பின்பு பிரமனுடைய கட்டளைப்படி மன்மதனைத் துணைகொள்ள நினைத்து, அங்கு செல்கிறார்கள். சிவனுடைய மோனத்தைக் கலைப்பதற்கு மன்மத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிடம் குறையிரந்து நிற்கிறார்கள். மன்மதன் அதனை மறுக்கிறான். பின்பு ஒருவாறு பிரமனின் கட்டளையை மேற்கொண்டு சிவனுடைய மோனத்தைக் கலைப்பதற்குக் கயிலைக்குச் செல்கிறான். மலரம்புகளை ஏவுகின்றான். ஆனால் சட்டென்று எம்பெருமானுடைய நெற்றிக்கண் அக்கினி மன்மதனை நீறாக்கிவிடுகிறது. இந்த இடத்திலே தான் மன்மதன் மனைவியாகிய இரதியினுடைய புலம்பல் உச்சக் கட்டத்தை அடைகின்றது

"முன்னாளிற் புரமூன்று மட்டவன்மேற்
பொரப்போதன் முறையோ வென்று
சொன்னாலுங் கேட்டிலையே அமரர்பணி
புரிவதுவே துணிந்திட் டாயே
உன்னாகம் பொடியாகிப் போயினதே
இது கண்டும் உய்வா ருண்டோ
என்னாவி யாகிய நீ யிறந்த பின்னும்
யான்றனியே யிருப்ப தேயோ"

தனது கணவனின் மறைவைக்கண்டு மனம் துடித்து நிலத்தில் விழுந்து அரற்றினாள் இரதி. ஆற்றின் சுழியில் அகப்பட்ட மானைப் போல் பற்றுக்கோடின்றித் தன்னுடைய வயிற்றில் அடித்து அடித்துப் புலம்பினாள்.

''இலக்குமியின் புதல்வரே! கிருஸ்ண மூர்த்தியின் குமாரரே; சிவபெருமானது திருக்கண்ணினால் உடல் எரிந்து அழிவுற்றீரே; தேவர்களும் பிரமனும் இப்போது மகிழ்ச்சியோடு இருக்கிறார்களோ. நான் சொன்ன அறிவுரையை நீர்கேட்கவில்லையே. தேவர்களின் ஏவலை ஏற்று உடம்பை நீறாக்கிக் கொண்டீரே. துணையின்றி எப்படி நான் தனியே இருப்பேன். எனக்கு ஆறாத பெருந்துயரத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து எங்கு ஒழித்து விட்டீர். இப்படிச் சாம்பலாய் போன குற்றம் தேவர்களிடத்திலா? இந்திரனிடத் திலா? பிரமனிடத்திலா? அல்லது உன்னிடத்திலா உண்டு? இது யாரைச் சார்ந்தது? சிவபெருமானது யோக நிலையைக் கலைக்க நீர் தான் இலக்காகி நீரா? நான் என்ன பாவம் செய்தேனோ? இது விதியினுடைய சதிதான். அக்கினி சாட்சியாக உன்னைப் பிரியேன் என்று மாங்கலியத்தைச் சூட்டி, திருமண மண்டபத்தில் என்னை ஏற்றீரே! தேவர்களையும் மூவர்களையும் உனது கணையால் மயக்கி வெற்றிகண்டது போல் சிவனையும் மயக் கலாம் என்று நினைத்தீரா? சோகமாகிய தீயில் நானும் எரிகின்றேன். நீர் போன இடத்துக்கு நானும் வருகிறேன்'' எனப் புலம்பி அழுதாள் இரதிதேவி. மேலும், இரதியின் கவலைக்கு எடுத் துக்காட்டாக ஒரு பாடலைக் கவனிப்போம்!

''பொன் செய்தார் முடிகாணேன் அழகொழுகுந்
திருமுகத்துப் பொலிவு காணேன்
மின்செய் பூணணி குலவும் புயங்காணேன்
அகன் மார்பின் மேன்மை காணேன்
கொன்செய் பூங்கணை காணேன் சிலை காணேன்
ஆடல்புரி கோலங் காணேன்
என் செய்வேன் என கணவா என்னை யொழித்
தெவ்விடத்தே யிருக்கின் றாயே.''

இவ்வாறு கணவனை இழந்து அரற்றுகின்ற ஒரு பெண்ணின் இயல்பைக் கச்சியப்பர் காட்டுகின்ற பொழுது உண்மையான பெண்மையின் மென்மைத் தன்மையும், கணவன்மேல் அவள் வைத்த மாறாத அன்பும் ஒருங்கே புலப்படுகின்றன. கச்சியப்பர் காட்டும் பெண்மையின் பெருமைக்கு மன்மதனின் மனைவி - இரதி - சிறந்த எடுத்துக்காட்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து உமையம்மை தவம் எவ்வாறான வலிமை வாய்ந்தது என்பதைக் கவனிப்போம். உலகநாயகியான பார்வதிதேவியார் மேற்கொண்ட தவத்தின் உறுதிப்பாட்டைச் சிவபிரான் சோதித்த வரலாறு உலகோர் அனைவரும் உன்னிப் பார்க்க வேண்டும். முதலிலே ஒரு விருத்தப் பிராமண வேடங் கொண்டு பார்வதிதேவியின் தவச் சாலையை நோக்கிச் சென்றார் சிவபெருமான். காவலர்களின் அனுமதியுடன் பார்வதி தேவியார் இருக்குமிடத்தை அவர் அணுகினார். முதியவரைக் கண்டதும் உள்நின்றோர் கை கூப்பித் தொழுது வரவேற்றனர். எம்பெருமான் அவர்களை ஆசீர் வதித்து விட்டுத் தேவியாரை நோக்கி அவர் தவம் செய்கின்ற காரணத்தை வினாவினார். எம்பெரு மானின் வினாவுக்குத் தேவியாரின் தோழியர்களே விடை கூறினர். சிவபிரான் தன்னிடம் வந்து, தன்னை மணம்புரிய வேண்டும் என்ற குறிக்கோளு டனே தேவி தவம் இருக்கிறார் என்று அவர்கள் கூறினர்.

இதனைக் கேட்ட முதியவர். இது வீணான செயல் என்றும் சிவபிரான் எளிதில் வெளியே வரமாட்டார் என்றும் கூறினார். அதுவுமன்றி சிவபிரானை இழித்துப் பேசினார். பார்வதிதேவி இதனைக் கேட்டுச் சகிக்க முடியாத முதியவரை வெளியே அனுப்பும்படி கட்டளை இட்டாள். ஈற்றிலே தன் கருத்தை வெளியிட்டார் முதியவர். பார்வ தியை மணஞ் செய்யும் பொருட்டே தாம் அங்கு வந்ததாகவும் கூறினார்.

அதனைக் கேட்டதும் அம்மை சினந்தார். அவ் வேளையில் வந்தவரின் விருத்த வேடம் கலைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபிரானின் சுயவடிவம் காட்சி அளித்தது. அம்மையார் மனம் மாறினார்; விழுந்து வணங்கினார். எம்பெருமானும் அதனை ஏற்று நாளை வந்து மணஞ்செய்வேன் என்று கூறினார். மலைமகளுக்கு வெற்றி; மலையரசனுக்கு மகிழ்ச்சி; பார்வதிதேவியின் உறுதிப்பாட்டையும் முதியவரிடத்தில் காட்டிய எதிர்ப்புரைகளையும் அழகான பாடலொன்றில் கச்சியப்பர் எடுத்துரைக்கின்றார். அதாவது சிவபிரான் தன்னை வந்து மணஞ்செய்யாவிட்டாலும் தான் தவத்தை விடமாட்டேன் என்று முதியவரை நோக்கி கூறுகின்ற இடம் நயக்கத்தக்கது.

"முடிவிலா துறை பகவனென் வேட்கையை முடியாது
விடுவ னென்னினுந் தவத்தினை விடுவனோ மிகவின்னங்
கடிய நோன்பினை யளம்பில செய்துயிர் கழிப்பேன் நா ன்
நெடிது மூத்தலின் மயங்கினை பித்தனோ நீயென்றாள்."

அதுவுமன்றி முதற்கடவுளாகிய சிவபிரானை விலக்கி, அவரை நிந்தித்துக் கூறுகின்ற முதிய அந்தணரை மேலும் சினந்து, அன்னிய புருடன் மாட்டு மனம் வைத்து இல்லறத்தில் தவறி நின்ற மகளிர் போன்று, பிராமணராக இருந்தும் தமது தலைவராகிய சிவபெருமானை நிந்திப்பது பொருத்தமற்றது என்று கூறுகின்றாள் உமையம்மை.

காஞ்சியிலிருந்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்கின்ற உமையம்மை, சிவனைப்பற்றிய பெருமைகளை எல்லாம் எடுத்துக்கூறி உணர வைக்கிறாள். அதுவுமன்றி, அந்த இடத்தை விட்டு விலகிப்போக நினைக்கிறாள் உமையம்மை. இந்தச் சமயத்தில்தான் எம்பிரான் பிராமண வடிவத்தினின்றும் நீங்கி, இடபவாகனத்தில் பூதகணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழக் காட்சியளிக்கிறார். அம்மையாரது தவத்தின் பெருமையும் கற்பின் திண்மையும் உறுதிப்பாடான தவமும் அஞ்சாது எடுத்துரைத்த நல்வாக்குகளும் அனைவராலும் போற்றுதற்குரியன.

முறைப்படி திருமணம் புரிவேன் என்று கூறி, அவ்விடத்தை விட்டு அகன்று செல்கிறார் சிவபெருமான். உலகத்தவருக்கு அந்தணர்கள் சாட்சியாக, அக்கினி சாட்சியாக, எப்படி ஒரு கன்னிகையை ஏற்றுக் கொள்வது என்ற முறைகளைக் காட்டிக் கன்னிகாதானம் செய்யப்படுகின்ற ஒழுங்குகளைக் கச்சியப்பர் சிறப்பாகக் காட்டுகின்றார். எம்மவர் பெரிதும் பின்பற்றக் கூடியவகையில் முறைப்படி இத்திருமணக் காட்சி காட்டப்படுகின்றது. மாணிக்க வாசக சுவாமிகள் திருவாசகத்திலே திருச்சாழல் என்ற பகுதியில் எம்பெருமானின் திருமணத் தத்துவத்தை அருமையாகக் காட்டுகின்றார்.

"மலையரசன் பொற்பாவை வாள்நுதலாள் பெண் திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடி
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் யலங்கிடுங்காண் சாழலோ"

— திருவாசகம்

எனவே, இறை நிலையில் காட்டப்பட்ட திருக் கல்யாணம் அனைத்தும் உலகத்தவருக்கு எடுத்துக் காட்டாகவே அமைந்துள்ளன. இல்லற தர்மம் ஓங்கு வதற்கு இந்நிலை இன்றியமையாததாகும். ஆனால், என்றும் "பவன் பிரம்மச்சாரியாகும் பால்மொழி கன்னியாகும்" என்றும் "அன்னையே பின்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் கன்னியென மறை பேசும் ஆனந்த ரூப மயிலே'' என்றும் குறிப்பிடுவது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. உலக இயக்கத்துக்கே இவையனைத்தும் காட்டப் பட்டவை என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

''பூசனை புரிந்த பின்னர்ப் புவனமீன் றாள்தன் கையை
பாசமதகன்ற தொல்சீர்ப் பரஞ்சுடர் கரத்துள் வைத்து
நேசமொ டளித்தே னென்னா நெடுமறை மனுக்கள் கூறி
வாசநல் லுதக முய்த்தான் மருகனென் றவனை யுன்னி''

இமயமலை அரசன் கன்னிகாதானம் செய்து கொடுத்த தன்மையை எடுத்துக்கூறி, உலகியல் முறையிலேயும் திருமண வைபவத்தில் கன்னிகா தானம் சிறப்பிடம் பெறுகின்றது என்பதனையும் உணர வைக்கிறார். கன்னிகாதானம் செய்த பின்பு, ஒரு பெண் புகுந்த வீட்டுக்கே உரியவளா கிறாள். அத்தோடு பெற்றோரின் தொடர்பான ஆசௌசம் எதுவும் இப் பெண்ணுக்கு இல்லை என் பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து கச்சியப்பர் காட்டிய பெண்ணின் பெருமைக்கு கார்த்திகைப் பெண்களின் வரலாறு எடுத்துக்காட்டாக அமைகின்றது. திருமால் முதலிய தேவர்கள் எல்லோரும் முருக அவதாரத்தைக் குறித்து மகிழ்ந்தனர். இந்நிலையில், சரவணப் பொய்கை யில் அவதரித்த முருகப் பெருமானுக்கு இப்பெண் களே பாலூட்டி அணைக்க வேண்டும் என்று கற் பிக்கப்பட்டது. உடனே பெண்கள் ஆறுபேரும் சரவணப் பொய்கைக்குச் சென்று முருகப் பெருமானை வணங்கி நின்றனர். ஆறு பெண்களும் உவந்து போற்றுதற்குரிய வகையில் ஆறு வடிவங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நின்றான் குழந்தை முருகன். பெண்கள் அறுவரும் ஆறு குழந்தைகளையும் தனித்தனி கட்டியணைத்துப் பாலூட்டினர். குமரப்பெருமானும் அதனை ஏற்று மலர்ப்படுக்கையில் இருந்து பற்பல விளையாட்டுக்களை நடத்துகிறார்.

அங்கு கார்த்திகைப் பெண்கள் வணங்கி நிற்கச் சிவபெருமான் அவர்களுக்கு வரம் அருளுகின்றார். அப்பெண்களால் வளர்க்கப்பட்ட காரணத்தினால் குமரப்பெருமானுக்குக் கார்த்திகேயன் என்ற பெயர் ஏற்படலாயிற்று. இந்தத் தினத்தில் யார்யார் விரத நியமங்களை மேற்கொள்ளுகிறார்களோ, அவர்களுக் கெல்லாம் ஏற்படும் குறைகளை நீக்கி, முத்திப்பேற்றை நல்குவோம் என்று மொழிகின்றார் சிவபெருமான். இதனைவிளக்கும் பாடல் கந்த புராணம் சரவணப் படலத்திலே இடம் பெற்றுள்ளதைக் கவனிப்போம்:

"கந்தன்றனை நீர்போற்றிய கடனால் இவன் உங்கள்
மைந்தன் எனும் பெயராகுக; மகிழ்வால் எவரேனும்
நுந்தம்பக லிடை இன்னவன் நோன்றாள் வழிபடுவோர்
தந்தங்குறை முடித்தேபரந் தனைநல்குவம் என்றான்."

எனக் காட்டுகிறார் கச்சியப்பர்.

மேலும் கந்தபுராணம் யுத்தகாண்டத்தின் முடிவை நோக்குவோம். சூரபன்மன் மடிந்துவிட்டான் என்ற செய்தி பதுமகோமளை என்ற அவனுடைய மனைவியின் காதில் விழுகிறது. அந்தக்கணமே அப்பெண்மணியின் ஆவி நீங்கியது. உயர்ந்த தலையாய கற்பின் திண்மைக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். துயரச் செய்தியைக் கேட்டவுடன் உயிர் நீத்த பதுமகோமளை அசுர குலத்தவளாயினும், தேவ குலத்திலும் மேம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட கற்பு நெறியை வெளிப்படுத்தினாள் என்பது ''பெண்மைக்கு இணையுண்டோ'' என்று பேசு வதற்கு உரிய ஒரு மகத்தான இடமாகக் கருதக் கூடியது.

மற்றோரிடத்தில் கந்தபுராணம் தெய்வயானை திருமணப் படலத்தை நோக்குவோம்! மகபதியாகிய இந்திரன் தம்மை அசுரர்களின் கொடுமையினின் றும் மீட்டுப் பழையபடி தமது பதவியைத் தந்தரு ளிய முருகப் பெருமானுக்கு எவ்வாறு நன்றி செலுத்துவது என்று சிந்தித்தான். ஈற்றிலே தனது மகள் தெய்வயானையை முருகப் பெருமானுக்கு மணம் முடித்து வைப்பதெனத் தீர்மானித்தான். தேவர்கள் அனைவருக்கும் இதனைத் தெரிவித்தான். எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். தேவயானையா கிய குஞ்சரி மணமகளாகத் திருப்பரங்குன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். இந்த நேரத்தில் தேவேந்திரன் முருகப்பெருமானை வணங்கித் தனது எண்ணத்தை வெளியிட்டான். இதனை —

''கன்னின்ற மொய்ம்பின் அவுணக்களை கட்டல் செய்தாய்
இந்நின்ற தேவர் சிறை மீட்டனை என்றனக்கு
முன்னின்ற தொல்சீர் புரிந்தாயது முற்றும் நாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன் செயத் தக்க துண்டோ!''

என்ற பாடல் மூலம் கச்சியப்பர் வெளிப்படுத்தி யுள்ளார்.

தெய்வேந்திரன் தனது மகள் தெய்வ யானையை வதுவை செய்து கொள்ளும்படி கந்தக் கடவுளைக் கேட்டதற்கு எம்பெருமானும் இசைந்தரு ளினார். ஐம்பத்தாறு தேசத்து அரசர்களுக்கும் முசுகுந்தச் சக்கரவர்த்தி முதலியோருக்கும் திருமண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலை அனுப்பப்பட்டது. திருமண நிகழ்ச்சியைத் தரிசிக்க வந்தவர்கள் அடைந்த பேற்றினைப் பின் வருமாறு கச்சியப்பர் காட்டுகிறார்.

"கையிலார் கைகள் பெற்றும் காலிலார் கால்கள் பெற்றும்
மொய்யிலார் மொய்கள் பெற்றும் மூங்கைகள் மொழியைப் பெற்றும்
மையல்சேர் குருட ரானோர் வாள்விழி பெற்றுஞ் சென்றார்
ஐயன்மேல்உள்ளம்வைத்தார்க்கனையதோ அரிதுமாதோ"

இத்தகைய அற்புதச் சம்பவங்கள் பல நிகழ்ந்து கொண்டேயிருக்க, தெய்வயானை திருமணம் திருப்பரங்குன்றத்தில் எழுச்சியாக நடைபெற்றது. அம்மையாரை மணவறைக்கு அழைத்துச் செல்கின் றனர். பாதை கரடுமுரடாக அமைந்திருக்கிறது. குஞ்சரியின் பாதம் மிக மென்மையானவை. இந்த மெல்லிய பாதங்கள் பரங்குன்றத்துப் பனிமலையில் ஏறிச் செல்வதைக் கச்சியப்ப சிவாச்சாரியார் மிக மிக நயமாக எடுத்துரைக்கின்றார். முதலில் பாட லைப் பார்ப்போம்.

"பஞ்சுதனின் மெல்லடி பனிப்பவரை யின்பால்
குஞ்சரி நடந்தசெயல் கூறுபுது மைத்தோ
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி தீயேன்
நெஞ்சக அடுக்கலினும் நின்றுலவும் என்றால்."

''மென்மையான பாதங்களையுடைய தெய்வயா னையின் திருவடிகள் இப்பனிமலையிலே நடந்து சென்றது என்பதில் என்ன புதுமை இருக்கிறது? வடிவேலனுடைய திருவடிகள் தீயவனாகிய எனது நெஞ்சக் கல்லிலே உலவுவது தான் பெரிய புதுமை யான செயல்'' என்று கச்சியப்ப சிவாச் சாரியார் நயமாகக் காட்டுகிறார். இதில் அம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரின் திருவடி மென்மையும் கவிஞரின் திண்ணிய பக்தியும் ஒரு சேரக் காட்டப்படுகின்றன. இவ்வாறு நடந்து திருமண மண்டபத்தை அடைந்த அம்மையாரை மணவறையில் அமைத்திருந்த பீடத்தில் இருத்திச் செய்ய வேண்டிய உபசாரங்கள் யாவும் செய்தபின், இந்திரனும் சசியும் அம்மையாரின் திருக்கைகளை ஐயன் கரத்தின் மேல் வைத்துத் தாரை வார்த்துக் கொடுத்தனர்.

"மருத்துவன் மாமறை மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில் ஓண்புனல் உய்ப்பக்
கரத்திடை ஏற்றணி னால்கழல் சேர்ந்தார்க்கு
அருத்தி கொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன்"

தெய்வயானை திருமணத்தில் நாம் காணும் மணமகள் பண்பு, இல்லற வாழ்வுக்கு வழிகாட்டுகின்ற திருமண ஒழுங்கு, மணமகளின் பெற்றோர் பெற்ற மகிழ்ச்சி ஆகியவற்றை ஒருசேரக் காணுகின்றோம். நக்கீரர் திருமுருகாற்றுப் படையிலே

"மறுவில் கற்பின் வாழ்நுதல் கணவன்"

என்று முருகப்பெருமானை அறிமுகஞ்செய்து வைக்கிறார்.

கச்சியப்பர் காட்டிய பெண்மையிலே வள்ளி நாச்சியார் சிறப்பிடம் பெறுகின்றார். பூவுலகத்தில் வைத்துப் போற்றப்பட்ட சிறப்பு இவ்வம்மையாருக்கு உண்டு. நம்பிராசனின் தவத்தினால் மேற்பாடி என்ற இடத்திலே அமைந்த வள்ளிமலையை ஆட்சி செய்தவன் நம்பிராசன். தனக்கொரு பெண் மகவு வேண்டும் என்று குறிஞ்சிக் குமரனை வழிபட்டு நின்ற நேரத்தில், அம்மலைச்சாரலில் பெண் மகவு ஒன்றைக்கண்டு மகிழ்ச்சியோடு அணைத்

தெடுத்தான். உவகைக் கடலில் மிதந்தவாறு உள்ளன்புடன் அதனை எடுத்துச்சென்று மனைவியிடம் கொடுத்து, வள்ளி என்னும் நாமஞ்சூட்டி வளர்த்தான் நம்பிராசன்.

பிள்ளை வளர்ந்து வந்ததும், வேடுவர் மரபுப்படி தினைப்புனக்காவல் அப்பெண்ணுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த இடத்திலேதான் குறிஞ்சிக்குமரன் அருள் விளையாடல்களையும் முற்பிறப்பிற் செய்த தவம் வந்துகைகூடுகின்ற சந்தர்ப்பத்தையும் அம்மையார் அறிவதற்கு இடமேற்படுகிறது. காவல் காக்கும் கன்னிப் பெண்ணிடம் முதலில் வேடுவவடிவத்திலே வந்தான் வேலவன். நயமாகப்பேசி வள்ளியின் உள்ளத்தைத் திருப்புவதற்கு முனைகின்றான் பெருமான்.

"நாந்தகம் அனைய உண்கண் நங்கைகேண் ஞாலந்தன்னில்
ஏந்திழை யார்கட் கெல்லாம் இறைவியாய் இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப் போயினார் புளினரானோர்க்
காய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும் அயன்படைத்திலன் கொல்
என்றான்"

என வியப்புத் தோன்றப் புனைந்துள்ளார் கச்சியப்பர்.

தமிழர் பண்பாட்டில் களவு மணம், கற்புமணம் என்ற இரண்டும் இடம்பெற்று வந்துள்ளன. ஒருவனும் ஒருத்தியும் தமக்குள் தாமே இசைந்து மணந்து கொள்வது களவொழுக்கம் காட்டும் மணமாகும். இதனை எடுத்துக் காட்டுவதாகக் கச்சியப்பசிவாச்சாரியார் வள்ளி திருமணத்தை உணர்த்துகிறார். தினைப்புனத்தில் காவல் காத்துநின்ற வள்ளியிடம் குருவடிவில் வந்த குமரன் ஏதேதோ பேசுகின்றார். தன்னைப் பார்க்கும்படி கேட்கின்றார். அம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரின் ஊருக்குப் போகும் வழியைக் காட்டும்படி வேண்டுகின்றார். பதில்கிடையாமல் நெஞ்சம் உருகி நிற்கின்றார். இதற்கிடையில் நம்பிராசன் அங்கே வருகின்றான். முருகப்பெருமானும் வேங்கைமரமாக மாறி நின்றார். நம்பிராசனுக்கு எழவேண்டிய அதிசய அறிவைக் குறைத்து, ''இந்த மரம் நல்ல நிழலாக இருக்கட்டும்'' என்று கூறிவிட்டுப் போகின்றான். ஈற்றில் வயோதிப வடிவந்தாங்கி நம்பிராசனுக்கும் விபூதி கொடுத்து அருள் விளையாட்டுக்களைக் காட்டுகின்றார்.

இச்சந்தர்ப்பத்தில் வள்ளியம்மையும் புறத்தே ஓடி மறைய நினைக்க, ஆனைமுகத்தோனை அவ்விடம் அழைத்து அச்சம் ஊட்டுகின்றார் பெருமான். ''வேழம் காத்தருள்க'' என்று அபயக்குரல்எழுப்பி நின்ற பொழுதே உண்மையான முருகக் காட்சி தோன்றுகிறது. தொழுது, அழுது, வணங்கி, உருகி நிற்கின்றார் வள்ளி நாச்சியார். நம்பிராசனால் இத்திருமணம் நிறைவேற்றப்படுகிறது.

இத் திருமணம் மண்ணுலகை வாழ்விக்க எடுக்கப்பட்ட ஒப்பற்ற திருமணமாகும். ''தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே'' என்ற நிலையில் பக்குவமுள்ள ஆன்மா சிவபரம்பொருளை அடைந்து நிற்கும் பேரின்ப நிலை இங்கே உணர்த்தப்படுகிறது.

கந்தபுராணத்தில் உள்ளபொருள் எந்தப் புராணத்திலும் இல்லை என்பர். எனவே, புராணங்களை வெறும் புனைகதைகள் என்று தள்ளிவிடாது அவற்றின் தத்துவங்களை உணர்ந்து போற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய கடமை எமக்குண்டு. நூலாசிரியர் கச்சியப்பர் காட்டிய பெண்மைச் சிறப்பிலே மன்மதனுடைய மனைவி இரதிதேவியின் உயர்ந்த கற்பு இமய மலையில் உமையம்மையின் தவத்தின் உறுதிப்பாடு கார்த்திகைப் பெண்கள் பெற்ற பெருமை, சூரபன்மன் மனைவி பதுமகோமளையின் தலையாய கற்பு, தெய்வயானை அம்மையின் தவம், வள்ளி நாச்சியாரின் குறிக்கோள் ஆகியவை சிறப்பாக உணரக்கிடக்கின்றன, என்பதைக் கூறி நிறைவு செய்வோம்.

"புன்னெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி"

---

உ

**கந்தர் அநுபூதி**

எந்தா யும்எனக் கருள் தந்தையும் நீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா! கதிர்வே லவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கம்பர் காட்டிய பெண்மை

"பெற்று வளர்த்தும் வித்தை தனைப்
பேணிக் கொடுத்தும் பெயர்கொடுத்தும்
பற்ற வரும்பா லமுதளித்தும்
பகைத்த வறுமைப் பயந்தீர்த்தும்
கற்ற முதனூல் திருவழுந்தூர்க்
கம்பன் தழையக் கருணை செய்தோர்
மற்றும் புலவோ ரையும் வாழ
வைத்தார் சோழ மண்டலமே"

'கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்க் கிதயம் களியாதே' என்று பெருமைபடப் பேசப் பட்ட சிறப்பு, கம்ப இராமாயணத்துக்கு உண்டு. "கல்வியிற் பெரியன் கம்பன்" என்று போற்றப் படுபவரும் 'கம்பனைப் போல் வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை' என்று புகழ்ந்து பேசப்படும் கவிஞ ரும் இவரேயாவர். கருத்துவழி நாம் பார்க்கும் போது வள்ளுவன் பெற்ற மாபெரும் கவிஞன் கம்பன் என்று சொல்லி விடலாம். இராமாயணப் பாடல்களில் அறநெறியும் கற்பின் திண்மையும் அரசியல் ஒழுங்கும் ஆத்மீக சிந்தனையும் ஒன்றாகச் சேர்ந்து மிளிர்வதை நாம் காணலாம். இவற்றை எல்லாம் செந்தமிழில் குழைத்துத் தேனாய் - இன்ன முதமுமாய்த் - திரட்டித் தருகிறார் கம்பநாட்டாழ் வார். 'சன்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி' என்ற பாடலடியிலே குறிப்பிட்டபடி சான்றோர் கவி என்ற சிறப்பு கம்பன் கவிதைகளுக்கு முற்றி லும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலிடத்து மிகவும் நன்றியுள்ளவராக விளங்குகின்றார் இப் புலவர். பன்னிரண்டாம் நூற்றாண்டிலே செந் தமிழ்ப்பற்று மிகுந்ததும் இலக்கண வரையறை யுள்ளதுமான காவியமாகக் கம்பராமாயணம் மிளிர்கிறது. கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்று போற்றுகிறோம். அவரே தனது அனுபவத்தில் ''செஞ்சொற்கவி இன்பம்'' என்று எடுத்துக்காட்டு கிறார். அகத்தியரைக் குறிப்பிடும் இடத்தில் 'தழற் புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்'' என்றும் செந்தமிழ்ப்பற்றைத் திறம்பட உரைக்கின்றார். தன்னை ஆதரித்து, செந்தமிழில் இராமகாதை பாட வைத்த நன்றியைக் காவியம் முழுவதிலும் ஆங் காங்கு காட்டுகின்றார். அதுவுமன்றி சடையப்ப வள்ளலின் கொடையின் பெருமையை மற்றொரு தனிப்பாடலில் விளக்குகின்றார்.

> ''மோட்டெருமை வாவிபுக்கு முட்டுவரால் கன்றென்று
> வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே - நாட்டில்
> அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
> உடையான் சடையப்ப னூர்''

இவ்வாறு தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலை தனது புலமையினால் போற்றி நிற்கிறார். இராம பக்தியை உள்ளத்திலே பதித்து ஆட்சித்துறை, சமு தாயத்துறை, குடும்பவாழ்வு, கற்புநெறி ஆகிய வற்றை ஆங்காங்கு காவியத்தில் இடம்பெற வைக் கிறார். கம்பர் காட்டிய பெண்மைச் சிறப்புக்களையும் கற்பு மேம்பாட்டையும் எடுத்து விளக்குவதே இக்கட்டு ரையின் நோக்கமாகும். அத்துடன் பெண்மைப் பண்புக்கு மாறானவர் அடையும் துன்பங்களையும் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொற்பின் நின்றன பொலிவு; பொய்யிலார்
நிற்பின் நின்றன நீதி; மாதரார்
அற்பின் நின்றன அறங்கள்; அன்னவர்
கற்பின் நின்றன கால மாரியே"

அறச்செயல்களுக்கும், இயற்கை நிகழ்வுகளுக்கும் பெண்களின் அன்பும் கற்பும் காரணமாய் அமைந்ததை ஈண்டு காட்டுகிறார்.

விசுவாமித்திர முனிவரும் அவரது தவம் காக்கச் சென்ற இராம இலக்குவரும் சென்ற கொடிய வனத்தில் எதிர்ப்படுகிறாள் தாடகை. இராவணனின் ஏவலால் முனிவர்களின் தவத்தையும் வேள்வியையும் கலைத்து நிற்பவள் இவள். நெருப்பைக் கக்கும் கண்களோடும், நிலத்தைக் குழியாக்கும் கால்களோடும், உரப்பிய பெருந்தொனியோடும் தாடகை இவர்கள் முன்னே வருகிறாள். முனிவரையும் இராம இலக்குவரையும் கொல்வதற்காக எதிரே வந்த தாடகையை இராமபிரான் காண்கிறான்.

ஒரு கணம் 'பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்' என இராமனது உளப்பாங்கை மெல்லெனக் கூறுகின்றார் கம்பர். ஆனால் முனிவர்பிரான் 'அரக்கியைக் கொல்வது அறமே ஆகும்' என்று உரைத்தார். அதனைக் கேட்டதும் அம்பை வீசி வெற்றி கண்டான் இராமன். இந்த இடத்தில், பெண்மைப் பண்புக்கு மாறானவர்களை அழித்து ஒழிப்பதும் அறம் என்பதைக் காட்டுகின்றார் கம்பர்.

இராமாயணத்தின் உயிரான ஒரு இடத்தைக் கவனிப்போம். மிதிலாபுரியிலே கன்னிமாடத்திலே தோழியர் நடுவிலே நின்ற சீதாபிராட்டியை இராம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான் காண்கிறார். இந்நிகழ்வு இயற்கையே. இராமபிரானை மிதிலைக்கு அழைக்கிறதென்பதும் விதியூட்ட, சீதாபிராட்டியை அவர் தற்செயலாகக் காணுகின்றார் என்று கூறுவதும் கம்பனின் கவித்துவத்தின் சிறப்பாகும். இராமகாதையிலே வைத்துப் பார்க்கும்போது,

"மையறு மலரின் நீங்கி, யான்செய் மாதவத்தின் வந்து,
செய்யவள் இருந்தாள் என்று செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிகமழ் கமலச்செங்கண்
ஐயனை ஒல்லை வாவென்று அழைப்பன போன்றதம்மா"

என்று வியப்புறச் செய்கின்றது.

இந்த இடத்தில், சீதையின் அழகுநலன்களை எடுத்துக்கூறி, 'இப்பாவை தோன்றலால் அழகெனும் அதுவுமோர் அழகு பெற்றது' என்று கூறுகின்றார். மேலும் கவனிப்போம் இராமபிரானதும் சீதாபிராட்டியினதும் பார்வைகள் ஒன்றையொன்று சந்தித்த இடத்தில் அருமையான கவிதை ஒன்றை எமக்கு அறிமுகஞ்செய்து வைக்கின்றார் கம்பர்.

"எண்ணரு நலத்தினாள் இனையாள் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

எனக்கூறியதிலிருந்து அவர்களது நோக்கின் உளப்பாங்கைக் கவியரசர் காட்டும் விதம் நயத்தற்குரியது.

இதனையடுத்து, பிராட்டியின் தந்தையாகிய சனகன் அங்கு வந்த குமாரர் இருவருடைய வரலாற்றையும் முனிவரிடம் கேட்டறிந்து, தனது மகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்துக்கு ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குகளையும் "சிவதனுசு" என்ற வில்லை முறித்தவர்களுக்கே பிராட்டியைத் திருமணம் செய்து வைப்பதையும் கூறினான். இராமபிரானது வீரத் திறமையைத் தாடகை வதத்திலும் அகலிகையைப் பெண்ணுருவாக்கிய அற்புதத்திலும் காணக்கூடியதாய் உள்ளது. அதாவது கௌதம முனிவருக்கு அகலிகை என்ற மனைவி வாய்க்கப்பெற்றாள். ஆனால் இந்திரனின் சதியினால் அகலிகை கல்லானாள். இராமபிரானின் காலடிபட்டவுடன் அவள் எழுவாள் என்றும் சாபநீக்கம் சொல்லப்பட்டது. அதன்படி இராமபிரான் காலடிபட்டு அகலிகை எழுந்து நின்றாள்.

இதன் பின்னர் வில்லிறுக்கும் நிகழ்ச்சி இடம் பெற்றது. இராமபிரானுடைய முறைவந்தது. வீரர்களாலும் அரசர்களாலும் முறிக்க முடியாது இருந்த அந்தச் "சிவதனுசு" என்ற வில்லை இராமபிரான் கணப்பொழுதில் முறித்து வீழ்த்தினார். இந்தவீரச் செயலைக் கம்பநாட்டாழ்வார் "கையால் எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்" என்றுகூறி வியக்க வைக்கின்றார். வில் முறித்த வீரச் செயலைத் தொடர்ந்து சீதாகல்யாணம் நிறைவு பெற்றதைக் காண முடிகின்றது.

அடுத்து, கம்பர்காட்டிய பெண்மையின் குறை நிறைகளைக் கைகேயி மூலமும் கோசலை மூலமும் சீதாபிராட்டி மூலமும் அறியமுடிகின்றது. கூனியின் சபதத்தினால் மனம் மாறியவள் கைகேயி. தசரதனுக்கு விருப்பத்துக்குரிய மனையாளாக இருந்தும், மன்னனைச் சோதித்துவிட்டாள்! சொல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லம்புகளை வீசி மன்னன் மனத்தைக் கலக்கினாள். முன்பு வாக்குக் கொடுத்தபடி இரண்டு வரங்களையும் தரவேண்டும் என இறுமாப்புடன் கேட்டாள். அதாவது ஒருவரம் தன்மகன் பரதனுக்கு அயோத்தி அரசாட்சியைக் கொடுத்தல்; மறுவரம் இராமபிரான் காட்டுக்குச் சென்று பதினான்கு வருடம் காலத்தைக் கழித்தல் என்பன கைகேயி கேட்ட கொடிய வரங்களாகும்.

இவற்றைக் கேட்ட தசரதன் பதைத்து விழுந்து அரற்றியபின், ஒருவாறுதெளிந்து, முதல்வரத்தைத் தருவதாகவும் மற்றவரத்தை மறந்து விடவேண்டும் என்றும் கெஞ்சிக் கேட்டான். அது மட்டுமன்றி, இராமன் நாட்டைவிட்டு நீங்கினால் தனது ஆவியும் உடம்பை விட்டு நீங்கும் என்று சொல்லி நிலத்திலே விழுந்தான். கைகேயியோ கூனியின் ஏவுதலினால் இரக்கமற்ற நெஞ்சுடனே காட்சி அளித்தாள். உடனே தசரதன் ''என்மகன் வனம் ஆழட்டும்; நான் வான் உலகை ஆழ்வேன்; நீயும் உன்மகனும் வசைகொள்வீர்கள்'' என்று கூறி உயிர் துறந்தான்.

இராமபிரான் காட்டுக்குப் புறப்படுகின்றார். முதலில் தனது தாய் கோசலையிடம் விடைபெறப் போகிறார். கோசலையின் தாய்மைப் பண்பையும் நடுவுநிலையையும் கம்பர் காட்டிய பெண்மைச்சிறப்புக்கு உரிய இடமாகக் காண்கிறோம். கோசலையின் வார்த்தையைக் கம்பர் காட்டியவாறு காண்போம்.

''முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனோர்
குறைவி லன்னெனக் கூறினாள் நால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கோசலை கூறிய அறிவுரைகளை ஏற்றுச் சிற்றன்னை சுமித்திரையிடமும் விடை பெற்று, அன்னாரின் மகன் இலக்குமணனையும் அன்னையின் விருப்பப்படியே அழைத்துக்கொண்டு வனத்துக்குப் புறப்படுகிறார்.

இந்நிலையில் மற்றொரு காட்சியைக் கவனிப்போம். பெண்மையின் உயர்வுக்கும் கற்பின் திண்மைக்கும் இது ஒரு எடுத்துக்காட்டான இடமாகும். காட்டுக்குப் போகும் தவக்கோலத்துடன் மரவுரி உடுத்து சீதாபிராட்டியின் முன்னே போய் நிற்கின்றான் இராமபிரான். கானகம் சென்று தான் திரும்பி வரும் வரையும் வருத்தம் அடையாமல் மாமியாரோடு தங்கியிருக்கும்படி கூறியதைக்கேட்டாள் சீதாபிராட்டியார். தனது கணவன் காட்டுக்குப்போகிறான் என்றோ அரசை இழந்தான் என்றோ பிராட்டியார் கவலைப்படவில்லை. ஆனால், 'நான் போய் வருகிறேன் நீ வருந்தாமல் இங்கே இரு' என்ற வார்த்தைகள் தேவியின் செவியில் சுடக் கூடியதாக அமைந்தன. இதனால் பெருமூச்சுவிட்டு அழுது நிற்கின்றாள் பிராட்டியார்.

"காட்டின் வெம்மை நின் சீறடியால் தாங்க முடியாது" என்று இராமபிரான் எடுத்துரைத்த நேரத்தில், அதனைப் பிராட்டியார் ஏற்கவில்லை. "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு!" என்று கூறி மரவுரி உடுத்து இராமன் பின்னே செல்லப் புறப்படுகிறாள். அயோத்தி மக்கள் அழுது புலம்ப, இவர்கள் புறப்பட்டுச்சென்ற காட்சி உள்ளத்தை உருக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணத்தில் கம்பர் சூர்ப்பனகைக்கு ஒரு தனி இடம் கொடுக்கிறார். அரக்கர் குலத்தில் அரக்கத்தன்மையுடைய பெண்களும் இருந்தனர் என்பதை சூர்ப்பனகை வரலாறு காட்டுகிறது. கம்பர் காட்டிய பெண்களுக்குள் வஞ்சனை, பொய்ம்மை, முறையற்றகாதல், விடாப்பிடி ஆகியவை சூர்ப்பனகையிடம் குடிகொண்டிருந்தமையையும மற்றொரு புறத்தில் திரிசடை என்ற நாமங்கொண்ட அரக்கப் பெண்ணிடம் தெய்வப்பண்பு மிகுந்திருந்தது என்பதையும் காட்டும் இடங்கள் சிந்தித்தற்குரியனவாகும். சூர்ப்பனகை தனது அண்ணன் இராவணன் மீது எழுந்த வெறுப்புக்காரணமாகசெயற்படத் துணிகின்றாள். இராமனை மயக்கித் தனது எண்ணத்தை முற்று விக்க நினைக்கிறாள். சூர்ப்பனகை இராமனை நோக்கி வந்த காட்சியைக் கம்பர் அழகாக நயமுறப் பாடுகிறார் அதாவது 'வஞ்சமகள் வந்தாள்; நஞ்சமென வந்தாள்; வஞ்சியென வந்தாள்; அன்னமென வந்தாள்; மஞ்ஞை என வந்தாள்' என்று வர்ணிக்கிறார். அரக்கிக்குரிய சுயரூபத்தை மாற்றித் தேவப்பெண்போல வருகின்றாள். வேகமாகப் பாய்ந்து பாய்ந்து வராமல் மென்மையாக அடியின் மேல் அடி வைத்து வருகிறாள். பாடலைக் கவனிப்போம்:

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"

இவ்வாறு மயக்குறும் தோற்றத்தோடு அங்கு வந்த சூர்ப்பனகையை இனங்கண்டு, இளவலாகிய இலக்குமணன் அவளைத் தன் கைவாளால் தாக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கள்ள வல்லரக்கி இவள்'' என்பதை இராமபிரானுக்கு அறிமுகஞ் செய்து வைத்தான். சூர்ப்பனகை பலவாறு புலம்பி வஞ்சின மொழிகள் கூறி, ''உங்களுக்கு உயிர்வாங்கும் கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்'' எனக் கூறிச் சென்றாள். இப்பெண்ணின் வெஞ்சின மொழிகளால் ஏர்க்கப்பட்ட இராவணன், சீதையைக் கவர்ந்து வரத் துணிந்தான் என்பதை ஆரணிய காண்டத்தின் இறுதிப் பகுதியிலே காணுகின்றோம்.

கிஷ்கிந்தா காண்டத்திலே இராவணனின் மாமனாகிய மாரீசன் சீதையைக் கவர்ந்து இராவணனிடம் ஒப்படைக்க நினைந்து, தனது மேனியினால் தீண்டாது கற்பின் செல்வியை அந்தரத்தில் தாங்கிக்கொண்டு இலங்காபுரிக்குச் செல்கின்றான். பொன்மானைத் துரத்திப் பிடிக்கச்சென்ற இராம, இலக்குமணர் மீண்டு, இச்செயல் மாயம் என்பதை உணர்ந்து, சீதாபிராட்டியைக் கானகம் எங்கும் தேடுகின்றனர். இடையில் சுக்கிரீவன் உதவி பெற்று அனுமனைக் காணுகின்ற பாக்கியத்தை அடைகின்றனர். சீதாபிராட்டியைக் கொண்டு சென்ற வழியினை ஒருவாறு உணர்ந்து, அனுமனை இலங்கைக்கு அனுப்புகின்றனர்.

இதற்கிடையில், அசோக வனத்தில் இருந்து சீதை கலங்குகின்ற நிலையை உயர்ந்த பெண்மைக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுகின்றார் கம்பர்.

'' அருந்தும் மெல் அடகு ஆர்இட அருந்தும்? என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என் உறுமோ? என்று விம்மும்
மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கு? என்று
மயங்கும்
இருந்த மாநிலம் செல் அரித்து எழவும் ஆண்டு எழாதாள் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமபிரானுக்குக் காய்கனி, கீரைகளைப் பரிவாக ஊட்டுவதற்கு இப்பொழுது யார்தான் இருக்கிறார்களோ! விருந்தினர்கள் தன்னைத் தேடி வந்தால், உபசரிக்க முடியாமல் எப்படி திண்டாடுகிறாரோ? இப்படி எல்லாம் ஏங்கி அழுது கொண்டிருந்த சீதை, தான் அடைந்திருக்கும் இந்தச் சோக நிலையை உன்னி உன்னி, இருந்த இடத்தை விட்டகலாது இருந்தாள் என்பதை இப்பாடல் காட்டுகிறது.

இல்வாழ்வின் உயர்ந்த நிலை - அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும் துறவிகளை உபசரித்தலும் என்பதைத் திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்களில் நாம் கண்டவாறு இங்கேயும் கம்ப நாட்டாழ்வார் எடுத்துக் காட்டுகிறார். சாதாரணமாகத் தனது சிறிய இன்பத்திற்காக வன்றித் தனது கணவனின் உபசரிப்புக்கும் விருந்தினரைப் பேணலுக்கும் குறைபாடு நேர்ந்து விட்டதே என்ற கலக்கம் சீதையை ஆட்டிப்படைக்கிறது.

மேலும், அனுமன் அசோக வனத்தில் சீதா பிராட்டியைக் கண்டு மகிழ்ச்சி பொங்கக் கூத்தாடி நின்ற நிலையில், இருவருக்கும் உரையாடல் ஏற்படுகிறது. பிராட்டி அனுமனை நோக்கி இன்னும் ஒரு மாத காலத்துக்குத்தான் இவ்விடத்தில் உயிர் தாங்கியிருப்பேன் என்றும் பின், உயிர் பிரிந்து விடும் என்றும் கூறி, கவலை மீதூர "என் கணவனுக்கு என்னிடத்தில் இரக்கமில்லை என்றாலும், தனது விரத்தைக் காத்துக் கொள்ளும்படி சொல்லி நிற்கிறாள். அத்தோடு ஒருமாத கால எல்லைக்குள் அசோகவனத்துக்கு வந்து, தன்னை மீட்டுக்கொண்டு போகாவிட்டால், நேரே கங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரைக்குச் சென்று தனக்கு ஈமக்கடனைச் செய்து முடிக்கும் படியும் வேண்டிநிற்கிறாள். அதனைக் கேட்டதும் பிராட்டியைத் தனது தோளில் வைத்துச் சுமந்து சென்று இராமபிரான் திருவடியில் சேர்ப்பிப்பேன்'' என்று அனுமனின் கூற்று அமைகின்றது.

கற்பின் செல்வியாய சீதாதேவியோ இதற்குச் சற்றும் இசையாது, தான் அவ்வாறு சென்று விட்டால், இராமனின் அம்புக்கு இடமில்லாமல் போய் விடும் என்று வீரம் செறிந்த வார்த்தைகளை உதிர்க்கிறாள்.

இவற்றை எல்லாம் கேட்டும், இலங்காபுரியில் வீரச்செயல்கள் பலபுரிந்து நின்ற அஞ்சனை மைந்தனாகிய அனுமன், வானவெளியைத் தாண்டி இராமபிரான் இருப்பிடத்தை அடைகிறான். அங்கு நின்று தெற்கு நோக்கித் தொழுது, சீதாபிராட்டி உயிரோடு இருக்கிறாள் என்பதைக் காட்டியதோடு ''கண்டனன்'' என்றும் ''கற்பினுக் கணியை'' என்றும் ''கண்களால்'' என்றும் ''தென்திசையில்'' என்றும் இராமனின் அவாவுக்கு ஏற்றமுறையில் சொல்லின் செல்வன் விடை பகருகின்றான். 'கண்டனன்' என்று தொடங்கியதே இராமன் அடைந்து நின்ற கலக்கத்துக்குப் பரிகாரமாக அமைந்த வார்த்தை ஆகும்.

மேலும் சீதாபிராட்டியைப் போற்றி அனுமன் கூறும் வார்த்தைகளைக் கவனிப்போம். கம்பர் காவியத்தில் பெண்மைக்குக் கொடுத்த பெரிய இடம் இது வாகும். அடையாளமாகக் கொண்டு வந்த சூடாமணியைப் பெற்று நின்ற சீதையின் பெருமிதமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணனோடு சீதாபிராட்டி எதிர்த்து நின்ற சிறப்பும், திரிசடை என்ற விபீடணனின் மகளாம் பெருமை பெற்ற அரக்கப் பெண் அசோகவனத்தில் சீதாபிராட்டிக்கு உறுதுணையாக விளங்கிய மாண்பும், கம்ப நாட்டாழ்வாரால் பல இடங்களில் எடுத்துரைக்கப் படுகின்றன. அரக்க குலத்திலும் திரிசடை, மண்டோதரி என்ற நாமங்களைக் கொண்ட கற்புடைப் பெண்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பதைக் கம்ப நாட்டாழ்வார் எடுத்துக் காட்டிச் செல்வது, ஆசிரியரின் பெண்மை பற்றிய உயர்ந்த கருத்துக்களுக்குச் சான்றுகளாக அமைகின்றன. இராம தூதனாகிய அனுமன் இராமபிரான் முன்னிலையில் வணங்கி நின்று கூறிய செய்தியைக் கம்பர் பாடலில் அழகாகத் தருகிறார்.

"விற்பெருந் தடந்தோள் வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தள்ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற் பிறப்பென்ப தொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்."

சீதாபிராட்டியின் உத்தமகுண நலன்களுக்கும், கற்பு மேம்பாட்டுக்கும் அனுமனின் இக்கூற்று அரண் செய்வதாக அமைந்துள்ளது. 'உன்பெரும் தேவீ' என்ற உரிமையும், தசரதனின் மருகி என்ற வாய்மையும், ஜனகனின் புதல்வி என்ற பெருமையும், என் பெருந்தெய்வம் என்று போற்றுகின்ற சிறப்புங் கொண்ட சீதாபிராட்டியைக் கண்டேன் என்று கூறுகிறான். அதுவுமன்றி, குரக்கினச்சாதிக்குப் பெருமையும் தேடித்தந்து விட்டாள் என்னம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுகிறான். உனது குலத்தையும் தனது குலத்தையும் பேணி, சிறை வைத்த இராவணனின் குலத்தைக் கூற்றுவனுக்கு ஈந்து, தேவர் குலத்தை வாழ்வித்தவள், என் குலத்தையும் எனக்குத் தந்தாள் என்று கூறுகிறான். இத்தகைய பெருமைகளை அடுக்கடுக்காகக் கூறிச் சீதாபிராட்டியாரைப் போற்றி நிற்கிறான் அனுமன்.

இதற்கிடையில் மானவீரன் கும்பகர்ணனின் அறிவுரையையும் கவனிக்க வேண்டியுள்ளது. ''அண்ணா! திட்டியின் விடமன்ன கற்பின் செல்வி யைச் சிறை விட்டிலையோ! இது விதியின் வன்மையே!'' என்று அண்ணன் இராவணனுக்கு எடுத்து உரைப்பதும், சீதாபிராட்டியின் கற்புமேம் பாட்டை அரக்கர் பக்கமும் அறிந்திருந்தது என்பதை யுணர வைக்கிறது.

அடுத்து, இராவணன் மனைவியாகிய மண்டோதரியின் உயர்ந்த பண்புகளைக் கவனிப்போம்: மயனுடைய மகள் என்ற பெருமைக்குரியவள் மண்டோதரி. அத்துடன் மூவுலகும் போற்றும் இராவணேஸ்வரனுடைய மனைவி என்ற தகுதிக்குமுடையவள். தங்கை சூர்ப்பணகையின் சதியினால், இராவணன் சீதைமேல் ஆசைவைத்தான்; அவளைக் கவர்ந்து சென்று அசோகவனத்தில் சிறை வைத்தான். இவற்றை எல்லாம் நன்கு கவனித்த மண்டோதரி தன் கணவனைத் திருத்துவதற்குப் பலமுறை முற்பட்டாள். ஆனால், அது முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரிலே மகன் இந்திரசித்துவை இழந்து, மண்டோதரி அரற்றுகின்ற இடம் உள்ளத்தைத் தொடுவதாகும். ''அஞ்சினேன் அஞ்சினேன் இச் சீதையென்று அமுதால்செய்த நஞ்சினால்இலங்கை வேந்தன் நாளை இத்தகையனன்றோ'' என்பது மண்டோதரியின் கூற்றாகும். மகனுக்குக் கிடைத்த முடிவு, தனது கணவனுக்கும் கிடைக்கப் போகின்றது என்பதை முன்னமே அறிந்து கூறிய கற்புக் கரசி, மண்டோதரி ஆவாள். விதியை வெல்ல யாரால் தான் முடியும்? இராவணேஸ்வரன் மாழப் போகின்றான். போர் தொடருகிறது. தம்பியாரையும் பிள்ளைகளையும் இழந்து தனித்து நிற்கிறான் இராவணன். நல்லுணர்வு மிக்க விபீடணன் மாத்திரம் இராமன் பக்கம் சென்று விட்டான். போர் நடைபெறுகிறது. எதிர்பார்த்த படி இராவணன் இராமன் அம்பினால் துளைபட்டு இறக்கிறான்.

இவ்வேளையில் அரக்கியரும் மண்டோதரியும், விபீடணனும் அழுது புலம்புகின்றனர். மண்டோதரியின் புலம்பல் படிப்பவர் மனத்தை உருக்குகின்றது. இராவணனின் வீரப்பிரதாபங்களை சொல்லிச் சொல்லி அழுகின்றாள். நயமாகக் கருத்து வெளிவருகின்றது. ''உன் மனச்சிறையில் ஜானகியை சிறைவைத்துக் காதல் பூண்டாய் என்று கருதியோ இராமனுடைய அம்பு உன் உடல் முழுவதும் துளைத்துத் துளைத்துப் பார்த்திருக்கிறது'' என்று புலம்பும் மண்டோதரியின் கூற்றுக்கள் எமது நெஞ்சத்தை உருக்குகின்றன. இப்பாடலைக் கவனிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்புஎடுத்த
திருமேனி ; மேலும் கீழும்
எள்இருக்கும் இடம் இன்றி, உயிர் இருக்கும்
இடம் நாடி, இழைத்த வாறோ
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?"

இவ்வாறு அழுது புலம்பிய மண்டோதரி, தனது கைகளால் இராவணனைக் கட்டித் தழுவிய படி தன்னுயிரையும் நீத்தாள். மயன் மகள் மண்டோதரியின் கற்பின் திண்மையை தேவரும் மூவரும் யாவரும் போற்றினர் ; சைவத்திருமுறையிலும் அவளது பெயர் இடம்பெறலாயிற்று.

ஆகவே தொகுத்து நோக்கும் பொழுது கம்பர் காட்டியபெண்மையில் சீதை, கோசலை, திரிசடை, மண்டோதரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் என்பதைக்காட்டி கட்டுரையை நிறைவு செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பரஞ்சோதி முனிவர் காட்டிய பெண்மை

சிறப்புடைய புராணங்களில் ஒன்றாக விளங்குவது திருவிளையாடற் புராணம் ஆகும். இதனைச் சைவத்தின் ஆத்மீக வரலாற்றை உணர்த்தும் உயர்ந்த புராணம் என்று சொல்லுவர். இறைவனால் நடாத்தப்பட்ட திருவிளையாடல்கள் மதுரை மாநகரை இடமாகக் கொண்டு எழுந்தவை. பதினாறாவது நூற்றாண்டிலே தமிழ்மொழியிலே இறைவனது திருவிளையாடல்கள் பற்றிய இலக்கியத் தோய்வுள்ள திருவிளையாடற் புராணம் என்னும் நாமத்தைக் கொண்ட இந்நூல் பரஞ்சோதி முனிவரால் பாடப்பட்டது. பதினெண் புராணங்களில் ஒன்றாகிய வடமொழியிலமைந்த கந்தபுராணத்தில் ஒருபகுதி ''ஆலாசிய மான்மியம்'' என்பது. இது வடமொழியில் பாடப்பட்டது. இதனையே பரஞ்சோதி முனிவர் தமிழில் பாடியருளினார். இவை அறுபத்திநான்கு திருவிளையாடல்களையும் சிறப்பாக விரித்துரைப்பன ஆகும். ஆனால் இறைவனுடைய திருவிளையாடல்களைப் பற்றிக் கூறும் நூல்கள் பலப்பல. அவற்றுள் திருவிளையாடற் புராணம் என்னும் இந்நூல் செந்தமிழ் வல்லுனர்களாலும் சிவனருட் செல்வர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும் புலவர்களாக எழுந்தருளித் தமிழாய்ந்த காலம் கடைச்சங்க காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கூடலின் ஒண் தீந்தமிழ்'' என்று மாணிக்க வாசகர் போற்றுவதும் இதனாலேயே ஆகும். முத்தமிழையும் வளர்த்த இடம் மதுரை. சாதாரண பாமரமக்கள் ஒவ்வொரு இல்லக் கிழத்தியரையும் நோக்கி ''இவள் சிதம்பரம்'' என்றும் ''இவள் மதுரை'' என்றும் பேசிக்கொள்வது நகைச்சுவை யானதாகும். ஆனால் கருத்து வெகு ஆழமான தாகும். ஆடல்வல்லானுக்கு முதன்மையான அதிகாரம் கொடுக்கும் இடம் சிதம்பரம். அங்கயற் கண்ணி அம்மைக்கு முதன்மை கொடுக்கும் இடம் மதுரை. அங்கே நடராஜரின் ஆட்சி; இங்கே மீனாட்சியின் ஆட்சி. அங்கே சிவகாமி அம்மை, அப்பனுக்குப் பக்கத்தே நின்று அவன் அருள்பெற்று உலகத்தை இரட்சிக்கிறாள். மதுரையிலே மீனாட்சி அம்பாள் சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு முன்னே நின்று தனது ஆட்சியை நடாத்துகிறாள். எனவே மதுரை பெண்மைக்கு முதலிடம் கொடுக்கின்றது. பாணபத்திரன் என்ற இசைவல்லான் பொருட்டு இறைவனே எழுந்தருளி இசைப்போட்டி நடாத்திய இடம் மதுரை. பதஞ்சலி, வியாக்கியபாதர் என்ற முனிவர்கள் தரிசிக்கும் பொருட்டுத் தில்லையம்பலத்தில் ஆடிய இறைவன் வெள்ளியம்பலம் என்ற மதுரையிலும் நடனமாடினான் என்பது வரலாறு.

மதுரைவாழ் மக்கள் நித்தியகடன் முடித்து புராணநூல் கேட்டு பூசைகள் செய்து பூசை முடிவில் மூலமந்திரம் ஓதி வேள்விகள் ஆற்றினர் என்று கூறப்பட்டுள்ளது.

''வெம்மையால் விளைவு அஃகினும்
வேந்தர் கோல் கோடிச்
செம்மை மாறினும் வறுமைநோய்
சிதைப்பினுஞ் சிவன்பாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்ம்மை மாறிய பக்தியும்
பொலிவும்குன் றாவாய்த்
தம்மை மாறியும் புரிவது
தரும மந் நாடு."

அங்கயற்கண் அம்மையின் ஆட்சியிலே விளங்கிய தால் பாண்டி நாட்டுக்கு கன்னிநாடு என்றும் சிறப்புப் பெயர் உண்டு. அறச்சிந்தனையும் பக்திமேம்பாடும் இந்நகரில் வாழ்ந்த மக்களுக்கு ஏதுவாய் அமைந்திருந்தன. இன்றைக்கும் யாத்திரை செய்பவர்கள் மதுரை மீனாட்சி அம்பாளைத் தரிசிக்காமல் திரும்பமாட்டார்கள்.

திருவிளையாடற் புராணத் தொடக்கத்திலே வரும் பாடல் நூலாசிரியரின் தனித்துவமான பக்தியையும் அங்கையற் கண்ணியின் அருளாட்சியையும் எமக்குக் காட்டுவதாகும்.

"சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொருள் நல்குவ
சித்தியானை தன் செய்ய பொற்பாதமே."

அனைத்துச் சமய இலக்கியங்களிலும் புராணங்களிலும் குறிப்பிடப்பட்ட ஒழுங்கிலிருந்து சிறிது மாறி 'சத்தியாய்' எனத் தொடங்குகின்றது இப் புராணம். காரணம் மீனாட்சி அம்மையின் தனியரசாட்சியைக் காட்டுகின்றது எனலாம் மேலும் தமிழ் மொழிக்குரிய பெருமை இந்நூலில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. பரவையாரிடம் தூது அனுப்பியது தமிழ்; முதலை உண்ட பாலனை மீளவைத்தது தமிழ்; எலும்பைப் பெண் வடிவாக்கியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்; பூட்டப்பட்ட கதவைத் திறக்க வைத்தது தமிழ்; என்றுபாடி இந்த அற்புதங்களைச் செய்தது கன்னித்தமிழே என்று வியந்து போற்றுகிறார் நூலாசிரியர்.

பரஞ்சோதி முனிவர் அவர்கள் மீனாட்சி சுந்தர தேசிகர் என்பவருக்குப் புதல்வராக அவதரித்தவர். தமிழிலும் வடமொழியிலும் நிறைந்த புலமை உடையவர். மதுரை அங்கயற்கண்ணி அம்மையாரிடத்தில் நிறைந்த பக்தி கொண்டவர். அன்னையின் கட்டளைப்படி இறைவனின் திருவிளையாடல்களைப் புராணமாகப் பாடி முடித்தவர். மதுரைச் சொக்கேசர் சந்நிதியிலேயே இது அரங்கேற்றப்பட்டது. சங்க இலக்கியங்களிலும், திருமுறைகளிலும், ஐம்பெருங்காப்பியங்களிலும் நிறைந்த பயிற்சி பெற்றவர். தமிழ் இலக்கிய வரலாற்றில் மதுரைமாநகருக்குச் சிறப்பிடம் உண்டு. அத்துடன் சைவசமய வரலாற்றிலும் மதுரை உன்னத இடத்தை வகிக்கின்றது. ஆட்சி பீடத்தில் இருந்து அரசியற்றிய அங்கையற்கண்ணி அம்மையின் ஆட்சி பீடம் இதுவாக அமைந்தமையால் இங்கு பெண்மையின் பெருமை இறை நிலையில் வைத்துப் போற்றப் படுகின்றது. மீனாட்சி தனது கடைக்கண் பார்வையினால் அகில உலகையும் இரட்சிக்கிறாள். கடவுள் வாழ்த்துப் பாடலில் அன்னையின் அருள் ஆட்சியைக் காண முடிகின்றது.

''சுரும்பு முரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
யுத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலை போற்றி
கவுணியர்க்குப் பால் சுரந்த கலசம் போற்றி

இரும்பு மனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற் கண் எம்பிராட்டி
அரும்பு மிளநகை போற்றி
யாரணநூ புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.''

பொதுவாக நோக்கும்பொழுது நூல் முழுவதிலும் அன்னையின் அருட்கண் பார்வையினால் ஈர்க்கப் பட்ட ஆலவாய் அப்பனுடைய அருள் விளையாடல் களையே காணமுடிகின்றது. மூர்த்தி, தலம், தீர்த் தம் ஆகிய மூன்றின் சிறப்பும் ஒருங்கே பெற்ற மதுரைத் தலத்தின் விசேடங்களை இலக்கியங்க ளும் புராணங்களும் எடுத்து விளக்குவன ஆகும். இங்கு அமைந்த பொற்றாமரை வாவியைப் போற் றாதவர்கள் இல்லை. அதுவுமன்றி, சைவசித்தாந்த உண்மையோடு இணைத்துப் பார்க்கையில்,

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்''

என்ற பாடலுக்கமைய, மீனாட்சி சுந்தரேசர் என்ற நாமத்தோடு இறைவன் இங்கு காட்சி அளிக்கிறார். திருக்கோவையாரிலே மணிவாசகப் பெருமான், பாங்கன் கூற்றாகப் பாடியபாடல் எமது உள்ளத் தைத்தொடுகிறது தலைவியின் மாட்டு உள்ளத்தைப் பறிகொடுத்த தலைவன், வாடிவதங்கிக் காட்சி யளித்தபொழுது, பாங்கன் வினாவுகிறான்,

"...கூடலின் ஆய்ந்தஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ...''

என்பது அப்பாடலடியாகும். அதாவது சங்கம் அமைத்துத் தமிழ் ஆய்ந்து, துறைகளைத் தெரிந்து நிற்பதில், சங்கப்புலவர்கள் ஈடுபட்டனர் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோன்று நீயும் மதுரையில் வளர்த்த சங்கத் தமிழில் நுழைந்து விட்டாயோ என்றும் எடுத்துக் காட்டி, இதனால் தலைவனுடைய தோள்கள் மெலிந்து விட்டன என்றும் தமிழ் உணர்ச்சியே இதற்குக் காரணமாகலாம் என்றும் காட்டுகிறான் பாங்கன். மதுரை மாநகரின் பெருமையைத் திருக் கோவையார் செய்யுள் அடி சுவைபடக் காட்டு கின்றது.

திருவிளையாடற் புராணத்தில் திருநாட்டுச் சிறப்பை நூலாசிரியர் எடுத்துக்கூறும் இடங்கள் இறைவன் தென்திசை நோக்கி ஆடுவதன் காரணம், அங்கிருந்து வரும் தென்றலையும், தீந்தமிழ் ஓசை யையும் நயப்பதற்காகவே என்கிறார். அத்துடன் அங்குள்ள சிறப்பைக் குறித்துக் காட்டுகையில், விருந்தினரை உபசரித்துக்கூறும் ஒலிகளும், அறு சுவை உணவுகளை உபசாரம் கூறி ஊட்டுகின்ற ஓசைகளும், இரவலர்க்குப் பொருள் அளித்து மகிழ்ச்சியோடு எழுப்பும் ஓசைகளும் மதுரை மாநக ரத்தில் மிகுந்து நிற்பதைக் காட்டுகிறார். அவ்வா றான ஓசைகள் விருந்தோம்பும் திறன், செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் திறன், மானத் தையும் நட்பையும் தாம் பெற்ற பிள்ளைகளைப் போற் பேணிக்காக்கும் திறன் ஆகியவை இல்லத் தரசிகளிடம் காணப்பட்டதை எடுத்துக்காட்டுகிறார் நூலாசிரியர்.

பெண்கள் எல்லாம் எந்நேரமும் அங்கயற் கண்ணி அம்பாளையும் ஆலவாய் அப்பனையும் போற்றிப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இல்லத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் கூண்டுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கிளிகளும் நாகணவாய்ப் பட்சிகளும் அவர்களைப் போன்றே இறைநாமத்தைச் சொல்லிச் சொல்லிப் பயில்கின்றன என்பது யாவருக்கும் பக்தியைப் பயப்பனவாகும்.

பரஞ்சோதியார் காட்டிய பெண்மையின் உயர்வுகளுக்கும், தெய்வீக ஆற்றல்களுக்கும் தடாதகைப் பிராட்டியாருடைய திரு அவதாரப் படலமும், தருமிக்குப் பொற்கிழி அளித்த படலமும், பாண்டியன் சுரந்தீர்த்த படலமும், மண்சுமந்த படலமும் சிறப்பான கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் அமைத்துப் பாடப்பட்டுள்ளன. அத்துடன் வளையல் விற்றபடலம், விறகுவிற்ற படலம் ஆகியவற்றிலும் பெண்மையின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக அமைந்த இடங்களைக் காணலாம்.

பிராட்டியாரின் திரு அவதாரத்தையும் மலையத்துவச பாண்டியனுக்கும் அரசியாருக்கும் வளர்ப்புப் பிள்ளையாகத் தடாதகை தோன்றிய சிறப்பையும் காண்போம்.

"தெள்ளமுத மென்மழலை சிந்தவிள மூரல்
முள்ளெயி றரும்ப முலை மூன்றுடையதோர் பெண்
பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
எள்ளரிய பல்லுயிரு மெவ்வுலகு மீன்றாள்"

மன்னவன் செய்த தவத்தின் ஆற்றலால் வியப்புறும் வடிவத்தில் அம்பிகை காட்சி அளித்தாள். ஆனால், தனது தவத்தால் கிடைத்த பிள்ளைக்குக் கொங்கைகள் மூன்றாக அமைந்தமை மன்னனுக்குக் கவலையை அளித்தது. அவ்வேளையில் அசரீரி வாக்கு கேட்டதும் ஆறுதல் அடைந்தான். 'உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுக்கு ஆண்பிள்ளைக்குச் செய்வது போன்று சடங்குகள் செய்து தடாதகை என்ற பெயரையும் சூட்டி மதுரைக்கு அரசியாக முடியையும் சூட்டி வைப்பாயாக' என்பது அருள்வாக்கு. அத்துடன் இவளுக்குரிய மணாளன் வரும் பொழுது அம்மையின் ஒருமுலை மறைந்து விடும் என்றும் தெரிவித்தது. இந்த அசரீரி வாக்கு மன்னவனுக்கும் மனைவிக்கும் ஆறுதலைக் கொடுத்தது.

நீதி நெறிநின்று ஆட்சி செய்தாள் தடாதகை. அது மதுரைக்கேற்ற தனி ஆட்சியாகவும் வெற்றித் திரு நிறைந்த ஆட்சியாகவும் அமைந்தது. தேவர்களும் மூவர்களும் மலர்மாரி சொரிந்தனர். பாற்கடலில் தோன்றிய அமுதத்தால் செய்த பாவை போன்று அம்மையாரும் காட்சியளித்தார். அரசாட்சி சிறப்பாக இடம்பெற்றது. சக்திபீடங்களில் தலையாய பீடமாக விளங்குகின்ற மதுரையானது தூய்மையும், எழுச்சியும், வெற்றியும், பக்தியும் கொண்ட தலைநகரமாக விளங்கியது.

இதற்கிடையில் அங்கையற்கண் அம்மை தடாதகை என்ற பெயருடன் பாண்டியனுக்கு வந்த முறைமையை, அகத்தியமுனிவர் அனைத்து முனிவர்களுக்கும் எடுத்துக் கூறினார். மலையத்துவசனுடைய மனைவி காஞ்சனமாலை தடாதகைப்பிராட்டியாரை நோக்கித் திருமணம் பற்றிய முடிவு என்ன என்று இரங்கிக் கேட்டாள். அப்பொழுது அரசியாக அமைந்த தடாதகைப் பிராட்டியார் தனது திக்கு விசயங்களையும் அதனால் அடையும் வெற்றிகளையும் முடிவில் விவாகம் நிகழும் ஒழுங்கையும் எடுத்

துக்கூறி அன்னை காஞ்சன மாலைக்கு ஆறுதல் அளித்துவிட்டுத் திருக்கைலாய மலையை நோக்கிச் செல்லுகிறாள்.

அங்கு பரமசிவன் பிராட்டியாரைக் காணுகின்றார். அந்த இனிய வேளையில் மூன்றாவது கொங்கை மறைகின்றது! உடனே மதுரைக்குத் திரும்பிப் போகும்படியும் கட்டளை இடப்படுகின்றது.

மதுரையில் திருமணத்துக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. ''அரகர'' என்ற கோசத்துடனும், தூபதீபப் பூசைகளுடனும், தேவர்களின் பூமாரியுடனும் பிராட்டியாருக்குத் திருமாங்கலியம் தரிக்கப்படுகிறது.தடாதகைப்பிராட்டியார் திருமணம் நிறைவுபெறுகின்றது. மலையத்துவச பாண்டியனது மனைவி காஞ்சனமாலை இத்தெய்வத் திருமணத்தைத் தரிசித்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்குகின்றாள்.

இப்பகுதியில் காட்டப்பட்ட தடாதகைப் பிராட்டியாரின் வீரம், செங்கோலாட்சி, உயர்ந்த குறிக்கோள் ஆகியவை அனைவராலும் போற்றுதற்குரியவை. பரஞ்சோதி முனிவர் காட்டிய பெண்மைச் சிறப்புக்கு இந்த இடம் ஓர் எடுத்துக்காட்டாகும். புராணத்தின் தொடக்கத்திலேயும் சக்தி தத்துவம் சிறப்பாகப் பேசப்படுகின்றது. சமுத்திர நீர் ஒன்றாக இருந்தாலும் அதனுடன் கலந்திருக்கும் நீரைத் தணித்து நோக்கும் பொழுது அவை ஆற்று நீர், குளத்துநீர், கிணற்றுநீர், கடல்நீர் எனப் பல்வேறு பெயர்களைப் பெறுவது போல எல்லாம் வல்ல பராசக்தி ஒருவரே ஐந்தொழில்களையும் இயற்ற வேறுவேறு பெயர் பெறுகிறாள் என்பது சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்தத்தை ஒட்டிய கருத்தாகும். அம்மை ஒருத்தியே ஐந்தொழில் புரியும் நிலையில் வேறு வேறு பெயர் பெறுவது போல சமுத்திர நீர் ஒன்றாக இருந்தாலும் பல்வேறு பெயர்களை அது பெறுகின்றது என்பதைக் காட்டுகின்றார்.

"ஈறி லாதவ ளொருத்தியே
ஐந்தொழி லியற்ற
வேறு வேறு பேர் பெற்றென
வேலை நீ ரொன்றே
ஆறு கால் குளங் கூவல்
குண்டகழ் இடங்கெனப்பேர்
மாறி பிறில்வான் பயிரெலாம்
வளர்ப்பது மாதோ"

தடாதகைப் பிராட்டியார் மதுரையிலிருந்து ஆட்சி நடத்திய பொழுது இந்திரனைச் சீறி, தேவ உலகில் இருந்து மதுரைமாநகருக்கு கொண்டு வந்து சேர்த்த பஞ்சதருக்களின் காட்சி மதுரைச் சோலைகளில் அற்புதமாய் அமைந்திருக்கின்றது. பஞ்சதருக்களாவன: **சந்தனம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம்** என்பன ஆகும். தேவ உலகிலிருந்து இவை பூவுலகுக்கு அதாவது மதுரைக்குக்கொண்டு வரப்பட்டன என்பது தடாதகைப் பிராட்டியாரின் அருளாற்றலைக் குறிக்கின்றது.

மேலும் பெண்மைக்கு முதலிடம் அளித்த மூதூர் மதுரை மாநகரம் என்பதால் சிற்றின்பம் நுகரும் ஆடவர் பெண்டிர் ஆகியோரில் பெண்கள் முதன்மை இடத்தை வகிக்கின்றனர். ஊடலைத் தீர்த்தற்கு வணங்கி நிற்கும் தலைவரை விளையாட்டாகக் காலால் உதைத்தும் அவர்களின் மார்பைக் காலால் தீண்டியும் தலைவி காட்சியளிப்பதை ஒரு பாடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகின்றார். இத்தகைய நிகழ்ச்சிகள் முன்பும் தொல்காப்பியத்திலும் திருக்கோவையாரிலும் இடம் பெற்றுள்ளன.

"மனைவி உயர்வுங் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய"

என்பது தொல்காப்பியச் சூத்திரமாகும்.

அடுத்து "வந்தி" என்று அழைக்கப்படுகின்ற செம்மனச் செல்வியாரின் முறுகிய பக்திநிலையையும் அம்முதாட்டியின் பொருட்டு இறைவனே எளிவந்து கூலியாளாக அங்கு தோன்றிய பெருமையையும் கவனிப்போம். வைகை பெருக்கெடுத்ததனால் மதுரையம்பதியில் வாழ் மக்கள் எல்லோரும் பெருங் கலக்கமுற்று மன்னனிடம் முறையிட்டனர். ஒவ்வொருவரும் அவரவருக்குரிய பங்கை அடைத்துக் கொள்ளும்படி மன்னவன் கட்டளை இட்டான்.

அந்நகரில் வாழ்ந்த வந்தி என்னும் பெயருடைய மூதாட்டி ஒருத்தி தனது பங்கை அடைக்க ஆளில்லையே என்று வருந்தி நின்றாள். இந்நிலையில், தவப்பேறமிக்கவளும் தாயில்லார்க்குஅன்னை போன்று அன்பு காட்டுபவளுமாகிய வந்தியின் மனக்கலக்கத்தை மாற்ற எண்ணினான் மதுரைச் சோமசுந்தரப் பெருமான். கூடையும் தலைமேற் கொண்டு கொட்டுடைத் தோழராகி வந்திப்பிராட்டியின் முன்வந்து நின்றான். வருந்திய மனத்துடன் தனது பங்கை எப்படியடைப்பதென்று ஏங்கிநின்ற வந்தியின் நிலையைப் பின்வருமாறு காட்டுகிறார் பரஞ்சோதி முனிவர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிட்டுவிற்றுண்டு வாழும் பேதையேன் இடும்பை என்பது
எட்டுணை யேனுமின்றி இரவிளங் கெழுகென்று இந்நாள்
மட்டுநின் அருளால் இங்கு வைகினேற்கு இன்று வந்து
விட்டதோ இடையூறு ஐய மீனவன் ஆணையாலே"

என்று சொல்லிச் சொல்லி துன்பம் மீதூரக் கண்ணீர் சோர அழுது அரற்றினாள் அம்மை. இந்த நிலையில் தான் பெருமான் தன்வடிவத்தை மறைத்து விட்டுக் கூலியாளாக வந்து நிற்கிறான். அழுக்கடைந்த பழந்துணியொன்றை அரையிலே கட்டிக் கொண்டு அன்னையின் முன் நிற்கின்றான் பெருமான். கூலியாளுக்கு அடங்காதபசி வருத்துவது போன்ற தோற்றம் காணப்பட்டது. குறிப்பிட்ட கரையை அடைத்துத் தருவேன் என்று உறுதிமொழி கூறுகிறார் பெருமான், அதற்கு உதிர்ந்த பிட்டையே கூலியாகத் தருவேன் என்று அம்மையார் கூறினார். உடனே தீராத பசியைத் தீர்ப்பதற்காகக் கேட்பதுபோல் முதலிலே பிட்டைத்தரும்படி வேண்டுகிறார். அன்னார் கேட்டபடி பிட்டு உணவு கொடுக்கப்படுகிறது.

பின்பு கரை அடைக்கும் வேலை நடைபெறுகிறது. இந்தவிடத்தில் எம்பெருமானின் விளையாட்டு வந்தியைக் கலங்கச் செய்கிறது மேட்டிலே மண்ணைப் போட்டும், பள்ளத்திலே மண்ணை எடுத்தும் கரை அடைப்பவர் போன்று தன் விளையாடலைக் காட்டியவாறு வேலைசெய்து சிறிதுநேரம் கழித்துத் தான் கொண்டு வந்த கூடையைத் தலையணையாக வைத்து, ஒரு புறத்தில் தூங்குகிறார். இவருடைய செயலை நோக்கியவர் யாவரும் இவர் ஒரு உன் மத்தர் என்று கருதி விளையாட்டாகப் பார்த்துக் கொண்டு நிற்கின்றனர். கூலியாளாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர் வந்தியின் பிட்டை மேலும் மேலும் வாங்கி உண்டு கொண்டு அங்கும் இங்கும் திரிகின்றார். ஞானக்கண்ணைக் கொண்டு நோக்குவார்க்கன்றி, இந்த மண்ணிலே ஊனக்கண் கொண்டு பார்ப்பவருக்கு இவருடைய அருள் விளையாடல் நகைப்பையே கொடுத்துக் கொண்டிருந்தது.

அரசனின் ஏவலாளர்கள் அங்கு வந்தனர். வந்தியின் பங்கு மாத்திரம் அடைக்கப்படாதிருத்தலைக் கண்டனர். கூலியாளாய் வந்தவன் வந்தியை ஏமாற்ற வந்த கள்வன் போல் இருக்கின்றான் என்று தமக்குள் பேசிக்கொண்டனர். பின்னர் மன்னனிடம் சென்று கூலியாள் பற்றியும் வந்தியின் கரை அடைக்கப்படாதது பற்றியும் ஏவலாளர்கள் எடுத்துரைத்து நின்றனர். அதே நேரத்தில் கூலியாளைத் தண்டிக்கத் தமக்கு மனம் இசையவில்லை என்ற குறிப்பையும் கூறினார்கள்.

அதனைக் கேட்டதும் குறிப்பிட்ட வைகைக் கரைக்கு மன்னவனே சென்றான். வந்திப்பிராட்டியின் முறைப்பாட்டைக் கேட்டான். பொற்பிரம்பை வாங்கி கூலியாளின் முதுகில் வீசிப்புடைத்தான். அடைபடாது இருந்த பள்ளமெல்லாம் உயர்ந்து நின்றது; கூலியாளும் மறைந்து விட்டார்! ஆனால் அந்த அடி, அனைத்து உயிர்கள் மேலும் பட்டது.

இந்நிலையில், வந்தி என்ற நாமங்கொண்ட செம்மனச் செல்வியார் இறைவனின் திருவிளையாடலை நினைந்து தனக்குக் கிடைத்த பேற்றினை எண்ணி எண்ணி உவகையுற்றாள். விமானம் ஒன்று தேவருலகத்தில் இருந்து பூலோகத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கி, செம்மனச் செல்வியாராகிய வந்தியை ஏற்றிச்சென்றது. இந்த அற்புதமான கதையினால் வந்தி என்ற மூதாட்டியின் தன்னிகரில்லாப் பக்தியும் இதனை ஏற்றுக்கொண்ட இறைவன் அம்மையின் துயர் துடைத்த தன்மையும் பெண்பிறந்தாருக்குப் பேருவகையளிப்பதாக அமைந்துள்ளது. பரஞ்சோதியார் காட்டிய பெண்மையின் பெருமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஞானசம்பந்தப் பெருமானுடைய அருளாணையின் பேரில் வணிகப்பெண் ஒருத்தியை எந்தவித சாட்சியங்களும் இன்றி, மணம் முடித்து அழைத்துச் சென்ற மணமகனாகிய வணிகனுடைய செயலைக் கவனிப்போம். இந்தத் திருமணத்துக்கு ஞானசம்பந்தப் பெருமான் திருவாய் மலர்ந்தபடி வன்னியும் கிணறும் சிவலிங்கமுமே சாட்சியாக அமைந்தன. வணிகனின் மூத்த மனையாளுக்கும் பிள்ளைகளுக்கும் இச்செய்தி பொறாமையை ஊட்டியது. இளையமனையாளை நிந்தித்துக் கள்ளமாக விவாகம் செய்த உனக்குச் சாட்சி உண்டா? என்று கேட்டாள், மூத்த மனையாள். 'ஆம்' என்று பதிலளித்த இளையவள், வன்னி, கிணறு, சிவலிங்கம் ஆகியவற்றின் சாட்சியை எடுத்துரைத்தாள். மூத்தவள் நம்பவில்லை. மதுரையில் தாம் இருக்கும் இடத்திலேயே அவற்றை அழைக்கும்படி கேட்டாள். வருந்திக் கவலையுற்ற இளையவள், சோமசுந்தரக் கடவுளை வணங்கித் தனது கலக்கத்தைத் தெரிவித்தாள். இறைவன் அருளினாலே கோயிலின் ஈசான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலையிலே வன்னியும் கிணறும் சிவலிங்கமும் தோன்றின. மூத்தவள் தன் பிழையை நினைத்துக் கலங்கியதோடு அங்குகண்ட காட்சியையும் வணங்கிப் போற்றினாள்.

இந்நிகழ்வு மூலம் இளைய மனைவியின் உறுதியான கற்பும் இறைவன் மேல் அவள் கொண்ட பக்தியும் கணவனைத் தெய்வமாகக் கொண்டு பேணி வந்த கற்பொழுக்க சீலமும் புலனாகின்றன.

இந்த வகையில் பரஞ்சோதியார் காட்டிய பெண்மைக்கு மற்றொரு இடத்தையும் எடுத்துக்கூறுதல் இக்கட்டுரைக்குப் பொருத்தமாகும். மதுரையில் குடியிருந்த பிராமணன் ஒருவன் மனைவி சுகவிருதையோடு தானதருமங்களில் ஈடுபட்டு வருங்காலத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. கௌரி என்ற நாமத்தைச் சூட்டிப் பிள்ளையை வளர்த்து, அக்கால வழக்கப்படி எட்டு வயதாக இருக்கும்பொழுது வைணவப் பிராமணன்ஒருவனுக்கு விவாகம்செய்து கொடுத்தனர்.

அந்த வைணவப் பிராமணன் மனைவியையும் அழைத்துக்கொண்டு தன் ஊருக்குச் சென்றபொழுது கௌரிக்கு நிந்தனைகள் ஏற்பட்டன. வீட்டிலுள்ளோர் அயலூர் சென்றால் அந்த இளம் பெண்ணை வீட்டுக்குள்ளே வைத்துப் பூட்டிவிட்டுச் செல்வார்கள் ஒரு நாள் சிவபிரானுடைய அருளினாலே கௌரியின் கைபட்டதும் பூட்டுத்திறந்தது. சிவபெருமானே வேதியராக அங்கு வந்தமையினால், அன்னாருக்கு அன்னம் படைத்துத் திருவமுதூட்டினாள் கௌரி. வைணவர்கள் திரும்பி வந்த பொழுது குழந்தை ஒன்றும் நின்றதைக் கண்டார்கள். அதனால் குழந்தையையும் கௌரியையும் வீட்டை விட்டுத் துரத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரி சிவனுடைய திருமந்திரத்தை இடைவிடாமல் ஓதி நின்றபடியால் உமையம்மையின் பதம் அவளுக்குக் கிடைத்தது. சைவத்தின் பெருமைக்கும் உறுதியான பற்றுக்கும் இறைவனது அருள் கிடைக்கும் என்பது இதனால் உணரக்கிடக்கிறது.

இவ்வாறு பரஞ்சோதி முனிவர் காட்டுகின்ற பெண்மைப் பண்பை நோக்குவோமானால் கற்பின் திண்மை, சிவனடியார் பக்தி, விருந்தோம்பும் பண்பு என்பனவற்றைச் சிறப்பாகக் காணமுடிகின்றது அத்துடன் பெண்ணின் பெருமைக்கு மதுரையின் ஆட்சி எடுத்துக்காட்டாக அமைகின்றது. கன்னி நாடு என்று புகழ் பெற்றதும், "சத்தியாய்" என்று காப்புச் செய்யுள் ஆரம்பிப்பதும் சிற்றின்ப நுகர்விலும் பெண்கள் உயர்ந்து நிற்பதும், பஞ்ச தருக்கள் பூலோகத்துக்குக் கொண்டுவரப்பட்ட சிறப்புக்குரியதுமாய் விளங்குதல் பெரிதும் போற்றுதற்குரியனவாகும்.

மேலும் தமிழ்மொழிக்குரிய முதன்மை இப்புராணத்தில் சிறப்பாகக் காட்டப்படுகிறது. அதாவது மூவர் தமிழையும் அவற்றின் அற்புதங்களையும் எடுத்துக்காட்டிய வகையிலும் கன்னித்தமிழே எம் பெருமானையும் உருக வைத்தது என்று குறிப்பிட்டுப் பாடிய இடத்திலும் இம்மொழியின் பெருமை சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்ற நிலைக்கேற்ப ஆசிரியரின் தெய்வீக வாக்கு எமக்கெல்லாம் பிறவிப்பிணி தீர்க்கும் அருமருந்தாக அமைகின்றது. என்று கூறிக் கட்டுரையை நிறைவு செய்கின்றோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பாரதி காட்டிய பெண்மை

'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்று பராசக்தியிடம் வேண்டி நின்றவர் பாரதி. இந்த வாக்கு இன்று பலித்திருப்பதைக் காணுகின்றோம். இமயம் முதல் ஈழம்வரை பாரதியின் நாமம் முழங்காத இடங்களும் இல்லை; நெஞ்சங்களும் இல்லை. செந்தமிழ்ப்பற்றும் தெய்வீக வாழ்வும் சுதந்திர உணர்வும் மக்களிடையே நிலவவேண்டும் என்ற விருப்பம் பாரதியின் உள்ளத்தில் ஆழமாய் உறைந்திருந்தது. இப்பண்புகள் வளரவேண்டுமானால் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் மக்களிடையே காணப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டினார். பாரதியாரின் மூன்று மூச்சுக்கள்-மொழியும், நாடும், இறையும் தான். இன்று உலகம் எங்கணும் பாரதி சங்கங்கள் பல்கிப்பெருகியுள்ளன. மேற்கே அமெரிக்காவில் பாரதிக்குவிழா; கிழக்கே அவுஸ்திரேலியாவில் பாரதிக்கு விழா; இடையே பாரதிக்கு எங்கெங்கும் விழா இடம்பெறுகிறது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் விடுதலை உணர்வு உள்ளத்திலே எழுச்சி பெறவேண்டும். சமுகமட்டத்திலே விடுதலை; பொருளாதார மட்டத்திலே விடுதலை; ஆன்மீகத்திலே விடுதலை. இவற்றின் மூலமே உண்மையான சுதந்திர மனிதனாக வாழலாம் என்பதற்கு வழிகாட்டியவர் பாரதி. **பாரதியின் வழிபாட்டிலே உயர்ந்து நிற்பது சக்தி வழிபாடாகும்.** இதனால் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சக்தி சக்தி சக்தி என்று சொல்லு
சங்கடங்கள் யாவையுமே வெல்லு"

என்று கூறிக் கூத்தாடுகின்றார் பாரதி. இவர் ஒரு புதுமைக்கவிஞன் மறுமலர்ச்சிக் கவிஞன்; புரட்சிக் கவிஞன், என்று பேசப்படுகின்றார் அதே நேரத்தில் இவர் உண்மையான சமயவாதி என்பதையும் நாம் மறந்துவிட முடியாது சமய எழுச்சியினால் தான் சமுதாயச் சழக்குகளைப் போக்கமுடியும் என்பதை அவர் பல இடத்திலும் எடுத்துக்காட்டியுள்ளார். ஏழாவது நூற்றாண்டிலே அப்பர்; இருபதாம் நூற்றாண்டிலே பாரதி யார் என்று தொடர்புபடுத்திப் பேசுவார்கள் அறிஞர் கள். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ் சோம்' என்று பாடினார் அப்பர் சுவாமிகள்.

"பூமியில் எவர்க்கும்இனி அடிமை செய்யோம் - பரி
பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்"

என்று பாடினான் பாரதி. 'ஏது நேரினும் இடர்ப் படமாட்டோம்', 'அண்டம் சிதறினால் அஞ்சமாட் டோம்', 'யார்க்கும் அஞ்சோம்' 'கடல்பொங்கி எழுந்தால் கலங்கமாட்டோம்', 'எதற்கும் அஞ்சோம்' இப்படியெல்லாம் வீரம்மிகுந்த உள்ளத்துடன் பாடிய தற்கான காரணத்தை அவரே சொல்லுகிறார்-

"தஞ்சமென்று சொன்னேன் செஞ்சுடர்த்தேவன்
சேவடி நமக்கே"

என்பது அவர் உள்ளத்தில் எழுந்த துணிவான கூற்றாகும். மேலும், பராசக்தியை நோக்கிக் கூறுகிறார்:

"வல்லமை தாராயோ பராசக்தி
இந்தமாநிலம் பயனுற வாழ்வதற்கே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது அவருடைய பக்தியான வேண்டுதலாகும். மக்களின் கடமையை எடுத்துச்சொல்லும் பொழுது 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்' எனக் குறிப் பிடுகின்றார்.

பெண்மைக்குப் பெரும்பங்கு கொடுத்துப் பாடி யிருக்கும் திறன், இவர் பாடல்களில் தனித்துவம் பெறுகின்றது. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பதே தாய்மையின் முதலிடத்தைக் காட்டுகின்றது. மேலும் பழந்தமிழ் நூல்களிலும் சக்தியின் வடிவமாகப் பெண்கள் போற்றப்பட்டுள் ளனர். 'பெண்ணிற் பெருந்தக்கயாவுள' என்பதும் 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்பதும் சிந்திக்கத்தக்க திருக்குறட் பாடலடிகளாகும். சங்க இலக்கியம், திருக்குறள், இராமாயணம் போன்ற நூல்களில் நன்கு பயிற்சிபெற்றவர் பாரதி என்ப தையும் உணரமுடிகின்றது. இவற்றில் இடம்பெற்ற பெண்மைச் சிறப்பின் கருத்துக்களைக் கொண்டு, அவற்றுக்கும் மேல் ஒரு படி உயர்ந்து நின்று-

"பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா"

என்பதும்

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் - என்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்
ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை - யென்று
எண்ணி இருந்தவர் மாண்டு விட்டார்"

என்பதும் பெண்மையைப் போற்றும் நிலையில் அவருடைய பொங்கி எழுந்த உள்ளத்தைக் காட்டு கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், தமிழ்மொழியில் இவர் வைத்த பக்தியைத் 'தமிழ்த்தாய்' என்ற பகுதியிலும் 'எங்கள் தாய்' என்ற பகுதியிலும் 'வெறிகொண்டதாய்' என்ற பகுதியிலும் உணர்ச்சி ததும்ப எடுத்துக் கூறுகிறார்.

"முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புறம் ஒன்றுடையாள் - இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று கூறுகின்ற இடத்தில், தமிழ்மொழியைத் தாயாக வர்ணிக்கின்ற சிறப்புச் சிந்தனைக்குரியது.

"பேயவள் காண் எங்கள் அன்னை - பெரும்
பித்துடையாள் எங்கள் அன்னை
காய் அழல் ஏந்திய பித்தன் — தன்னைக்
காதலிப்பாள் எங்கள் அன்னை."

என்றும்

"கன்னிப் பருவத்தில் அந்நாள் — எந்தன்
காதில் விழுந்த திசைமொழி எல்லாம்
என்னன்னவோ பெயர் உண்டு — பின்னர்
யாவதும் அழிவுற்றது கண்டேன்
தந்தை அருள் வலியாலும் — இன்று
சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தக் கணம் மட்டும் காலன்
என்னை ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி இருந்தான்"

என்றும் பாடித் தமிழ்த்தாயின் எழுச்சியான போக்கை விளக்குகின்றார்.

பராசக்தியிடம் நீங்காத பற்றுக் கொண்டவராகையால், அந்த அன்னையிடமே அனைத்தையும் கேட்டு நிற்கிறார். எதனையும் பேசுவதற்கும் எழுதுவதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் பராசக்தியின் அருளையே நாடி நிற்கிறார். அதனால் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்."

என்பது கவிஞர் கேட்டு நிற்கும் வரங்களாகும்.

சக்தியின் மகத்துவத்தைக் காட்டும் இடங்கள் பெண்மையின் பெருமைக்கு எடுத்துக்காட்டானவை ஆகும்.

"காலை இளவெய்யிலின் காட்சி — அவள்
கண்ணொளி காட்டுகின்ற மாட்சி
நீல விசும்பினிடை இரவில் — சுடர்
நேமியனைத்தும் அவள் ஆட்சி."

என்பது அன்னையின் அருட்பிரவாகத்துக்கு எடுத்துக்காட்டான வாக்காகும். அதுவுமன்றி, பள்ளி எழுச்சி பாடித்துயில் எழுப்புவது சுதந்திர உணர்வுக்கு எம்மைத் தூண்டி விடுவது போன்று அமைந்துள்ளது. நாங்கள் செய்த தவத்தினால் அறியாமை என்ற இருள் அகன்று விட்டது எனவும், அறிவு என்ற சூரியன் உதயமாகின்றான் எனவும், இதனால் தொண்டர்களாகிய நாங்கள் விழித்துவிட்டோம் எனவும் எங்கள் தாயாகிய நீ மாத்திரம் ஏன் தூங்குகின்றாய்? இது என்ன வியப்பு, எனவும் பாடி, அறியாமை இருளிலிருந்து அறிவுப் பாதைக்கு மக்களை உணர்ச்சி ததும்ப எழுப்புகிறார் பாரதியார்.

அடுத்து. 'முன்றுகாதல்' என்ற பகுதியை எடுத்துக் கொள்வோம். அன்னை சரஸ்வதி இடத்தில் தனது வெள்ளை மனதைப் பறிகொடுத்ததாகவும் அவளை நாடிப் பக்கத்தே போனால், ஞானங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி இனிமை செய்வாள் என்றும் முதலில் பாடுகின்றார். இரண்டாவதாக இலட்சுமி காதலை வைக்கின்றார். தனது வாழ்வுக்கும் இலட்சுமி கடாட்சத்துக்கும் வெகுதூரம் என்பதையும் சொல்லாமல் சொல்லிக்காட்டுகின்றார். "என்ன பிழைகள் கண்டோ, அவள் என்னைப் புறக்கணித்தேகிடுவாள்" என்று கூறுமிடம், வறுமையில் வாடும் அவருடைய உள்ளத்தைக் காட்டுகிறது மூன்றாவதாக காளி காதலிலே துள்ளித் துள்ளிப் பாடுகின்றார்.

"அன்னை வடிவமடா — இவள்
ஆதிபராசக்தி தேவியடா — இவள்
இன்னருள் வேண்டுமடா — பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப் போமடா"

என்று கூறுவதிலிருந்து, கவிஞரின் அச்சமற்ற வாழ்வு, துணிவான போக்கு, இறுக்கமான பக்தி ஆகியவற்றை உணரலாம்.

பராசக்தியைக் காளியாக வைத்துப் போற்றிய இடங்கள் பாரதியாரின் வீரத்தை நன்கு சுவைக்கக் கூடியதாக அமைந்துள்ளன.

"காளிமீது நெஞ்சம் — என்றும்
கலந்து நிற்க வேண்டும்
வேளை யொத்த விறலும் — பாரில்
வேந்த ரேத்து புகழும்
யாளி யொத்த வலியும் — என்றும்
இன்பம் நிற்கும் மனமும்
வாழி யீதல் வேண்டும் — அன்னாய்!
வாழ்க நின்றன் அருளே!"

இவ்வாறு பாடி, சக்தி தத்துவத்தைப் பல இடங்களிற் போற்றுகிறார் பாரதியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலம் தொடக்கம் பாரதிகாலம் வரை நோக்கினால், சக்தி தத்துவத்தின் பெருமை திருமுறைகளிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும் நன்கு எடுத்துக் காட்டப்படுகின்றது. அறிவு, செல்வம், வீரம் என்ற மூன்றையும் எமக்கு அளிக்கின்ற பராசக்தி சைவ மக்களின் வழிபாட்டு முறையில் முதலிடம் வகிக்கின்றாள் தாய்மைக்குத் தனி உரிமை கொடுத்துப் போற்றும் மதம், இந்து மதம். இதற்கென்றே சாக்தம் என்ற பிரிவு தோன்றியது, நடராசப் பெருமானின் திருக் கூத்தினைத் தாளங் கொட்டி நடாத்தி வைப்பவர் உமாதேவியே என்றும் இந்தத் தாள லயத்திலேயே பூவுலக இயக்கம் நடைபெறுகின்றது என்றும் குறிப்பிடுகின்ற இடங்கள் ஏனைய பல இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளன.

'மாதொருபாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்'

என்று புகழ்ந்துள்ளமை நினைவுகூரத்தக்கது.

"கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ
வண்டரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ"

இவ்வாறு கலித்தொகைப் பாடலில் அப்பனின் கூத்துக்கு அன்னையின் தாளலயம் எப்படி அமைகின்றது என்பதை எழுத்தோவியமாகத் தீட்டியுள்ளார் அதன் ஆசிரியர்.

மேலும், முத்துமாரித் தாயிடத்தில் கவிஞர் வேண்டி நிற்கும் வரங்களைக் கவனிப்போம்: எங்கள் கருத்திலே புகுந்து கலகஞ் செய்யும் அரக்கர்கள் ஒரு புறம்; கற்றும் கேட்டும் அதனால் பயனடையாமல் ஏங்கி நிற்போர் இன்னொருபுறம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இதற்காக உன்பாதத்தைச் சரண்புகுந்து முறைப்பாடு செய்கிறோம். துணிவெளுக்க மண் இருக்கிறது; தோல் வெளுக்கச் சாம்பல் இருக்கிறது; மணிவெளுக்கச் சாணை இருக்கிறது; ஆனால் மனம் வெளுக்க முடியாமல் தத்தளிக்கிறோம். பிணிகளுக்கு மருந்து இருந்தாலும், எங்கள் பேதமைக்கு மருந்தைக் காண முடியவில்லை இவற்றுக்கெல்லாம் அடைக்கலமாக உன்னைச் சரண்புகுந்திருக்கிறோம் என்று பாடிஇருக்கும் இடங்கள் சமுதாய விழிப் புணர்வைக் காட்டி நிற்கின்றன. அது மாத்திர மல்லாமல், முடிவு ஒன்றைச் சொல்லுகிறார் -

" நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிகவரம் பெறலாம் "

இவ்வாறு பாடிப்பாடிச் சக்தியின் மேம்பாடுகளை ஆங்காங்கு காட்டப்பட்டிருத்தல் கவனிக்கத்தக்கது. வீட்டுக்கு விளக்குப் பெண்களே என்பதைக் காட்டு கின்ற இடம் அற்புதமானதாகும்.

" பாட்டைத் திறப்பது பண்ணாலே - இன்ப
வீட்டைத் திறப்பது பெண்ணாலே "

என்பதால் இல்லத்தரசிகளின் முதன்மை எடுத்தோதப் படுகின்றது.

மறுமலர்ச்சிக் கவிஞனான பாரதி, சமயவேறு பாடு, சாதிவேறுபாடு, பெண்ணடிமை ஆகியவற்றை நல்லபடி சாடுகிறார். பாப்பாப் பாட்டிலே 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும் " தாழ்ச்சியும் உயர்ச் சியும் சொல்லிக் கழிப்பது பாவச்செயல் " என்றும் உலகிலே நீதியும் அறிவும் கல்வியும் அன்புமுடை யவர்களே மேலோர் என்றும் கூறி, ஆண்டாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக, மரபாகப் பேணி வந்த சாதி சமயச் சழக்குகளைச் சாடுகிறார். மனிதன் தன்னைப்போல் ஏனைய உயிரினங்களையும் அன்போடு பேணி ஆதரிக்க வேண்டும் என்றும் பாடுகிறார்.

அவருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவம் இதற்குச் சான்றாக அமைகின்றது. மனைவி செல்லம்மாள் சமைப்பதற்கு அயலவரிடம் மன்றாடி அரிசி பெற்றுச் சுளகிலே போட்டுப் புடைத்துத் தயார் பண்ணும் பொழுது, பக்கத்தே வந்த பாரதி, குறுக்கிட்டுச் சிறிதளவு அரிசியைக் கையால் அள்ளினார். கோழிகளுக்கும் காகங்களுக்கும் வீசி எறிந்தார். வறுமையின் கொடுமையிலே வாழ்ந்து கொண்டிருந்த செல்லம்மாளுக்கு, இது சிறிது விசனத்தைக் கொடுத்தது. உடனே மனைவியைப் பார்த்துப் பாடுகின்றார் -

"கொத்தித் திரியும் அந்தக் கோழி - அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்கை - அதற்கு
இரக்கப்பட வேணுமடி பாப்பா"

என்று தொடர்ந்து பாடிக்கொண்டே, மனிதன் தன்னைப் போல்மற்றைய உயிரினங்களையும் நேசிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறார். பாதகம் செய்பவர்களைக் கண்டால், அஞ்சாமல் எதிர்த்து நின்று முகத்தில் உமிழ்ந்து விடவேண்டும் என்றுகூறுவதும் அவரது திண்மையான உள்ளத்தை வெளிப்படுத்துகிறது.

அடுத்ததாகக் கவிஞர் பாடிய 'புதுமைப்பெண்' என்ற பகுதியை எடுத்துக்கொள்வோம். பெண் அடிமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பது அவரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய தாரக மந்திரம். இதனை, தான் வாழ்ந்த சமுதாயத்துக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே ஒரு நிகழ்வைக் காட்டுகிறார்.

செல்லம்மாளை விவாகம் செய்த காலத்தில் ஒரு நாள் மாலைவேளையில் தன் மனைவியைக் கையிலே பிடித்தவாறு பக்கம் பக்கமாக அணைத்துக் கொண்டு நெடுஞ்சாலை வழியே செல்கின்றார். இந்தக் காட்சி வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்றவர்களுக்கு வியப்பான காட்சியாகத் தோன்றியது. ஏனையோரையும் கூவி அழைத்து, சாலை இருமருங்கினின்றும் பார்த்து ஏளனம் செய்வதும் கைகொட்டிச் சிரிப்பதுமாய் நடந்துகொள்ளும் காலம், அதுவாக இருந்தது. பாரதியார் அதற்கு அஞ்சவில்லை. ஆனால், மனைவி செல்லம்மாள் அஞ்சி அஞ்சிக் கூசசத்துடன் சென்றாள் என்ற வரலாறு அக்கால மரபு நிலைப் பெண்மையின் பண்பைக் காட்டுகின்றது.

இவற்றையெல்லாம் உள்ளத்தில் வைத்துத்தான் புதுமைப்பெண் என்ற படைப்பைத் தந்திருக்கிறார் பாரதி. புதுமைப் பெண் என்ற பகுதியில் பெண்ணடிமையை நீக்கவேண்டும் என்ற கருத்தை அவர் வெளிப்படுத்திக் காட்டுவது வரவேற்கத்தக்கது. இப்பகுதியில் கூறப்பட்டவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

''மாதர்க்கு உண்டு சுதந்திரம்'' என்றவார்த்தை நாரதரின் வீணை போன்றும் கண்ணனின் வேய்ங்குழல் போன்றும் செவிக்குச் சுவைக்கிறது என்றார். அடிமை என்ற சொல்லை தீயிலிட்டுப் பொசுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றும், ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால், அறிவு ஓங்கி நிற்கும் என்றும் சிவ சக்தியே பெண்ணுரு எடுத்து வந்தது என்றும் கூறு கிறார். அதுவுமன்றி ஞானம், நல்லறம், வீரம், சுதந்திரம் நற்குடிப் பெண்களின் குணங்களாக அமைய வேண்டும் என்று கூறுகிறார். அறிவு குறைந்த தாய்மாருக்கு அறிவறிந்த மக்களைப்பெறு தல் அரிது என்பதும் நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் ஞானச் செருக்கும் அஞ்சாத நெறியும் பெண்களின் நிலையை உயர்த்தி விடும் என்பதும் அவரது அசைக்கமுடியாத கருத்தாகும். எனவே, அன்னை பராசக்தியே புதுமைப் பெண் ணாக வந்து இந்த உரைகளைக் கூறினாள் என்ப தையும் மறுமலர்ச்சிக் கவிஞன் பாரதி எடுத்துக் காட்டுகிறார். மேலும், கவிஞரின் உள்ளக் குமுறலை யும் பெண்மையைப் போற்றுகின்ற தன்மையையும் மற்றோர் இடத்தில் காணமுடிகிறது.

"போற்றி தாய் என்று தாளங்கள் கொட்டடா
போற்றி தாய் என்று பொற்குழல் ஊதடா
காற்றில் ஏறி அவ் விண்ணையும் சாடுவோம்
காதல் பெண்கள் கடைக்கண் பணியிலே"

இவ்வாறு வீறுகொண்டு பாடிய பாரதியார் காட்டிய பெண்மை, மேலும் உயர்ந்து நிற்கிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு நெறி என்பது பொது என்றும், வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுப்பதை மறுத்துத் தள்ளுவோம் என்றும் வீர மொழி பேசுகின்றார்.

தொடர்ந்து "பாஞ்சாலி சபதம்" என்ற பகுதி யிலே பெண்மையின் பெருமை உச்சநிலையை அடைகின் றது. பாண்டவரதும் கௌரவரதும் போட்டி பொறா மைகள் பாரதக் கதையில் நாம் அறிந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சகச் சகுனியின் ஏவலினால் துரியோதனன் பாண்டவரைச் சூதாடுவதற்கு அழைக்கின்றான். சூதாட்டத்தில் தோற்றுப் போகின்றார்கள் பாண்டவர்கள். நாட்டை இழந்து, சகோதரரை இழந்து கலங்கி நிற்கிறான் தருமன். இறுதியில், தருமன் தன்னைத் தானே பணயம் வைத்தும் இழக்கிறான். துரியோதனனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி! ஈற்றில் திரௌபதையையும் பணயம் வைத்து இழக்கிறான் தருமன். கௌரவர்கள் மகிழ்ச்சிக்கடலில் திளைக்கின்றனர்.

அச்சூழ்நிலையில் திரௌபதையின் கற்பின் திண்மையும் வீரச்சொற்களும் அனைவரையும் உணர்ச்சி வசமாக்குகின்றது. ''நாயகர் தாம் தம்மைத் தோற்றபின், என்னை நல்கும் உரிமை அவர்க்கில்லை. நான் துருபதனின் மகள், கன்னி இந்தச் சபையிலே தர்மமும் சாத்திரமும் செத்துக்கிடக்கின்றதா?'' என்றுகூறி, சபைக்குத் தான் வரமுடியாது என்றும், துரியோதனுக்குச் சொல்லி அனுப்புகிறாள்.

துரியோதனன் அதற்கு இசையவில்லை. தம்பி துச்சாதனனை ஏவுகின்றான். அண்ணனின் கட்டளைப்படி திரௌபதையைச் சபைக்கு இழுத்து வருகிறான். வரும்பொழுது ''எங்கள் அண்ணனுக்கு நீ அடிமைச்சி. அதுமட்டுமன்றி, சூதாட்டத்தில் விலைப்பட்ட தாசி. எனவே என்னுடன் வரவேண்டும்'' என்று பாதகமொழிகள் கூறிக் கையினால் அவளைப் பற்றி இழுத்து வருகிறான். கண்டவர்கள் அனைவரும் பரிதவித்து நின்றனர்.

இந்த இடத்தில் பாரதியார் தன் கருத்தையும் திரௌபதையின் நிலையினையும் கூறும் வகையில் நெட்டை மரங்கள் போல் நின்று புலம்புகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடைப் பதர்களைச் சாடுகிறாள் திரௌபதை. தருமரைப் பார்க்கிறாள்; விஜயனைப் பார்க்கிறாள்; வீமனைப் பார்க்கிறாள்; எல்லோரும் வாய்மூடிப் பேதுற்று வீஷ்மரும் தீங்கு தடுக்கும் திறமின்றி நிற்கின்றனர். துரியோதனன் சபையிலே நீதிகூற எவருமில்லை. பாண்டவரைப் பார்த்துத் திரௌபதை நீதி கேட்ட பொழுது, அனைவரும் தலைகுனிந்து நிற்கிறார்கள். கர்ணன் சிரிக்கிறான், சகுனி புகழுகின்றான், வீஷ்மரும் மௌனியாகின்றார்.

தருமத்துக்கு இச்செய்கை பொருந்துமா? என்று மேலும் நீதி கேட்கிறாள் திரௌபதை.

"பேயரசு செய்தால், பிணந்தின்னும் சாத்திரங்கள்
.....................................................................
பெண்டிர் தமையுடையீர்! பெண்களுடன் பிறந்தீர்!
பெண்பாவ மன்றோ? பெரியவசை கொள்வீரோ?"

என்றெல்லாம் கூறி அழுது புரண்டு கொண்டிருந்த திரௌபதையைத் துச்சாதனன் வசைமொழிகள் கூறி நிந்திக்கிறான்.

வீமனுக்குக் கோபம் பொங்கி வருகின்றது. அண்ணன் தருமனைப் பார்த்துச் சினந்து கூறுகின்றான். "அண்ணே! பாஞ்சாலன் சுடர் மகளை, மாதர்குல விளக்கைச் சூதாடி இழந்து விட்டாய்; தவறு செய்ததினால் தருமத்தையே கொன்றுவிட்டாய்; நாட்டை இழந்ததையும் பொறுத்திருந்தோம். ஆனால், துருபதன் மகளை இழந்ததை மட்டும் பொறுக்கமாட்டோம். தம்பி! எரிதழல்கொண்டுவா. எங்கள் கதியைப் பணயம் வைத்திழந்த அண்ணன் கையை எரித்திடுவோம்" என்று சினந்தெழுகின்றான் வீமன். ஆனால், அருச்சுனன் தனது அண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீமனின் சினத்தைச் சிறிது தணிக்கிறான். பாரதியார் பாடலிலே பாஞ்சாலி சபதத்தில் அருச்சுனனின் நீதிமொழிகளைக் காணுகிறோம் :

" தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும் ;
  தருமம் மறுபடி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
  வழிதேடி விதி இந்தச் செய்கை செய்தான் ;
கருமத்தை மேன்மேலுங் காண்போம் இன்று
  கட்டுண்டோம் ; பொறுத்திருப்போம் ; காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
  தனு வுண்டு காண்டீபம் அதன்பேர்"

என்றான்.

அடுத்து இடம்பெறும் விகர்ணனுடைய கூற்றும் பெண்மையைப் போற்றுகிறது. மனைவியரை விலங்குகளின் நிலையில் மதித்துப் பணயம் வைப்பதையும் விற்பதையும் நாம் ஏற்கமுடியாது விலைமாதருடைய நிலையிலே கற்பரசிகளின் பண்பைச் சிறுமைப்படுத்தி விட்டார்கள். தம்மை இழந்து, அடிமையானவர்களுக்குத் தாரமும் இல்லை ; வீடும் இல்லை. அவர்களுக்கு எதுவித உடைமையுமில்லை. இதனைத்தான் இந்தப் பெண்ணரசி இச் சபையில் கேட்கின்றாள் " நீவிர் எல்லோரும் ஊமைகளாகி விட்டீர்களோ ? இந்தப்பழி போர்க்களத்தில் தான் தீரும் " என்றான் விகர்ணன்.

கைவிடப்பட்ட நிலையில், பாஞ்சாலி கண்ணனை வேண்டுகிறாள். துச்சாதனன் திரௌபதையின் துகிலைப் பற்றி இழுத்து உரிவதற்கு முற்படுகிறான். கண்ணபிரானின் அருளால் துகில்வளர்ந்து கொண்டே போகிறது. இந்த நேரத்தில், கண்ணபிரானின் அருளினால் அம்மையார் உடுத்திருந்த ஆடை பார்ப்பவரைப் பரவசத்தில் ஆழ்த்தி நீண்டு கொண்டு போகிறது. துச்சாதனன் கைசலிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையிலே இரண்டு கைகளையும் குவித்துக் கண்ணனைத் துதிக்கிறாள் திரௌபதை. துரியோதனன் தலை கவிழ்ந்தான். கலக்கமுற்றுப் பார்த்து நின்றவர்கள் எல்லோரும், '' சக்தி சக்தி '' என்று கரங்குவித்துத் துதித்தனர். இந்நேரத்தில், ''தனது அவிழ்ந்தகூந்தல்துரியோதனனின் ஆக்கைமுடிவிலே சொரியும் இரத்தத்தைப் பூசியே முடிப்பேன் '' என்று சபதம் இட்டாள் பாஞ்சாலி. இவ்வாறு பாரதியார் தீட்டிய பாஞ்சாலி சபதத்திலே தூய்மையான பெண்ணினத்தின் பெரு வெற்றி காட்டப்பட்டிருத்தல் கற்போர் இதயத்தைக் கசியவைக்கின்றது.

இந்த வகையிலே புதுமைக் கவி பாரதியார் புனைந்த கவிதைகளில் போற்றுதற்குரிய பெண்மைப் பண்பையும், கும்மியடித்து வாழ்த்துதற்குரிய பெண்களின் உயர்வையும், சமூக ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெண்கள் ஏற்றமடைய வேண்டிய வழிவகைகளையும் ஆங்காங்கு காட்டிச் செல்கிறார். அத்துடன் பாப்பாப் பாட்டு, புதுமைப்பெண், பாஞ்சாலிசபதம் ஆகிய பகுதிகளிலே பெண்ணின் உயர்ந்த நிலையையும், பக்தியையும், கற்பின் திறத்தையும், ஞானம், நல்லறம், வீரம், சுதந்திரம் என்பன பெண்களின் வாழ்வில் மேலோங்கி நிற்கவேண்டும் என்பதே புதுமைப்பெண்ணின் தலையாய பண்புடைமை என்பதையும் பாரதியார் எளிய இனிய பாக்கள் மூலம் எடுத்துக்காட்டி இருப்பது கவனிக்கத்தக்கது. எனவே, பாரதி காட்டிய பெண்மைப் பண்பின் உயர்வை மேலும் விரிக்காது இத்துடன் நிறைவு செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எமது சிந்தனையில் பிற்காலப் பெண்மை

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!
பங்கயக் கைநலம் பார்த்தலவோ - இந்தப்
பாரில் அறங்கள் வளரும் அம்மா!"

என்று பாடினார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள். மக்களின் உள்ளத்தில் எழுகின்ற தூய எண்ணங்களே தனிமனிதனையும் வாழ வைத்து, சமூகத்தையும் வாழவைக்கிறது. ஒரு நாட்டின் சூழ்நிலை கெடுகின்றதென்றால், அந்நாட்டு மக்களின் எண்ணங்களில் தவறு இருக்கிறது என்பதே கருத்து. இந்த வகையில் பாரதிக்குப் பின்பு சமூகத்தில் - சிறப்பாகப் பெண்கள் மத்தியில் - ஏற்பட்ட மாறுதல்களையும் விழிப்புணர்ச்சியையும் அதனால் இந்த மண் அடைந்த பெருமை சிறுமைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மக்களிடையே சமுதாய நீதியும் சமத்துவமும் இன்றும் கனவுகளாகவே இருக்கின்றன. நாட்டுப் பற்று, இனப்பற்று, சகிப்புத்தன்மை, ஒழுக்கம், சகோதரத்துவம், ஒற்றுமை ஆகியவற்றை விளக்கும் கல்வி வெறும் எட்டளவிலும், பரீட்சை அளவிலும் நின்று விடுகின்றன. சமுதாய மட்டத்தில் இதன் பிரதிபலிப்பைக் காணமுடியாமற் போகின்றது. மானிட வாழ்க்கையின் நோக்கம் கல்விப்பயனையும் பிறவிப்பயனையும் நிறைவேற்றுவதாக அமைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இதற்கு வழிகாட்டிகளாக இந்த நூற்றாண்டிலும் சென்ற நூற்றாண்டிலும் பெண் மக்கள் பலர் வாழ்ந்து வந்துள்ளார்கள். இயற்கை காட்டும் சமத்துவத்தோடு இணைந்து பணிபுரிந்தவர்கள் இவர்கள்.

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மாநிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ"

என்பது இயற்கை காட்டும் சமத்துவமாகும்.

பண்டைக் காலத்திலும் முழு நிறைவு பெற்ற முனிவர்கள் மத்தியில் ஒருசில பெண்களும் தவத்தை மேற்கொண்டு சமுதாயத்தை வளர்த்திருக்கிறார்கள். தமிழ் அறிவும் சமய உணர்வும் மாத்திரம் பெண்கள் மத்தியில் இருந்தால் போதாது. எங்கெல்லாம் அறியாமையும் அவலக் குரலும் தென்படுகிறதோ அங்கெல்லாம் பெண்களின் சேவை முத்திரை பதிக்கப் படவேண்டும். இதற்கு மனிதனை மனிதனாக்கும் கல்வியும், மனிதனை மனிதனாக்கும் மதமும், மனிதனை மனிதனாக்கும் தத்துவமும் தோன்ற வேண்டும். சமுதாயத்தில் நல்ல இதயமுள்ள பலர் மூடர்களாக இருக்கின்றனர். அவர்களால் நன்மையும் இல்லை, தீமையும் இல்லை. மேலும், நல்லஅறிவுள்ள அநேகர் தீயவர்களாக இருக்கின்றனர். அவர்களாலும் சமுகத்துக்குத் தீமையே விளைகிறது. ஆனால், நல்ல இதயமும் நல்ல அறிவும் கொண்ட ஒரு சிலரால்தான் இந்த உலகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த உண்மையை அனைவரும் உணர்வார்கள். பிற்கால வாழ்க்கையைப் பார்த்தால், ஒரு தாயார், தான்பெற்ற பன்னிரண்டு குழந்தைகளையும் காப்பாற்றுகிறார். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பன்னிரண்டு குழந்தைகளும் ஒரு தாயைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கின்றனர். இந்த நிலை மாற வேண்டுமானால், மக்கள் உள்ளமும், உணர்வும், உயர்ந்த நோக்கும் ஒன்றுபட வேண்டும் என்பதே வரவேற்கத்தக்கது.

தியாக சிந்தனையுள்ள சமீபகாலத்துப் பெண்களில் ஒருசிலர் உயர்ந்த பணிகளை ஆற்றித் தமது நாமத்தை உலகுள்ளளவும் அழியாது நிலை நிறுத்திய சிறப்பை மேற்கிலும் கிழக்கிலும் நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. அன்னை சாரதாதேவி, கஸ்தூரிபாய், செல்வி மாரியோ போகியோ, இந்திராகாந்தி, அன்னை திரேசா, சிமாட்டி லீலாவதி அம்மையார், செல்லாச்சி அம்மையார் என்போரும் இன்னுங் குறிப்பிடப்படாத அன்னையர்கள் சிலரும் சமுதாயத்துக்கு அரும்பணி ஆற்றியிருக்கிறார்கள். உலகமகாயுத்தம் நடைபெற்ற காலத்திலே ஓடியோடி முதலுதவி புரிந்து நற்பணியாற்றிய ''புளோரின்ஸ் நைற்றிங்கேல்'' என்பவரை எமது உலக வரலாறு மறக்க முடியாது. வீட்டைப்பேணும் நிலையிலும், நாட்டைப்பேணும் நிலையிலும் தனது கணவனைப் பேணும் நிலையிலும் பெரும் பங்கு எடுத்துக்கொண்ட தூய அன்னை சாரதாதேவியை முதலில் எடுத்துக்கொள்வோம்.

பிள்ளைப் பராயத்திலே கதாதரர் என்பவரைக் கைப்பிடித்து, அக்கால வழக்கப்படி அவருக்கு மனைவி என்னும் உரிமை பூண்டார். வயது ஏற ஏற பதினாலாவது வயதிலே அறிவும் பத்தியும் கதாதரர் மீது விசுவாசமும் பெருகிக் கொண்டு வந்தது. இதனால் தூய அன்னையாக மாறினார். கதாதரர் என்பவரே இராமகிருஷ்ணபரமகம்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தூய பெயருக்கு உரியவரானார். தன்னைக் கைப்பிடித்த கணவனுக்குப் பணிசெய்வதே தனது தலையாய கடமை என்று சாரதை உணர்ந்தார். வசதியற்ற ஒரு சிறிய வீட்டில் தஷிணேஸ்வரத்தில் வாழவேண்டிய நிலையிலும், பொறுமையோடு அங்கிருந்து தனது கணவனாரை நன்கு பேணிக் கொண்டார்.

இக்காலத்தில் தனது பெண் சீடர்களுடன் பொதுக்காரியங்களிலும் ஈடுபட்டு வந்தார். அச்சத்தையும் நாணத்தையுமே ஆடையாக அணிந்திருந்தார் அம்மையார் என்று அவர் பற்றிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சில சமயங்களில் குரு தேவரே அன்னையார் சாரதாவிடம் மன்னிப்புக் கேட்பார். இத்தகைய உயர்ந்த தெய்வீகப் பெண்மைக்கு அன்னை சாரதாதேவி ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார். பொறுமை, பேரின்பநாட்டம், விருந்தோப்பும் திறன், சாதுக்களை ஆதரிப்பது என்பவற்றில் பெண்ணின் கடமைகளை நன்கு நிறைவேற்றினார். குருதேவருக்கும் இவருக்கும் இடையில் நடைபெற்ற திருமணம் ஆத்ம சாதனைக்கு வழி காட்டியதே அன்றி, இல்லற சுகத்துக்கு இடமளித்த தன்று. இந்த நிலையிலேயே அன்னை சாரதாதேவி உலகம் போற்றும் உத்தமப் பெண்மணிகள் வரிசையில் வைத்துப் போற்றப்படுகின்றார்.

தன்னைக் கைப்பிடித்த கணவரின் தியான நிலையை நன்கு உணர்ந்து கொண்டவர் இவர். அன்னை காளியுடன் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமகம்சர் உரையாடும் பொழுது, பக்கத்தே இருந்து பயன் பெற்றவர் அன்னை சாரதாதேவி. கணவனாரின் தியான நிலையையும், அபாரபக்தியையும்தெரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவர் இவர். இல்லறத்தாருக்குப் பரமகம்சர் எடுத்தியம்பிய அறிவுரைகளை நல்லபடி வரவேற்று இல்லறத்தில் துறவறத்தை அனுபவித்தவர் இந்த அன்னை. ஒருவன், மனைவி மக்களுக்குக் கடமை செய்வது அவர்கள் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளும் நிலையை அடையும் வரையில் தான் என்பது இவருடைய கூற்று. சிறுகுஞ்சு தனக்குரிய இரையைக் கொத்தித் தின்னக் கற்றுக்கொள்ளும் வரையில்தான் தாய்ப்பறவையின் கடமையும் அமைகின்றது; இவ்வாறு கூறி அன்னை சாரதாதேவிக்கு ஞான உதயத்தை ஏற்படுத்தினார்.

இவற்றையெல்லாம் கேட்டும் அனுபவித்தும் வந்த அன்னை சாரதாதேவி தனக்கொரு தனியிடத்தைச் சமுதாயத்திலே ஏற்படுத்திக் கொண்டார். இதன் பயனாக இன்று உலகம் எங்கணும் சாரதா மன்றங்கள் பல்கிப் பெருகியுள்ளன. இலங்கையிலும் கொழும்பிலே, மட்டக்களப்பிலே, யாழ்ப்பாணத்திலே தேவியின் நாமத்தைக் கொண்ட மன்றங்கள் அரியபணி ஆற்றிவருவதை நாம் அறிகின்றோம். தற்காலப் பெண்மையின் பெருமைக்கு அன்னை சாரதாதேவியின் பங்களிப்பு முக்கிய இடத்தைப் பெறுதல் குறிப்பிடத்தக்கது.

தொண்டு உள்ளத்தோடு மற்றவரின் துயர் தீர்க்கும் பணியில் ஈடுபட்ட மாரியோ போகியோ என்ற அம்மையாரின் தன்னலங்கருதாப் பணியைக் கவனிப்போம். இத்தாலியில் உள்ள டியூரின் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தவர் இவர். வைத்திய நிபுணரான மாரியோ போகியோ புற்றுநோய்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் மூழ்கியிருந்தார். எக்ஸ்றே கதிர்களைச் செலுத்தினால், என்ன ஆகின்றது என்று முதலில் தமது உடம்பிலேயே செலுத்திப் பார்த்தார். இப்பரிசோதனை ஆரம்பத்தில் மிகக் கடுமையாக இருந்தது. இதனால் தனது இடக்கையில் ஒருவிரலை வெட்டி நீக்க வேண்டியதாயிற்று. ஆனால் அவரோ 'ஒன்றும் கெட்டுவிடவில்லை. நாலு விரல்கள் இருக்கிறதே போதும்' என்று சகசமாகச் சொன்னார். ஆனால் பரிசோதனையின் தாக்கத்தினால் இடக்கையை இழந்தார். பின்பு வலக்கையை இழந்தார். இந்த நிலையிலே நண்பர்கள் எல்லோரும் புத்திமதி கூறினார்கள். றேடியத்தின் அருகில் கூடப்போக வேண்டாம் என்பது அவர்களுடைய புத்திமதி. ஆனால் அம்மையார் என்னசொன்னார் தெரியுமா? "வாழ்க்கையை முழுக்க முழுக்கப் பிறருக்குப் பயனுள்ளதாக்குவதே தனது நோக்கம்" என்றார். இதன் பயனாக இன்று உலகம் முழுவதும் இலட்சோபலட்சம் மக்கள் (கான்சர்) புற்றுநோயிலிருந்து சுகமடைகிறார்கள். பிற்காலப் பெண்மையின் துணிவான, அதே நேரத்தில், பயனுள்ள போக்குக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

அடுத்து, அண்ணல் காந்தியடிகளின் வரலாற்றில் கஸ்தூரிபாய் என்ற மாதரசியின் வாயிலாகப் பெண்மை பெற்ற சிறப்பியல்புகளைக் கவனிப்போம். காந்தியடிகளின் வாக்கிலே "ஆணுக்கு இணையான - அறிவாற்றலுடைய துணையாக - விளங்குபவள் பெண். ஆடவனுடைய எல்லாச் செயல்களிலும் முழுமையாகப் பங்குபெறும் உரிமையுடையவள் பெண். ஆகவே, ஆடவனுக்குரிய உரிமையும் சலுகையும் பெண்ணுக்கும் உண்டு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியுள்ளார். காந்தியடிகளின் தாயார் புத்திலிபாய் தவஒழுக்கமுடையவர்; மாறாத மதப் பற்றும் கொண்டவர் என்று அடிகளே எடுத்துக் காட்டுகின்றார். விரதங்களை அனுட்டிப்பதும் இராஜ குடும்பத்துப் பெண்களோடு தொடர்பு வைப் பதும் அவருடைய இயல்பான நடைமுறைகளாகும்.

இங்கிலாந்துக்குக் காந்தியடிகள் செல்லப்புறப் பட்ட பொழுது, இவரின் அன்னை கூறியனுப்பிய மூன்று சத்தியங்கள் அனைவராலும் சிந்திக்கத்தக்கன. அதாவது மதுபானம் பாவிக்கக்கூடாது என்பதும் மாதரின் சிற்றின்ப சகவாசத்தை நீக்கவேண்டும் என்பதும் மாமிசம் புசிக்ககூடாது என்பதும் அடிகளிடம் அவரு டைய தாயார் கேட்டு நின்ற சத்தியங்களாகும். அந்தச்சத்தியத்தைப் பெற்றுக்கொண்டுதான் காந்தி யடிகளை இங்கிலாந்துக்கு அனுப்பினார் தாயார். அன்னையின் இந்த வழிகாட்டல்களே 'அண்ணல் காந்தி' என்றும் 'மகாத்மாகாந்தி' என்றும் பெருமை பெறுவதற்குக் காரணமாக அமைந்தவை.

தாயாரின் வழிகாட்டல் மாத்திரமல்ல; மனைவி கஸ்தூரிபாயின் தன்னலங் கருதாத் தொண்டு களைப் பற்றி இங்கு குறிப்பிடாமல் இருக்க முடி யாது. தென்னாபிரிக்காவிலே காந்தியடிகள் தங்கி யிருந்த காலத்தில், மனைவி கஸ்தூரிபாய் கடுமை யான நோய்வாய்ப்பட்டிருந்தார். அங்குள்ள வைத் திய கலாநிதிகள் எல்லோரும் மாட்டுமாமிசச் சூப் கொடுக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கி னர். இதையறிந்த அன்னை கஸ்தூரிபாய் சீறிச் சினந்தார். அவருடைய கூற்றை அப்படியே தருகி றோம். ''இவ்வுலகில் மானிடராய்ப் பிறப்பதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிது. இப்படியான பாதகங்களினால் இவ்வுடலை அசுத்தப்படுத்திக் கொள்வதை விட உங்கள் மடியிலேயே இறந்துவிட நான் தயாராக இருக்கிறேன்'' என்றார். அத்துடன் வைத்தியசாலையில் இருந்து தன்னை அழைத்துச் செல்லும் படியும் வேண்டினார். வைத்தியர்கள் பல ஆலோசனைகள் சொல்லித் தடுத்து நிறுத்தினர். ஆனால், அன்னை அதற்கு இசையவில்லை. உடனேயே கஸ்தூரிபாயை அழைத்துக் கொண்டு போய்விட்டார் காந்தியடிகள். தனக்கு ஒன்றும் நேர்ந்து விடாது என்று கணவனாருக்குப் பல இடங்களிலும் ஆறுதல் அளித்த பெண்மணி இவர். இதனால் சைவ உணவுக்கொள்கையில், கஸ்தூரிபாயின் தென்னாபிரிக்க அனுபவம் உயர்ந்து நின்றது.

கஸ்தூரிபாய் கல்வி அறிவில்லாதவராக இருந்த போதும், சமய ஞானமும், பண்பாட்டு உறைப்பும் அவருள்ளத்தில் வேரூன்றி இருந்தன. அவர் கடைப்பிடித்த கொள்கையைக் கடைசி வரையும் நிறைவேற்றினார். உள்ளத்தின் தூய்மையால், தேக நிலையும் சுகமடைந்து வந்தது. சோதனைகளின் மத்தியிலே சாதனை பலவற்றைப் புரிந்து, உலகம் போற்றும் உத்தமராக விளங்குகின்ற மகாத்மா காந்தி அடிகளுக்கு மனைவியாக வாய்த்த கஸ்தூரி பாயின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவின் இனவெறியாட்டத்திலும் சொந்த நாட்டில் நடந்த சத்தியாக்கிரகங்களிலும் சிறைவாசத்திலும் இவர் அனுபவித்த துன்ப துயரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவாது விடுதலை மூச்சாக வெளிப்படுத்தினார் காந்தியடிகள். இதில் கஸ்தூரிபாயின் பங்கும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, அண்ணல் காந்தியினால் பாராட்டப் பட்ட ஒரு குடும்பம், நேரு குடும்பமாகும். இக்குடும்பத்திலே வரலாற்று நாயகியாக அவதரித்தவர் இந்திராகாந்தி அவர்கள். தந்தையார் நேருவின் கடிதங்களினால் இவர் புடமிடப்பட்டவர். ஒரு கடிதத்தின் சுருக்கத்தைக் கவனிப்போம்: ''மகளே, வரலாறு படிப்பது நல்லது; ஆனால், வரலாறு படைப்பது அதனிலும் நல்லது'' என்பதாகும். இந்த அறிவுரையை உள்ளத்திலே ஏற்றிப் பதினாறு ஆண்டுகள் பிரதமராக இருந்து, வரலாறு படைத்தவர் இந்திராகாந்தி அவர்கள்.

ஒருநாட்டின் தலைவருக்கு இருக்க வேண்டிய நிதானம், தைரியம், விவேகம், வீரம் ஆகியவை அம்மையாரிடம் சிறப்பாக அமைந்திருந்தன. ஜனநாயகத்தின் காவலர் என்றும் சமதர்மத்தின் சேவகி என்றும் போற்றப்பட்டவர் இவர். இந்தியாவை முன்னணி வகிக்கும் ஒரு வல்லரசாகக் கொண்டு வருவதற்கு இவர் அயராது பாடுபட்டவர்; தன்னுடைய காலத்திலே பதினான்கு வங்கிகளைத் தேசியமயமாக்கி, ஏழைகளுக்கு உதவி புரிந்தவர். தன்னிறைவு காணும் தலைசிறந்த ஒரு விவசாயநாடாக இந்தியா மிளிர்வதற்கு வேண்டிய விவசாய அறிவினைத் தானும் பெற்று, நாட்டு மக்களையும் பெற வைத்தவர். மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, இந்திராநேரு என்ற முப்பெருந் தலைவர்களால் இந்தியா பெருமை பெற்றது. அண்ணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியடிகளின் ஆசியேஇவற்றுக்கெல்லாம்காரண மாய் அமைந்தது. ஒரிசா மாநிலத்தில் 30-10-1984ல் இந்திராகாந்தி அவர்கள் பேசிய உரை, எல்லோ ருடைய கவனத்தையும் ஈர்த்தது. அந்த உரையை அப்படியே தருகிறோம். '' நான்உயிர் இழக்க அஞ்ச வில்லை; என் உடலில் இருந்து சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும், இந்த நாட்டு மக்களின் முன்னேற் றத்துக்கு உதவுமாயின், மரணத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்'' அம்மையாருடைய உள்ளத்தி லிருந்து வெளிவந்த இவ் வார்த்தைகள் இன்று உண்மையாகி விட்டன.

இன்று அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா போன்ற வல்லரசுகளின் நிலைக்கு இந்தியா உயர்த் தப்பட்டு விட்டது என்றால், அன்னை இந்திரா காந்தியின் தியாகமே இதற்குக் காரணமாகும். இந்த இடத்தில் ஒரு சிறிய சம்பவத்தை நினைவு படுத்த வேண்டி இருக்கிறது.

விநோபாஜி அவர்களைச் சில மாணவர்கள் சந்திக்கச் சென்றனர். அவர்களிடம் சில காகிதத் துண்டங்களைக் கொடுத்து, பாரதத்தின் வரை படத்தை உருவாக்கும்படி விநோபாஜி கேட்டார். ஒரே ஒரு மாணவன் மாத்திரம் உடனே உருவாக்கிக் காட்டினான். காரணம் பாரதத்தின் வரைபடத்தின் மறுபக்கத்தில் மனித உருவம் வரைபடமாக இருந் தது குறிப்பிட்ட மாணவன் மனித உருவத்தைச் சரியாக்கினான். மறுபக்கத்தில் பாரத வரைபடம் சரியாகி விட்டது. பூதானத் தலைவர் விநோபாஜி அவர்கள் ஒரு உண்மையை எடுத்துக் கூறினார் நாட்டை உருவாக்க வேண்டுமானால், முதலில் ஆளைச் சரியாக்க வேண்டும். ஆள் சரியானால் நாடு சரியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும். இந்த உண்மை அரியதத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது அம்மகானின் செயல். எனவே, இந்திராகாந்தி அன்னையின் ஏற்றம்மிக்க எண்ணங் களையும் அவை நடைமுறைப்படுத்தப்பட்ட வகை களையும் ஒருவாறு நோக்கி, இக்காலப் பெண்மை யின் உயர்வையும் சிந்தனையில் இருத்துவோம்.

மனிதப் பிறவி என்பது ஒரு ஏணி. ஏணியிலே நிலைத்து நிற்பதல்ல, பிறவியின் நோக்கம். ஏறிப்போக வேண்டிய இடத்துக்குப் போகவேண்டும். இந்த உணர் வோடு வாழ்ந்த பெருமக்களை நாம் மீண்டும் மீண் டும் போற்ற வேண்டும்.

அன்னை திரேசா என்ற அம்மையாரைப் பற்றி இங்கு கவனிப்போம். நோபல் பரிசுபெற்ற பெருமைக்குரியவர் இவர். இளம்வயதிலேயே மத போதனைப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார். தனது தாயாரிடமும் சகோதரியிடமும் தனது இலட் சியத்தை எடுத்துக் கூறி அவர்களை விட்டுப் பிரிந் தார். அதாவது ''உலகத்துக்கே அரசனான இறைவ னிடம் ஈடுபட்டுத் தீவ்ர சேவகியாகப் போகின் றேன்'' என்பது அவருடைய விருப்பமாகும் 1937ஆம் ஆண்டு துறவறத்தை மேற்கொண்டு ''அன்னை திரேசா'' என்ற துறவறப் பெயரைத் தனதாக்கிக் கொண்டவர் இவர். செல்வக் குழந்தைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பதிலும் பார்க்க, சேரி களில் வாழும் ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி கற் பிப்பதே புனிதமான சேவை என்பதை உணர்ந்தார். இதற்கெல்லாம் செல்வந்தர்களான பல மாணவியரி டமிருந்து பணம் கிடைத்தது குழந்தைகளுக்குத் திறந்தவெளிப் பள்ளிக்கூடத்தை அமைத்து, உண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவும் உடுக்க உடையும் முதலில் வழங்கினார். வெளிநாட்டுச் சேவகி ஒருத்தி இவ்வாறு தூயபணி புரிவதைக் குடிசைவாசிகள் ஆச்சரியத்தோடு நோக்கினர். இவருடைய பணியை அனைவரும் ஆதரித்தனர். அம்மையாருக்குக் கௌரவிப்புகளும் இடம் பெற்றன.

கல்கத்தாவில் வசிக்கும் ஏழை மக்களின் குடும்பங்களை நேசிக்க வேண்டும் என்று தன்னைச் சார்ந்த அமைப்புக்களைக் கேட்டுக் கொண்டார். இவரை அன்பின் வடிவமான ஓர் அம்மையாக அனைவரும் நோக்கினர். பெண் பிறந்தாருக்கு அன்னையின் நோபல் பரிசு பற்றிய நிகழ்வு பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது. கருச்சிதைவை எதிர்த்தார். வேண்டாத குழந்தைகளைத் தன்னிடம் ஒப்படைக்கும்படி வேண்டினார். குழந்தைகள் அனைத்தும் இறைவனின் நன்கொடைகள் என்றார். இது அம்மையாருடைய சிறந்த சமூகப்பணிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இருபதாம் நூற்றாண்டில் அன்னை திரேசா அவர்களினால் பெண்பிறந்தார் எல்லோரும் பெருமை பெறுகின்றார்கள். ஏனென்றால் சமூகத்தில் வாழ்வதற்குத் தகுதி உடையவர்கள் தொண்டர்களே. இவர்களால் தான் சமய வாழ்வும் சமூக வாழ்வும் இணைகிறது. இவ்வகையில் கிறிஸ்தவ மதத் தொண்டர்கள் வழிகாட்டிகளாக உள்ளனர். தாம் சென்று தங்கும் நாடுகளில் எல்லாம் கல்விச் சேவை மருத்துவசேவை ஆகியவற்றை விரிவுபடுத்திப் பணிபுரிவதால் பாமரமக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விடுகின்றனர். ஏழைகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், திக்கற்றவர்களுக்கும், செயலற்ற முதியோர்களுக்கும் விடுதிகளை அமைத்து மருத்துவ வசதி மற்றும் உணவு, உடை வழங்கிப் போசிக்கின்றனர்.

இராமாபாய் என்ற பாரதநாட்டுப் பெண்மணி ஆதரவற்ற பெண்களுக்கான விடுதிகளை அமைத்துச் சீரிய தொண்டுகள் செய்து உலகநாடுகளெங்கணும் சுற்றித்திரிந்து நன்கொடைகளைச்சேர்த்துச் சமூகசேவகியாக விளங்கினார்.

"பிறருக்கு நீ எதனை எடுத்துவழங்குகிறாயோ, அதுவே உனக்குச் சொந்தமாகிறது. பிறருக்கு நன்மை செய்வாயானால், அது உனக்கே சொந்தமாகிறது" என்று அருளுகிறார் சுவாமி விவேகானந்தர்.

எங்கள் ஈழத்திருநாட்டை நோக்கினால் இருபதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் கல்விப்பணியும், சிவப்பணியும், பெண்களின் பண்பாட்டுப் பணியும் ஓங்குவதற்கு அரும்பணி ஆற்றிவந்த லீலாவதிச் சீமாட்டி அவர்களை நாம் கருத்தில்கொள்ள வேண்டும். இவருடைய பெருமையைநோக்கி ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதத்திலே நினைவுச் சொற்பொழிவு யாழ் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்து வருவதுகுறிப்பிடத்தக்கது. இராமநாதவள்ளலின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்து, அன்னாரின் சீரிய கொள்கைகளை எமது மண்ணில் பரப்பி நின்றவர் இவர். பெண்களின் நடை, உடை, பண்பாடு, சைவப் பற்று ஆகியவற்றுக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர் அம்மையார். இராமநாதன் மகளிர் கல்லூரியின் முகாமையாளராக இருந்து, கல்லூரியை முன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக்குக் கொண்டு வந்தவர் இவர். இராமநாதன் கல்லூரி, இராமநாதன் தமிழ்ப் பாடசாலை, ஆசிரியர் கலாசாலை, ஆதரவற்றவர்கள் இல்லம் ஆகியவற்றைத் தனது முகாமையின் கீழ் நல்லபடி நிர்வகித்தவர் இவர். இராமாயண காவியத்தை ஆங்கிலமொழியில் எழுதி வெளியிட்ட பெருமையும் இவரைச் சார்ந்தது. சைவத்தமிழ்ப் பண்பாட்டோடு வாழக்கூடிய பயிற்சியை இளம்பெண்களுக்கு அளித்து அவர்களுக்கான விடுதியையும் அமைத்து ஆலய வழிபாடு, பண்ணிசை, சங்கீதம், நடனம், தையல் ஆகியவற்றிலும் நல்ல பயிற்சிகள் வழங்கப்பட்டன. அம்மையாரின் தெய்வ பக்தியினாலும், கடமை நோக்கினாலும், கல்வித்துறையிலும் சைவத்துறையிலும் யாழ்ப்பாணச் சைவத்தமிழ்ப் பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டதை எவராலும் மறுப்பதற்கில்லை.

மேலும் யாழ் குடாநாட்டிலும், கொழும்பிலும், கிழக்கு மாகாணத்திலும் இந்த நூற்றாண்டிலே பெருமை பெற்ற பெண் பிறந்தார்கள் பலர் உளர். ஆசிரியர்களாக, வைத்தியர்களாக, ஆன்மீகநோக்குடையவர்களாக இவர்கள் உயர்ந்து நின்றதை எம்மால் பரக்கக் காண முடிகின்றது.

ஒரே ஒரு இடத்தை மாத்திரம் காட்டி நிற்கையில், சுன்னாகம் செல்லாச்சி அம்மையாருடைய பெருமை உள்ளத்தைத் தொடுகிறது. கொழும்புத்துறை யோகசுவாமிகளின் சீடராக இருந்து, ஆதரவற்றவர்களுக்கு அன்னமிட்டும் இன்மொழி பகர்ந்தும் ஏற்றம் பெற்றவர் இவர். பொதுவாக நோக்கின், மனித குலத்தின் வேராக விளங்குபவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள். மரத்தின் கொப்பும் தளிரும் இலையும் காய்ந்து விட்டால், மரம் சரிந்து விடாது. ஆனால் வேரிலே புழுப்பிடித்தால், மரத்துக்கு ஆபத்து ஏற் படும். உலகியல் வழக்கத்திலும் ஒரு ஆடவன் ஒழுக்க நிலையில் கெட்டுவிட்டால் பெரிதும் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் பெண் ஒருத்தி கெடு வாளேயானால் குடும்பமே சீர்கெட்டுப் போகும். மொத்தத்தில் தனக்கும் தன்னைச் சார்ந்த சமூகத் துக்கும் காவல் அரணாக இருக்க வேண்டியவர்கள் பெண்களே. பெண்கள் சீலம் மிக்கவர்களாக விளங்குவதற்கு நிமிர்ந்த நன்னடை, உயர்ந்த நன் னடத்தை, மெய்யியல் விஞ்ஞானவியல் ஆகியவற் றில் தெளிந்த அறிவு, சமூகத்துக்குக் கைகொடுத் துதவும் தூய அன்பு என்பன வேண்டற்பாலன ஆகும்.

1975ஆம் ஆண்டை மகளிர் ஆண்டாக வைத்துப் பெண்களின் உரிமைகளைப் பேச்சிலும் எழுத்திலும் பரப்ப வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்தது. இது வரவேற்கத்தக்க ஒரு நிகழ்வா கும். நம்நாடு சுதந்திரம் பெற்றபின் மகளிர் சமு தாயமும் கணிசமான அளவு முன்னேறி உள்ளது. அதே நேரத்தில், இந்த முன்னேற்றத்தினால் சமூ கத்தில் பல இழிநிலைகளும் தோன்றுவதற்கு வழி ஏற்பட்டுள்ளன. சமூகத்தைப் பேணுபவள் பெண் என்ற நிலைமாறி, அதிகார தோரணையில் கணவ னும் பிள்ளைகளும் வஞ்சிக்கப்படும் இடங்களும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான பிழை எங்கேயிருக்கிறது என்று ஆராயவேண்டும். பெண்கள் கடமையைச்செய்து உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நமக்குரிய பெண்மை, மென்மை ஆகியவற்றை உயிராக மதிக்க வேண்டும். மேல்நாட்டுப் பாணியில் வாழப் பழகிக்கொள்ளாமல், எமது நாட்டுப் பண்பாட்டை நேசித்து வாழவேண்டும். விவாகம் செய்வதில் வரதட்சணை என்ற கொடுமையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஆண்களைப் பகைத்துப் பதவி பெறுவதோ அதிகாரம் நடத்துவதோ இருக்கக்கூடாது. எவை எப்படி இருந்தாலும், ஆண்களோடு இணைந்து ஒருவரை ஒருவர் மதித்து நடக்கப் பழகிக் கொள்ள வேண்டும். அடக்கம், பொறுமை, தியாகம், குழந்தை வளர்ப்பு என்பவற்றில் பெண்கள் தன்னிகரற்று விளங்க வேண்டும். எனவே பெண்மையும் ஆண்மையும் இணைந்து ஒருவரை ஒருவர் மதிப்பவராக வாழ்ந்தால் தான் வீடும் நாடும் உயர்வடையும் என்றுகூறி அமைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Published By:*
**Dr. Sivathamil Selvi Miss Thangammah Appacuddy - J.P.**
**Birthday Trust Fund**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org